


# விசுவாச பதில்கள்

ஞானஸ்நானம்
ஓய்வுநாள்
யெகோவாவின் சாட்சிகள்

அந்நிய பாஷை
சுகமளிக்கும் வரம்
பேராயர் ஆளுகை

செ.சுஜித்



# விசுவாச பதில்கள்

ஞானஸ்நானம் அந்நிய பாஷை
ஓய்வுநாள் சுகமளிக்கும் வரம்
யெகோவாவின் சாட்சிகள் பேராயர் ஆளுகை

செ. சுஜித்

வெளியீடு

கிறிஸ்தவ வரலாற்று சங்கம்

# முகவுரை

இந்த சிறு புத்தகம் கிறிஸ்து சபையின் வேத உபதேசங்களை முழுவதுமாக வெளிப்படுத்தும் பொருட்டு எழுதப்பட்டதல்ல. இதில் எழுதப்பட்டிருக்கும் தலைப்புகளில் எல்லா அம்சங்களைப்பற்றியும் இப்படி ஒரு சிறு புத்தக வடிவில் கொடுப்பது என்பது கூடாததொன்றாகும். ஆனாலும் இதிலே கூறப்பட்டுள்ள ஞானஸ்நானம், கிறிஸ்தவ ஓய்வு நாள், பிறமொழி பேசுதல் முதலியவைகளைப் பற்றிய நம் திருச்சபை உபதேசங்கள், நம் வேத புத்தகத்தை அனுசரித்தே அமைந்தது என்பதை எடுத்துக்காட்டுவதே இதன் நோக்கமாகும்.

வேத அறிவை ஆழமாக அறியாத நம் திருச்சபை மக்கள், குழந்தை ஞானஸ்நானம் சரியா, வயது வந்தவுடன் எடுக்கும் ஞானஸ்நானம் சரியா, தெளித்தோ அல்லது மூழ்கியோ ஞானஸ் நானம் எடுப்பது சரியா என்று முழுதுமாக அறிந்து கொள்ளாமல் தடுமாறுகிறார்கள். யெகோவா சாட்சிகள், ஏழாம் நாள் அத்வெந்து மிஷன்காரர் இவர்களு டைய உபதேசங்கள், புதிய ஏற்பாட்டில் தெளிவாய்க்கூறப்பட்டுள்ள தேவ சத்தியங்களுக்கு எதிரானது என்று நிரூபிக்க பலரால் முடியவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு இங்கே கூறியுள்ள சத்தியங்களைக் குறித்து பெரும்பாலும் அறிந்து கொள்வதற்கும், தவறான உபதேசங்களுடைய வலையில் அகப்பட்டு அலைக்கழிக்கப்படாமல் திருச்சபையில் ஊன்றி நின்று உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை நடத்துவதற்கும் இந்த புத்தகம் பயனுள்ளதாக இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இந்த புத்தகம் ஒம்மன் எழுதிய தடுமாற்றத்திற்கு தக்க விடை எனும் புத்தகத்தை தழுவி எழுதியதே. தற்காலத்திற்கேற்ப சில புதிய காரியங்களையும் சொடுகியுள்ளேன்.

இதை வெளியிடும் கிறிஸ்தவ வரலாற்று சங்கத்துக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

# IV

**Dedicated to**

**My Beloved Nephew**

**Dheeran Maverick**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஞானஸ்நானம் | 1 |
| ஓய்வுநாள் | 30 |
| யெகோவாவின் சாட்சிகள் | 43 |
| அந்நிய பாஷை | 52 |
| சுகமளிக்கும் வரம் | 69 |
| பேராயர் ஆளுகை | 82 |

1

அத்தியாயம் ஒன்று

# ஞானஸ்நானம்

*பரி. மாற்கு 16:16*

*"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."*

இந்த வாக்கியங்களிலே கிறிஸ்தவ மார்க்கத்தின் ரட்சிப்பின் நிபந்தனைகளும் சிட்சையின் நிபந்தனையும் அடங்கி இருக்கிறது. ரட்சிப்பின் நிபந்தனைகளிலே விசுவாசம் ஞானஸ்நானம் என்ற இரு காரியங்கள் உட்பட்டிருக்கிறது. சிட்சையின் நிபந்தனையில் விசுவாசிக்காதது மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. ஞானஸ்நானம் எடுக்கவில்லை என்ற காரணத்தால் ஒருவன் தண்டனைக்கு உட்படமாட்டான் என்று நம்முடைய அருமைநாதர் யேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகளை நாம் மனதில் வைப்போமானால் ஞானஸ் நானத்தைக் குறித்து தர்க்கங்கள் குறையும். ஞானஸ்நானத்தைக் குறித்து திருச்சபையின் தேசம், ஞானஸ்நானத்தின் அவசியம் இவைகளைப்பற்றி பின்னால் விவரிப்போம்.

இரட்சணிய சேனையின் ஸ்தாபகரான ஜெனரல் பூத்தை இதர கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தைக் குறித்துள்ள அவரது உபதேசத்தின் காரணமாக அவரைக் குற்றப்படுத்தினார்கள். அவர்களுக்கு நிச்சயமாய் மோட்சம் கிட்டாது என்று வாதித்தார்கள். இருந்தபோதிலும் ஜெனரல் பூத் முதலில் நாம் குறிப்பிட்டுள்ள அந்த மூல வாக்கியத்தின் பொருளை மற்றவர்கள் நன்கு உணர்ந்திருந்தபடியே கேட்டார் என்றே நாம் அறிய வேண்டும்.

ஞானஸ்நானம் எடுக்காமலிருந்தால் அந்த ஒரே ஒரு காரணத்திற்காக அவர்கள் நரகத்திற்கு போவார்கள் என்று சொல்வது யேசு கிறிஸ்துவின் மூல உபதேசத்திற்கு எதிரானதாகும் என்று அவர் போதித்தார்.

இந்த மூல வாக்கியத்தின் இரண்டாம் பாகமான "விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்பதின் பொருளை எல்லா

கிறிஸ்தவர்களும் சரிவர அறிவார்களானால், தாங்கள் விசுவாசிக்காமல் பெற்ற ஞானஸ்நானத்தினால் ஒரு வேளை ரட்சிக்கப்படமாட்டார்கள் என்று மட்டுமல்ல ஆக்கினைக்குள் தீர்க்கப்படுவார்கள் என்று நினைப்பதற்கும் காரணமில்லை.

யேசு கிறிஸ்து ஞானஸ்நானத்தைக் குறித்து பேசிய சந்தர்ப்பங்கள் மூன்று மட்டுமே உள்ளன. மற்ற சந்தர்ப்பங்களில் வேறு அர்த்தங்களில் கூறியுள்ளார். முதலாவது நிக்கோதேமுவுடன் மறு பிறப்பைப்பற்றி பேசினபோது "*ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்*". யோவான் 3:5 இரண்டாவது, ஞானஸ்நானத்தின் முறைமையைப் பற்றி பரி. மத்தேயு 28ம் அதி 19.20 வாக்கியங்களில் கூறியதாகும்.

மூன்றாவது, பரி. மார்க்கு 16:16 நாம் காட்டிய மூல வாக்கியமாகும்.

இவ்விடத்தில் "*விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ் நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான்*" என்று கூறியபோதிலும் எந்த காரணத்தினாலும் ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைக்குள் தீர்க்கப்படுவதில்லை என்று தெளிவாகக் கூறப்படுகிறது. விசுவாசம் ஞானஸ்நானத்திற்கும், ஞானஸ்நானம் ரட்சிப்பிற்கும் அத்தியாவசியமானால் குழந்தைகளுக்கு விசுவாசிக்க முடியாததால் அவர்களுக்கு ரட்சிப்பில்லை என்று கூறுவது போல இருக்கிறது.

ஆதிதிருச்சபையில் ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று ஒரு தேசம் இருந்தது (2 தெச. 3:10)

ஆகவே சிறுவர்கள் வேலை செய்ய முடியாததால் அவர்கள் சாப்பிடக்கூடாது என்று சொன்னால் பெற்றோர் யாராவது சம்மதிப்பார்களா? யேசு கிறிஸ்து ஒருவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை (யோவான் 4:3) தம்முடைய 12 சீஷர்களும், நிக்கோதேமும், அரிமெத்தியா ஊரானாகிய யோசேப்பும் சமாரிய ஸ்திரியும் ஞானஸ்நானம் எடுத்ததாய் வேதப் புத்தகத்திலே கூறப்படவில்லை.

அப்பொல்லோவோ, யோவான் கொடுத்த ஞானஸ் நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்தும் அவன் ஆவியில்

அனலுள்ளவனாயிருந்தான். இயேசுவே கிறிஸ்து என்று விசுவசித்து வெளியரங்கமாக யூதர்களுடனே தர்க்கம் பண்ணி வேத வாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினான் என்று நாம் பார்க்கிறோம். (அப். 18: 24!28) கொரிந்து சபையிலே அவன் ஒரு முக்கியமானவனாயிருந்தான் என்று பார்க்கிறோம். தாங்கள் அப்பொல்லோவைச் சார்ந்தவர்கள் என்று கொரிந்து சபையிலே ஒரு கூட்டம் அவனைத் தொடர்ந்து போகும் அளவில் அவன் ஒரு முக்கிய பிரசங்கியாயிருந்தார் என்ற போதிலும் அவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் எடுக்கவில்லை. ஞானஸ்நானத்தைக் குறித்து பரி. பவுலின் அபிப்பிராயத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். 1கொரி 1:17 "*ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்கவே அனுப்பினார்*" என்றார்.

இவ்வளவையும் நாம் எடுத்துக் காட்டுவது ஸ்நானத்தைக் குறித்துள்ள அந்தச் சூட்டை சிறிது தணிப்பதற்காகத்தான்.

பொதுவாகக் கூறினால் கிறிஸ்து சபையில் ஏற்பட்டுள்ள பெரும் பிளவுகளுக்கு முதற்காரணமாயிருந்தது இந்த ஞானஸ்நானம் என்ற ஒரே காரியம்தான். சிசு ஞானஸ்நானம், பருவம் வந்தவர்கள் ஞானஸ்நானம் என்னும் காரியங்கள் மிகவும் விவாதிக்கப்படும் காரியங்கள்.

பருவம் வந்தவர்கள் ஞானஸ்நானத்தில் அதை எடுக்கும் சடங்குகளிலே அவர்களிடையே அதிக விவாதம் உண்டு. அவர்களை கவிழ்த்து முழுக்குவதோ அல்லது நிமிர்த்தி முழுக்குவதோ, ஒரு முறை முழுக்குவதோ அல்லது மூன்று முறை முழுக்குவதோ என்பதும் விவாதிக்கும் காரியமாகப் போய்விட்டது.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினாலேயே ஞானஸ்நானம் கொடுப்பதோ அல்லது யேசுவின் நாமத்தினால் மட்டும் ஞானஸ் நானம் கொடுப்பது என்பதும் இந்த சமீப காலத்தில் கவனிக்க வேண்டிய விஷயங்களாக உண்டாகி இருக்கிறது.

முழுக்கு ஞானஸ்நானம் பெரும் சடங்குகளைப்பற்றி நாம் ஒன்றும் கூற வேண்டிய அவசியம் இல்லை; ஆனால் யேசுவின் நாமத்தினாலே மட்டும் ஞானஸ்நானம் கொடுப்பதைப்பற்றி சில

விஷயங்களைக் கவனிப்பது அவசியமாகும்.

இவர்கள் உபதேசிப்பது கர்த்தரின் கற்பனைகளுக்கு விரோதமானது என்று நாம் காணலாம். ஞானஸ் நான சடங்குகளைப்பற்றி நம் ரட்சகர் ஒரு முறை மட்டும் தான் கூறியிருக்கிறார். அது பரி. மத்தேயுவின் கடைசி பாகத்திலே கூறப்பட்டுள்ள தொன்றாகும். ஞானஸ்நானம் திரியேக தெய்வத்தின் நாமத்தினாலே மாத்திரம்தான் கொடுக்க வேண்டும் என்பது யேசுவின் கற்பனை. பரி. பேதுரு, அப்போஸ்தல நடபடிகளிலே 2:38 கூறிய வார்த்தைகளை ஆதாரமாகக் கொண்டு தான் இவர்கள் இப்படி நடத்துகிறார்கள் போல தோன்றுகிறது.

பிதாவாகிய தேவனிடத்திலும், தீர்க்கதரிசிகள் மூலம் உரைத்தவருமாகிய பரிசுத்த ஆவியிலும் விசுவாசித்து வந்த யூதர்கள் யேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுத்தபோது, திரியேக தெய்வமாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் திரித்துவத்தின் விசுவாசியானார்கள். புற ஜாதிக்காரர்கள் இந்த நிலையில் இல்லை. கிறிஸ்துவை தள்ளினவர்கள், கிறிஸ் துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுக்கும்படி தேவன் அவரில் அற்புதத்தை நடத்தினார். இதை ஆதாரமாகக் கொண்டு யேசு கிறிஸ் து, தன் சபைக்கு கொடுத்த கற்பனையை மீறுவதற்கு ஒருவருக்கும் அதிகாரமில்லை. கிறிஸ்துவின் தெளிவான, திட்டவட்டமான கற்பனைகள் இருக்கும் காரியங்களில் நாம் பழக்க வழக்கங்களை உட்புகுத்தக்கூடாது. யேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தை மாதிரியாக எடுத்துக் கொண்டு 30ம் வயதில் மட்டும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்று ஒரு கூட்டம் உபதேசிக்கிறார்கள்.

இவர்கள் யேசு கிறிஸ்து எடுத்துக் கொண்ட விருத்தசேதனத்தைக்கூட செய்து கொள்ள வேண்டுமென்று கூறாமற் போனது விசேஷமே!

மேற்கூறிய கூட்டத்தார் அனைவரும் வேத வாக்கியத்தின் சிலவற்றைத் தங்களுக்கு ஆதாரமாகக் கொண்டும் அல்லது சில வாக்கியங்களின் வியாக்கியானத்தை தங்களுக்கு ஏற்ப திரித்து அமைத்துக் கொண்டுமே உபதேசிக்கிறார்கள். முழுக்கு ஞானஸ்தானத்தைப்பற்றி தர்க்கிப்பது என்பது என்னுடைய

நோக்கமல்ல. நம்முடைய திருச்சபையிலே நாம் ஞானஸ்நானத்தைப்பற்றி கைக்கொண்டிருக்கும் உபதேசங்கள் யாவும் வேத வாக்கியங்களுக்கு ஏற்றபடி அமைந்திருக்கிறது என்று எடுத்துக் காட்டுவதே என் எண்ணமாகும். இன்னும் தெளிவுறக் கூற வேண்டுமானால் நம் திருச்சபை அங்கீகரித்துள்ள இந்த குழந்தை ஸ்நானம் வேத புத்தக உபதேசங்களுக்கு ஏற்ப அமைந்திருக்கிறதா என்று கண்டுபிடிப்பதே ஆகும். நம்முடைய திருச்சபை பருவம் வந்தவர்களின் ஞானஸ்நானத்தை அங்கீகரிக்கும் சபையுமாகும்.

Dr. Light foot முதலான சரித்திர ஆசிரியர்கள் கிறிஸ்தவ விசுவாசிகள் குழந்தைகளை சிறு பிராயத்தில் ஞானஸ்நானத்தின் மூலமாக சபையிலே சேர்க்கும் வழக்கம் முதலாம் நூற்றாண்டு முதல் இருந்து வந்தது என்று கூறுகிறார்கள்.

கி பி. 51ல் எருசலேமில் கூடிய கிறிஸ்தவ சங்கம், குழந்தைகளை ஞானஸ்நானத்தின் மூலமாக சபையிலே சேர்ப்பதை அங்கீகரித்தது என்பதை அப்போஸ்தல நடபடிகளிலே 15ம் அதிகாரத்தில் கூறிய காரியங்களைக் கவனத்தோடும் குறிப்பாயும் வாசித்தால் அறிந்து கொள்ளலாம்.

புற ஜாதிக்காரர்கள் கிறிஸ்து சபையில் சேரும் போது மோசேயினுடைய முறமைகளின்படியே விருத்த சேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்று உபதேசம் பண்ணினார்கள் (அப் 15:1) பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து அவர்களை விருத்தசேதனம் பண்ணுகிறதும், மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள். (அப்.15:5) பரிசுத்த பலும், பர்னபாவும் இப்படி உபதேசித்தவர்களுடன் தர்க்கித்தார்கள். யூதர்களையும், புற ஜாதியினரையும் ஒன்றாக ஏற்றுக்கொண்ட ஒரு சபையில் இது ஒரு முக்கிய விஷயமானதால் பரி. பவுலும் பர்னபாவும் வேறு சிலரும் எருசேலமிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பர்களிடத்துக்கும் போக வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அந்த இடத்திலே இந்த காரியத்தைக் குறித்து ஒரு தீர்மானம் எடுக்கவேண்டி ஆலோசனை பண்ணும்படி கூறினார்கள். பெரிய தர்க்கம் உண்டாயிற்று.

பரி. பவுலும், பர்னபாவும்,பேதுருவும் பிரசிங்கித்தார்கள். சில பரிசேய கிறிஸ்துவர்களும் விவாதித்தார்கள். யேசுவின் சகோதரனாகிய யாக்கோபு அதற்கு தலைமை வகித்தார். தர்க்கத்தின் முக்கியமான காரியம் பரிசேய கிறிஸ்தவர்கள் சொல்லுவது போல புற ஜாதியிலிருந்து வந்த குடும்பங்களைக் கிறிஸ்து சபையில் சேர்க்கும்பொழுது விருத்தசேதனமும் கூட அவசியமா என்பதே. யூத கிறிஸ்தவர்கள் புற ஜாதிக்காரர்கள் அவர்களுடைய குழந்தைகளுடனே சபையில் சேர்ப்பதற்கு ஒருவித எதிர்ப்பும் உள்ளவர்கள் அல்ல. பருவம் வந்தவர்களானாலும்குழந்தைகளானாலும்விருத்தசேதனமில்லாமல் சபையில் சேர்க்கக்கூடாது என்பதே பரிசேய கிறிஸ்தவர்களின் தர்க்கம். யூதனுக்கு விருத்தசேதனம் என்றால், எட்டு நாள் பிறந்த குழந்தை முதற்கொண்டு மற்ற அனைவரும் சேர்த்துதான் என்று நினைக்க முடியும். பரி. பேதுரு சபையில் சேர நமக்கும் அவருக்கும் (யூதருக்கும் புற ஜாதியினருக்கும்) யாதொரு வித்தியாசமும் இல்லையென்று கூறினார். பெந்தகோஸ்து நாளிலே பரி. பேதுரு யூதர்களுக்குக் கூறியதுபோல வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவளைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் (புற ஜாதியினருக்கும்) உண்டாயிருக்கிறது போல புற ஜாதிகளுடைய பிள்ளைகளையும் சபையில் சேர்க்கலாம் என்றார் (அப்.2:39)

யூத கிறிஸ்துவர்கள் விருத்தசேதனத்தோடு சபையில் சேர்க்க அனுமதித்த புறஜாதிக்குடும்பங்களை, விருத்தசேதனமில்லாமல் சேர்ப்பதற்கு முதலாவது எருசேலம் கிறிஸ்தவ மாநாடு தீர்மானித்தது. கிறிஸ்தவ மாநாட்டின் தலைவனான யாக்கோபும், அப்போஸ்தலரும் மூப்பனாரும் இதை மற்ற எல்லாச் சபைகளுக்கும் தெரிவித்தார்கள். அப்படியே கி. பி. 51 முதல் குடும்பமாய் சபையில் சேர்ந்த புற ஜாதி பிள்ளைகளை விருத்தசேதனமில்லாமல் ஞானஸ்நானம் கொடுத்து சபையில் சேர்க்க அப்போஸ்தலர் கௌன்சில் சம்மதித்தது என்று தெளிவாய்க் காணலாம்.

எருசேலம் மாநாட்டிற்கு 9 வருடங்கள் கழித்த பின்பு பரி. பவுலை பரி. யாக்கோபு எருசலேமிலே கண்டார். (கி.பி.60) அவர்கள்

உரையாடல் எப்படி இருந்தது என்று அப். 21: 20,24 நாம் காண்கிறோம்.

20. *பின்பு அவர்கள் அவனை நோக்கி: சகோதரனே, யூதர்களுக்குள் அநேகமாயிரம்பேர் விசுவாசிகளாயிருக்கிறதைப் பார்க்கிறீரே. அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.*

*21. புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லையென்று நீர் சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை விட்டுப் பிரிந்துபோகும்படி போதிக்கிறீரென்று இவர்கள் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.*

*22. இப்பொழுது செய்யவேண்டியது என்ன? நீர் வந்திருக்கிறீரென்று இவர்கள் கேள்விப்பட்டு, நிச்சயமாகக் கூட்டங்கூடுவார்கள்.*

*23. ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்; அதென்னவென்றால், பிரார்த்தனை பண்ணிக்கொண்டவர்களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள்.*

*24. அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்துகொண்டு, அவர்கள் தலைச் சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவு செய்யும்; அப்படிச் செய்தால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும் எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.*

பரி. பவுல் யூதர்கள் தங்களோடு தங்கள் குழந்தைகளை கூட சபையில் சேர்த்துக் கொள்வதற்கு எதிரானவரல்ல. ஆனால் நியாயப்பிரமாணத்தில் வைராக்கியமுள்ள யூத கிறிஸ்தவர்கள் தங்கள் குழந்தைகளைச் சபையில் சேர்க்கும் பொழுது விருத்தசேதனம்கூட நடத்தி வந்தது அவசியமில்லை என்று பரி பவுல் உபதேசித்தார். இந்த பாகத்தில் நாம் தெளிவாய் மனதில் அறிய வேண்டியது: யூத கிறிஸ்தவர்கள் தங்கள் குழந்தைகளை விருத்தசேதனம்கூட செய்வித்து சபையில் சேர்த்துக் கொண்டார்கள். பரி பவுல் அந்த ஏற்பாட்டை எதிர்த்தார். ஆனால் பரி யாக்கோபுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு அவரும் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்று எல்லோரும் அறியும்படி செய்தார். இந்த சம்பவத்திற்கு பின்பு பரி பவுல் தன் முன் நடவடிக்கைகளிலிருந்து

 சிறிது வித்தியாசமாகக் காண்ப்பட்டார். (1 கொரி 7:18!19)

தாய் யூத ஸ்திரியாயிருந்தும், தகப்பன் கிரேக்கனாக இருந்ததனால் தீமோத்தேயுவை பரி பவுலே விருத்த சேதனம் பண்ணுவித்தார் என்று நாம் காண்கிறோம். அப். 16:3

எருசேலம் மாநாட்டு தீர்மானத்தின்படி புறசாதிக்காரரை விருத்தசேதனம் பண்ண அவசியமில்லை. இருந்தாலும் யூத ஜாதியில் பிறந்தவர் தானாகப் பயந்து புற ஜாதிக்காரனாகிய தீமோத்தேயுவை விருத்த சேதனம் பண்ணினார்.

யூத கிறிஸ்தவர்களும், மோசேயின் நியாயப்பிரமாணத்தை மாற்ற பயமுள்ளவர்களாயிருந்தார்கள். பரி யாக்கோபுவின் உபதேசத்தை கேட்டதின் பின் பரி. பவுல் போதித்து கீழ்வருமாறு. 1 கொரி 7:18,19 *ஒருவன் விருத்தசேதனம் பெற்றவனாய் அழைக்கப்பட்டிருந்தால். விருத்தசேதனமில்லாதவனாயிருக்க வகைதேடானாக; ஒருவன் விருத்தசேதனமில்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால், விருத்தசேதனம் பெறாதிருப்பானாக. விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்.* அதாவது விருத்தசேதனத்துடன் அழைக்கப்பட்ட யூத கிறிஸ் தவர்கள், புறஜாதி கிறிஸ்தவர்களிடத்தினின்று அந்தக் காரியத்தில் வித்தியாசப்பட்டிருப்பதில் தவறொன்றுமில்லை என்று போதித்தார்.
ஆயிரமாயிரம் நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கியமுள்ள யூதர்களை கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்தவேண்டி கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்திற்கு ஒரு பங்கமும் வராமல், யூத ஆசாரத்தை அவர்கள் தொடர்வதற்கு அவர் எதிர்த்து நிற்கவில்லை.

ரோமர் 14 அதிகாரமும், 1 கொரி. 9: 19,23ல் உள்ள வாக்கியங்கள் இந்த அபிப்பிராயங்களைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. ஆனால் புற ஜாதிகளிடையே விசுவாசித்து சபையிலே சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் விருத்தசேதனம் அவசியமில்லை என்ற முதலாவது மாநாட்டின் தீர்மானம் பாதகமாயிருந்தது. கலாத்திய நிருபத்திலே பரி. பவுல் இதைத் தெளிவாக்கியிருக்கிறார்.

எருசேலம் அழிந்த அநேக வருடங்களுக்கு பின்பு அநேக ராஜ்யங்களில் சிதறிச் சென்ற யூத கிருஸ்தவர்கள் நாளடைவில்

தங்கள் பழக்கங்களைக் கைவிட வேண்டியதாயிருந்தது. அதற்கு பின்புதான் அவர்கள் தங்கள் பிள்ளைகளை விருத்தசேதனமில்லாமல் ஞானஸ்நானம் மட்டும் கொடுத்தால் போதுமானது என்று சம்மதித்தார்கள். அதற்கு முன்பு யூத கிருஸ் தவர்கள் தங்கள் பிள்ளைகளை விருத்தசேதனம் செய்தும் அதே சமயம் ஞானஸ்நானத்தையும் கொடுத்து வந்த பழக்கம் அநேக வருடங்கள் இருந்து வந்தது.

இரண்டாம் நூற்றாண்டில் குழந்தை ஞானஸ்நானம் கொடுத்து வந்தாக சரியான குறிப்புகள் இருக்கின்றன. அப்போஸ் தலருடைய உபதேசங்களை நேரில் கேட்டவர்கள் இரண்டாம் நூ ற்றாண்டின் முதல் பாகத்திலே வாழ்ந்து வந்தார்கள். இது அப்போஸ் தலருடைய உபதேசத்திற்கு எதிராக இருந்திருந்தால் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்கமாட்டார்கள். யூத சபையிலே அங்கங்களாயிருந்த யூதர், கிறிஸ்தவ ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ சபையில் சேர்ந்த போது அவர்களுடைய பிள்ளைகளையும் ஞானஸ்நானத்திற்கு உட்படுத்தி சபையில் சேர்க்க வேணடுமென்று எண்ணி ஆசைப்பட்டார்கள். நியாயபிரமாணத்தைக் காட்டிலும் எல்லாவிதத்திலும் விசாலமான, மேலானதுமான சுவிசேஷ உபதேசங்களுக்கு அது எவ்வளவு பொருத்தமானது. அப் 15:22,23ல் விருத்தசேதனத்தைப் பற்றி ஆதித்திருச்சபையில் எழுந்த விவாதத்தில் அது அவசியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. அத் தீர்மானம் எல்லா திருச்சபைகளுக்கும் எழுதி அனுப்பப்பட்டது.

சில ஆண்டுகட்குப் பிறகு எருசேலம் சங்கத்திற்குத் தலைமை வகித்த பரி. யாக்கோபும், அவரோடிருந்த மூப்பர்களும்கூடி விருத்தசேதனத்தையும், நியாயப்பிரமாண வழக்கங்களையும் யூத சமயத்தின்படி கைக்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள் என்று காண்கிறோம் (அப். 21: 17!26) பரி. பவுலும் இதற்கு இணங்கி, முறைமைகளின்படியும் நடந்து கொண்டார். இவ்வாறு எருசலேம் சங்கத்தாரால் வேண்டாம் என்று சொல்லப்பட்ட விருத்தசேதனத்தைத் தங்களுடைய குழந்தைகளுக்கு வேண்டும் என்று கூறும் யூதக் கிறிஸ்துவர்கள் தங்களோடுகூடத் தங்கள் குழந்தைகளையும் பரிசுத்த திருச்சபையில் சேர்க்காமல் இருப்பார்களா? இதிலிருந்து

 யூதக் கிறிஸ்துவர்கள் தங்களை மாத்திரமன்றித் தங்கள் குழந்தைகட்கும் பரிசுத்த திருச்சபையில் இடங் கொடுத்துள்ளார்கள் என்பது தெளிவாக விளங்குகிறது. எனவே குழந்தைகளுக்கு விருத்த சேதனமும் ஞானஸ்நானமும் யூதக் கிறிஸ் தவர்களிடமிருந்தன என்பது தெளிவு.

கிரேக்கர், ரோமர் முதலானவர்கள் மத விஷயத்தில் தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் எவ்வித வித்தியாசத்தையும் பாராட்டவில்லை. அதனால் அவர்களும் தங்கள் பிள்ளைகளோடு குடும்பமாய்க் கிறிஸ்தவ சபையில் சேர்ந்தார்கள் என்று தீர்மானிப்பதில் யாதொரு தவறுமில்லை.

பிள்ளைகளாயிருக்கும்போது அவர்கள் கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள் என்று நாம் சுவிசேஷங்களில் வாசிக்கிறோம் (மாற்கு 10: 16) *சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்* என்று இப்பொழுதும் நம்முடைய அருமை ரட்சகர் நம்மிடத்தில் கற்பிக்கிறார். (மத்தேயு 19: 14 லூக்கா 18: 15)

பிள்ளைகளை யேசுவினிடத்தில் கொண்டுவர நமக்கு ஒரே ஒரு வழி மட்டும்தான் உண்டு. அவர்களைச் சபையில் கொண்டு வந்து ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்தவ பிள்ளைகளாய் பிரதிஷ்டை செய்வதினால் மட்டுமே முடியும். இதற்கு எதிராய் போதிப்பவர்கள் கிறிஸ்துவினுடைய கற்பனைகளுக்கு விரோதமாய்ப் போகிறவர்கள் என்பது மிகவும் தெளிவாகும். கிறிஸ்துவினுடைய அந்தக் கற்பனைகளுக்கு எதிராகப் போதிக்க ஒருவருக்கும் அதிகாரமில்லை. (மத் 5:19) இந்த காரியத்தைப்பற்றி ஒரு ஆங்கிலேய பெரிய எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார். அதனை அப்படியே ஆங்கிலத்தில் கொடுக்கிறோம்.

*Of late years there is a sect sprung up among us, who contrary to Christ's Command, forbid little children to be brought unto Him "by baptism" the only way, whereby it is possible for them to come to Him; and so make the children of Christian parents in a worse condition, than the Jewish were, and the law more favorable than the Gospel.*

பிள்ளைகளை கையிலெடுத்து கிறிஸ்துவின் அண்டையில் சென்ற தாய்மாரின் விசுவாசத்தால் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தைப் பெற முடியும் என்றால் நாம் சபையோர் முன்பாக காணக்கூடாதவராயும் ஆனால் எப்பொழுதும் பிரசன்னமாகவுள்ளவரான கிறிஸ்துவின் சன்னதியில், நம்முடைய பிள்ளைகளை நாம் கொண்டுவந்து மனப் பூர்வமாய்ப் பிரார்த்தனை செய்யும்போது நம்முடைய ரட்சகர் அவர்களை ஆசீர்வதித்து ரட்சித்து தேவராஜ்ஜியத்திற்கு உரியவர்களாக்குவார் என்பதை நாம் ஏன் விசுவாசிக்க கூடாது? தேவனுடைய ராஜ்ஜியம் அவர்களுடையது என்று அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார். (மாற்கு 10:14! கடைசி)

திவ்விய ரகசியங்களை ஞானிகளுக்கும் (மத்தேயு 11:25) கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினார்; தேவன் நம்முடைய பிரார்த்தனையின் மூலம் தம்முடைய ராஜ்யத்தில் பாலகர்களை சேர்த்துக்கொள்வார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்: கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்து பருவ ஞானஸ் நானம் பெற்றால் உடனே பரிசுத்த ஆவி கிடைக்குமென இந்தக் கூட்டத்தார் கூறுகிறார்கள். அப்2:38ஐ ஆதாரமாகக் காட்டி அவர்கள் வாதிக்கிறார்கள். நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்;. ஆனால் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தை நாம் வாசித்து பார்ப்போமானால் தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை, தான் விசுவாசிகளுக்கு கொடுத்ததைப் பலவழிகளில் நின்று பார்க்கலாம். இதற்கு ஆதாரமாய் நாம் காண்பது.

1. பெந்தகோஸ்து நாளிலே ஞானஸ்நானம் பெற்ற பலரும் ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியைப்பெற்றார்கள். ஆனால் அன்று ஞானஸ்நானம் பெற்றவர்கள் எல்லாருக்கும் பரிசுத்த ஆவிகிடைத்ததாக எழுதப்படவில்லை. பந்தி விசாரணை செய்ய இவர்களில் ஏழுபேர் தேவைப்பட்டபோது, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று

அப்போஸ்தலர் கேட்டு கொண்டதாய் நாம் அப் 6: 3 ல் வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல. அன்னியாவும், சப்பீராளும் பெந்தெ கொஸ்தே நாளிலே ஞானஸ்நானம் பெற்றவர்களாயிருந்த போதிலும் சாத்தானின் வஞ்சக ஆவி அவர்கள் இருதயத்தில் குடி கொண்டிருந்தது. என்று வாசிக்கிறோம். (அப் 5:3).

2. அப்.8:12ல் நாம் வாசிப்பது போல சமாரியர் பிலிப்புவினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து பேதுருவும், யோவானும் பரிசுத்த ஆவியை வேண்டி அவர்களுக்காக ஜெபம் பண்ணினார்கள். அன்றுவரை அவர்கள் ஒருவர் பேரிலும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் இருந்த அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் மட்டும் பெற்றிருந்தார்கள். அப்.8:16. அவர்கள் மேல் அப்போஸ்தலர்கள் கைகளைவைத்தபோது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். அப்.8:17.

3. ஞானஸ்நானத்தைப் பற்றி இன்னும் சில வேறு விதமான காரியங்களும் உண்டு அப் 10:44ல் கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு பேசினபோது அவர்கள் அனைவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பின்புதான் பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் 48 ஆம் வாக்கியத்தை வாசித்தால் ஒரு பிரத்தியேக காரியத்தை நாம் காணக்கூடும். கிறிஸ்தவ மதத்தைச் சேர விரும்பின புறஜாதிக்காரனாகிய கொர்நேலியுவின் வீட்டிற்கு ஒரு தரிசனத்தின் மூலம் தேவகட்டளையைப் பெற்று பேதுரு அங்கு போனார். பேதுருவுடன் கூட விருத்தசேதனமுள்ள சில விசுவாசிகள் அல்லாது வேறு ஒரு அப்போஸ்தலரும் இருந்ததில்லை. 48 ஆம் வாக்கியம் வாசித்தால் கொர்நேலியுவிற்கு ஞானஸ்நானம் கொடுத்தது பரி. பேதுரு அப்போஸ்தரல்ல என்று தோன்றும். ஆனால் பரி. பேதுருதான் கொர்நேலியுவிற்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்று எல்லா சபையாரும் விசுவாசிக்கிறார்கள். அப்படியானால் இந்த வாக்கியத்தின் அர்த்தம் என்ன? "*அப்பொழுது பேதுரு கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானத்தை கொடுக்கும்படி கட்டளையிட்டான்*".

"Daniel whitby" என்ற பிரசித்தி பெற்ற வேத ஆராய்ச்சிகாரர் இவ்வாறு கூறுகிறார். அப். 10:47 வாக்கியத்தை

வாசித்தால், நம்மைப்போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா எனறு சொல்லி, யூத கிறிஸ்துவர்கள் கேட்டார்கள். அதனால் இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க தண்ணீர் கொண்டு வரும்படி பேதுரு இவர்களிடம் கட்டளையிட்டார். மற்றயாரும் (Laymen) கொர்நேலியுவின் குடும்பத்திற்கு ஞானஸ் நானம் கொடுக்கும்படி கூறவில்லை என்று இந்த சந்தர்ப்பத்தில் நாம் தெளிவுற வேண்டும். நான் முன்பு கூறியதுபோல, ஞானஸ் நானசமயத்திலும், ஸ்நானத்திற்கு முன்பும் ஞானஸ்நானத்திற்கு பின்பும், அநேக நாட்களாகியும் பரிசுத்த ஆவியை ஆதி கிறிஸ் தவர்கள் பெற்றார்கள், என்று நாம் மனதில் கொள்வோமானால் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில் தவறொன்றுமில்லை என்பது தெளிவாக விளங்கும்.

இயேசுகிறிஸ்துவின் தெளிவான கற்பனைகளின்படி பிள்ளைகளைத் தம்மிடத்தில் கொண்டு வரவும், சபையில் சேர்த்துக்கொள்வதின் வெளி அடையாளமாக ஞானஸ்நானம் கொடுப்பதும், இந்தப் பிள்ளைகள் பெரியவர்களாகும்போது அப்போஸ் தலருடைய நடபடிகளை ஆதாரமாக்கி அத்தியட்சர் கைகளை வைத்து கிறிஸ்துசபையில் திடப்படுத்தி சேர்ப்பதும் வேத உபதேசங்களுக்கு முற்றிலும் ஒன்றினதொன்றாகும். யோவான் ஸ்நானகன் தன் தாயின் கர்பத்திலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான் என நாம் பார்க்கிறோம் தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான் (லூக். 1: 15) ஏரேமியா தீர்க்கதரிசியை குறித்து கர்த்தரின் வார்த்தை எப்படி இருந்தது? *நான் உன்னைத்தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீர் கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணினேன்.* (ஏரே 1:5) இப்படியாக இருக்கும் பொழுது நம்முடைய குழந்தைகளுக்கும் நம்முடைய ஊக்கமான பிரார்த்தனையினால் பரிசுத்த ஆவியை ஏன் பெறமுடியாது?

எட்டுநாள் மட்டுமே வாழ்ந்த யூதபிள்ளைகட்கு தாய், தந்தையரின் விசுவாசத்தினாலும், விருத்தசேதனத்தினாலும், ஆபிரகாமுடைய சந்ததிகளாகலாம் என்றால் தேவ விசுவாசிகளாகிய

நம்முடைய குழந்தைகளுக்கு அதே பிராயத்தில் ஏன் கிறிஸ்துவின் சந்ததிகளாய் கிறிஸ்துவின் சபையில் சேரக்கூடாது? கிறிஸ்துவ தாய் தந்தையரின் குழந்தைகள் பரிசுத்தமாயிருக்கின்றன என்று வேத புத்தகம் தெளிவாகக் கூறுகிறது. 1 கொரி 7:14. இந்த வாக்கியத்தைப்பற்றி Whitby என்ற வேத ஆராய்ச்சிக்காரர் இவ்வாறு கூறுகிறார். ஆங்கிலத்திலே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

Whitby one of the greatest exponents of the Holy Scriptures has commented on this particular verse as follows :-
"I cannot but conclude/ after long attention to the subject/ that the baptism of the infant-offspring of Christians is here evidently referred to/ as at that time customary in the churches" and that the Corinthians knew/ that this was not objected to/ when only one parent was a Christian Hence then the argument for infant-baptism runs thus: If the holy seed among the jews was therefore to be circumcised" and to be made federally holy by receiving the sign of the covenant/ and being admitted into the number of God's holy people: because they were born in sanctity or were seminally holy " for the root being holy/ so are the branches also: " then/ by like reason/ the holy seed of Christians ought to be admitted to baptism and receive the sign of the Christian covenant/ " the layer of regeneration " and so be entered into the society of the Christian Church."

நம்முடைய பிள்ளைகள் கர்ம பாவமில்லாதவர்களாயிருந்தும் தாய்தந்தையர் வழி ஜென்ம பாவமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆதாமுடைய சந்ததியாய் தோன்றினதால் ஜென்ம பாவங்களை அவர்கள் அறியாதபடி எப்படி சுதந்தரித்துக் கொள்கிறார்களோ அப்படியே யேசு கிறிஸ்துவின் சன்னதியில் பிரதிஷ்டை செய்யப்படும்போது இந்த ஜென்ம பாவமானது ஏன் அவர்கள் அறியா வண்ணம் அவர்களை விட்டு நீங்கக்கூடாது? பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலிருக்கையில், யாக்கோபைத் தேர்ந்தெடுத்த அதே தெய்வம் நம்முடைய குழந்தைகளையும் வழி நடத்துகிறார் என்பதை நாம் நினைவில்

வைப்போமாக. தாய், தந்தையரின் விசுவாசம் மூலம் தங்கள் பிள்ளைகட்கும், எஜமானருடைய விசுவாசம் மூலம் தங்கள் வேலைக்காரர்களுக்கும், சிநேகிதர்களின் விசுவாசத்தின் மூலம் திமிர்வாதக்காரனுக்கும் கிறிஸ்துவினிடத்திலிருந்து கிருபையும், நற்சுகமும், அநுக்கிரகங்களும், வியாதிக் குணமும் பாவமன்னிப்பும் கிடைத்ததென்று நாம் அறிகிறோம். யாத்திரா 20:5 *என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவருமாயிருக்கிறேன்.* கோழி தன் குஞ்சுகளை சிறகின் கீழ் சேர்ப்பது போல, நம்முடைய பிள்ளைகளைச் சேர்த்து கொள்ள மனதுள்ள நம் கிறிஸ்து, நம்முடைய சபையிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் தம்முடைய சிறகின்கீழ் சேர்த்துக் கொள்வார். குழந்தை ஞானஸ்நானத்திற்கு அனுகூலமான சில உபதேசங்களையும் வேத புத்தக வியாக்கியானங்களையும் கூறி நான் என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

1. கிறிஸ்துசபை ஆரம்பித்தது பெந்தகோஸ்து நாளிலிருந்து அல்லவா? ஆனால் பரி. பேதுரு ஆவி நிறைந்தவராய் பிரகாசித்தது என்ன? குழந்தைகளைக் குறித்து யூத மதத்திலும் கிறிஸ்துவ சபையிலும் ஒரு வித்தியாசமும் இல்லை என்றுதான். இது ஒரு ஏற்ற மிக முக்கியமான ஒரு காரியமாக இருந்ததால் பரி. பேதுருவின் முதல் பிரசங்கத்திலேயே யூதருடைய ஒரு பெரிய கூட்டத்திற்கு இதைத் தெளிவாக்கி கூறவேண்டியது அத்தியாவசியமாயிற்று அப். 2:39 வாசித்து பார்ப்போமானால் பேதுரு, ‘‘*வாக்குத்தத்தமானது யூத சபைக்கு இருந்ததுபோல உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் உண்டானது*’’ என்று தனியாக விளக்கி கூறியிருக்கிறார். வயது வந்தவர்களுக்கு மட்டுமே பரி. பேதுரு கூறி இருப்பாரானால் வாக்குதத்தம் உங்களுக்கும் (யூதருக்கும்) நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவர்க்கும் (புற ஜாதிகளுக்கும்) உண்டாயிருக்கிறது என்றே சொல்லி அறிவித்திருப்பார். ஆனால் உங்களுடைய பிள்ளைகளுக்கும் இந்த வாக்குத்தத்தங்கள் யூதசபைக்கு உண்டானதுபோல் உண்டு என்று அப்போஸ்தலர் எடுத்துக் கூறுவதை நாம் சரிவர கவனிப்போமாக.

இந்த திட்டங்களைப் பரி. பேதுரு அன்று பிரசித்தம் பண்ணாதிருந்தால், யூதர் கூட்டமாக சபையில் சேர்ந்திருக்க மாட்டார்கள். இப்படி பிரசங்கம் கேட்டு அன்று சேர்ந்தவர்கள் யாவரும் யூதராயிருந்தார்கள். இந்த திட்டங்களை அனுசரித்ததின் மூலமாக அந்த சந்தர்ப்பத்தில் அன்று கூடியிருந்தவர்கள் எல்லாரும் *குடும்பமாக* ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று அனுசரிப்பதில் தவறொன்றுமில்லை.

Dr . Stanley Jones 1939 Feb Maramon convention - இல் இவ்வாறு பிரசங்கித்தார். பெந்தகோஸ்தே தினத்தில் ஸ்திரீ புருஷர் மட்டுமல்ல குழந்தைகளும் இருந்தார்கள் என்று குறிப்புகள் உண்டு. அவர்களுக்கும் பெந்தகோஸ்தின் அனுபவம் கிட்டியது. (Maramon convention Lectures M.E. 1114 Page 43)

2. கொர்நேலியுவின் குடும்பமும் (அப். 10:48) லிதியாள் குடும்பமும் (அப். 16:15); சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டில் உள்ளயாவரும் (அப். 16:33); ஜெப ஆலயத்தலைவன் ஆன கிறிஸ்புவும் அவன் குடும்பமும் (அப். 18:8); ஸ்தேவானுடைய வீட்டாரும் குடும்பமும், ஞானஸ்நானம் எடுத்தபோது (1 கொரி 1:16) அக் குடும்பங்களில் ஒன்றிலாகிலும் ஒரு குழந்தையும் இல்லாதிருந்தது என கூறுவது நாம் நம்பத்தகுந்ததல்ல. லிதியானின் காரியத்தில் அவள் விதவையாயிருந்தாள் என்று சிலர் கருதுகிறார்கள். தியத்தீரா பட்டணத்தினின்றும் அங்கிருந்து தூரமான பிலிப்பு பட்டணத்திற்கு வந்து இரத்தாம்பரம் விற்கும்படியாக, அவள் பணக்காரியாகவும். சுதந்திரமுடையவளாகவும் இருந்தாள் என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படியானால் அவளுடைய குடும்பம் என்று சொன்னால் அவள் குடும்பத்தில் குழந்தைகள் மட்டுமே இருந்தார்கள் என்று பொருள். மேற்சொன்ன நான்கு குடும்பங்களைப்பற்றி பேசும் போது வீட்டுத்தலைவனைப் பற்றி மட்டும் கூறியிருப்பதும், இந்தக் குடும்பத்தில், தலைவியை மட்டும் குறிப்பிடப்பட்டிருப்பதும் அவள் விதவையாக இருந்தாள் என்ற வாதத்திற்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது.

3. அப்போஸ்தலர் ஒரு குடும்பத்திற்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பொழுது அந்த குடும்பத்திலுள்ள குழந்தைகள் உள்பட

எல்லோருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். காரணம் என்னவென்றால் தாராளமாய் முதிர்வயதுடைய யூதர்களும், புற ஜாதிக்காரர்களும் தான் அப்போஸ்தலர் காலத்தில் திருச்சபையில் சேர்ந்து கொண்டார்கள். அப்படி என்றால் 60 வருட கால சபை சரித்திரம் உள்ள புதிய ஏற்பாட்டில் ஒரு அப்போஸ்தலனாவது தன முதல் யாத்திரையில் முதிர் வயது உடையவர்களை மட்டும் ஞானஸ் நானம் கொடுத்து, தன் இரண்டாம் யாத்திரையிலோ அல்லது வேறு சமயத்திலோ முதலில் ஞானஸ்நானம் கொடுத்த தாய்தந்தையரின், வயதுவராத மக்களுக்கு பின்பு ஞானஸ்நானம் கொடுத்ததாக ஒரு சிறிய குறிப்பேனும் புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் இல்லை என்பதை நாம் அறிவோம்.

4. இயேசுகிறிஸ்து ஏன் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து சபையில் சேர்க்க ஒரு கட்டளையும் கொடுக்கவில்லை. என்றால் அதன் பதில் இதுவேயாகும். சிறு குழந்தைகளை ஆயிரமாயிரம் வருடம் சுவீகரித்துக்கொண்ட ஒரு சபையில்தான் கிறிஸ்து பிறந்ததும், வளர்த்ததும், குழந்தைகளை ஞானஸ்நானம் கொடுத்து சபையில் சேர்ப்பதற்கு, தான் சம்மதிக்காதிருந்தால்தான் கட்டளை பிரத்தியேகமாக வேண்டியிருக்கும்.

5. Rev. Ryle கூறியதுபோல கர்மபாவம் செய்யாமல் மரிக்கும் கிறிஸ்தவ குழந்தைகள் ஆயிரக்கணக்கில் மோட்சத்தில் பேர் எழுதப்பெற்றவர்களாய் முதற்பேறான திருச்சபையில் அங்கம் வகிக்கின்றனர் என்று எல்லா சபையினரும் விசுவசிக்கின்றனர். ஆனால் எந்த காரணத்தினால் அந்த பிராயத்தில் அவர்களுக்கு நல்லவரும், தீயவரும் உட்பட்டு இருக்கின்ற, கோதுமையும்,களையும் ஒன்று சேர்ந்து வளர்கின்ற இந்த உலக சபையில் ஏன் சேரக்கூடாது?

6. பரி. யோவான் 21 அதிகாரத்தில் சபையின் நடத்துதலைப்பற்றி பரி. பேதுருவிடம் ஆண்டவர் கூறிய வாக்குகள் மிகவும் முக்கியமானதாகும்.

*15. என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக.*

*16. என் ஆடுகளை மேய்ப்பாயாக.*

*17. என் ஆடுகளை மேய்ப்பாயாக.*

இவ்விடத்தில் ஒரு முக்கியமான காரியம் நம் கவனத்தை

 தொடும். ஆட்டுக்குட்டியையும் ஆடுகளையும் கொண்டுள்ள தன் சபையை மேய்க்கும்படியாக கிருஸ்து நாதர் இவ்விதம் கட்டளை கொடுக்கிறார். பரி. பேதுருவின் காலத்திலிருந்த சபையும், நம்முடைய திருச்சபையும் ஆடுகளும், ஆட்டுக்குட்டிகளும் உள்ள ஒரு சபையாகும். பிரதான மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்து தமது சபையிலுள்ள ஆட்டின மந்தை முழுமையையும் எப்படி பராமரிக்கிறார் என்பதையும் தற்போது கவனிப்போம். மேய்ப்பனைப் போலத் தமது மந்தையை மேய்ப்பார். *ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.* (ஏசாயா 40:11) தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி கண்காணிகளாக வைக்கப்பட்ட எபேசிய மூப்பன்மாரோடே, மந்தை முழுவதையும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று பரிசுத்த பவுல் சொல்லும் பொழுது வெறும் ஆடுகளை மட்டுமல்ல, ஆட்டுக் குட்டிகளையும் சேர்த்தும் கூறியிருப்பதாக நாம் கொள்ளவேண்டும். (அப் 20:28)

முழுக்கு ஞானஸ்நானத்தைப்பற்றி நாம் சிந்திக்கும் பொழுது பொதுவாக சில காரியங்களை நாம் அறிய வேண்டும். முழுக்குதல் அல்லது கழுவுதல் என்னும் பதம் கிரேக்க பாஷையிலுள்ள பப்டிசைன் என்றாகும்.

இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளின் ஆங்கிலிக்கன் சபையின் முதல் தலைமை அத்தியட்சரான (Metropolitan) பண்டிதர் தானியேல் வில்சன் அவர்கள். ;The import of the original word is capable of either interpretation. என்கிறார். நாகமான் யோர்தான் நதியில் முழுகினதற்கும் (2 ராஜாக்கள் 5:14) யூதர்கள் சாப்பிடுவதற்கு முன் கை கழுவுவதற்கும் (லூக்கா 11:28) யோவான் 13:10) இந்த பப்டிசைன் என்னும் ஒரே பதமானது உபயோகப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும். அதோடு ஞானஸ்நானத்திலே அதிக தண்ணீரை உபயோகப்படுத்தியோ அல்லது குறைவான தண்ணீரை உபயோகப்படுத்தியோ ஞானஸ்நானம் எடுப்பதால் ஆவியின் கிருபையிலே ஒருவித வித்தியாசமும் வருவதில்லை.

எடுத்துக்காட்டாக முதல் இராப்போசனத்தில் கிறிஸ்து ஒரு பாத்திரம் நிறைய ரசத்தை நிரப்பி தன் 12 சீஷர்களுக்கு குடிக்கக்

கொடுத்தார். ஆனால் இப்பொழுது எல்லா சபைக்காரரும் அதோடு தண்ணீரையும் சேர்த்து குறைந்தது நூற்று இருபது பேருக்கு கொடுக்கிறார்கள். அதிலே ஒருவித விவாதமும் இல்லாதிருப்பது நமது பாக்கியமே. ஏனென்றால் விவாதமிருந்தால் இதனால் ஒரு சபைகூட ஏற்பட வழியுண்டு. முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தே தீரவேண்டும் என்பது கிறிஸ்துவின உலகமெங்குமுள்ள சபைக்குச் சேர்ந்த உபதேசமல்ல. ஏனென்றால் ஐரோப்பா, அமெரிக்க வட பாகங்கள், சைபிரியா. கிரீன்லாண்டு, ஐஸ்லண்டு என்னுமிடங்களில் முழுக்கு ஞானஸ்நானம் எடுப்பது என்று கூறுவது *பலியையல்ல இரக்கத்தையே விரும்பு*கிற கடவுளுக்கு ஏற்றதல்ல, (மத். 9:13)

இனி யோவான் ஸ்நானகனும் அப்போதலரும் முழுக்கு ஞானஸ் நானம் கொடுத்தார்களா என்பதைப் பற்றி சிந்திக்கலாம்.

1. யோவான் ஸ்நானகன் முதன் முதலாய் ஞானஸ்நானம் கொடுத்தது வனாந்திரத்திலே என்று மார்க்கு 1:4ல் வாசிக்கிறோம். வனாந்திரத்திலே முழுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது சாத்தியமல்ல. ஆனாலும் யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று நாம் வாசிக்கிறோம் (ஏ 5)

அவ்விடத்திலேயும் இவ்வளவு திரளான மக்களுக்கு தான் ஒருவனாய் முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்பதை விசுவாசிக்க முடியாமலிருக்கிறது. யோவான் 1:28ல் யோர்தானுக்கு அக்கரையிலுள்ள பெத்தபாரவில் யோவான் ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்தார் என்று வாசிக்கிறோம் யோ : 1 28 யோர்தானிலும், அயினோனிலும் தண்ணீர் இருந்ததினால் முழுக்கு ஞானஸ்நானம் கொடுததார் என்று வாதித்தால், வனாந்திரத்திலும், பெத்தபாராவிலும் தண்ணீரைத் தெளித்து ஞானஸ்நானம் கொடுத்தார் என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறதல்லவா? மாற்கு 1: 6ம் வாக்கியத்தில் யோவான் ஸ்நானகனே ஓட்டக மயிர் உடையைத தரித்து, தன் அரையில் வார்க் கச்சையைக் கண்டிக் கொண்டவனாயும் இருந்தான் என காண்கிறோம். தன்னுடைய உபதேசங்களைக்

கேட்பவர்கள் எல்லாம் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமென்றால் யோவான் ஸ்நானகனும் தன் உடுப்பை மாற்றி தண்ணீரில் தான் இறங்கியோ அல்லது தான் ஒட்டக மயிர் உடையைத் தொடர்ச்சியாய் நனையவிட வேண்டும் அல்லவா? பெரிய மக்கள் கூட்டம் யோவான் ஸ்நானகனிடத்தில் வந்தார்கள் என்றால் யூதர்கள் பூர்வ காலத்தில் செய்தது போல யோவான் ஸ்நானகன் பாவங்களை அறிக்கையிட்டவர்களிடம் தண்ணீர் தெளித்து தேவன் முன்பாக சுத்திகரித்தான் என்று கொள்வதில் நியாயமுண்டு. யோவான் ஸ்நானகன் காலத்தில் முழுக்கு ஞானஸ் நானம் எடுப்பது என்ற ஒரு காரியம் இல்லாதிருந்ததால் ஸ்நானகன் யாரையும் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்று நாம் தீர்மானிக்கலாம். புதிய ஏற்பாட்டில் இரண்டு ஞானஸ்நானங்களே தண்ணீரில் இறங்கி நடத்தப்பட்டிருக்கிறது. மாற்கு 1 : 10 *அப்பொழுது இயேசு ஜலத்திலிருந்து கரையேறினவுடனே,* என்று வாசிக்கிறோம். அப் 8:38!39 அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது இந்த பதங்களைக் கொண்டு அவர்கள் தண்ணீரில் மூழ்கினார்கள் என்று அர்த்தம் கொள்ள வேண்டியதில்லை. அதோடு மூழ்கும் அளவு ஆழமுள்ள தண்ணீர் அங்கில்லையென்று இச்சந்தர்ப்பத்திலிருந்து உணர முடிகிறது. தவிரவும் தேரில் போய்க் கொண்டிருந்த வேகத்தில் கண்ணில்பட்ட தண்ணீரில் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று மந்திரி துடித்ததையும் காணுகிறோம். இதிலிருந்து நீரில் மூழ்கியல்ல. கையால் தண்ணீரைத் தெளித்துத்தான் ஞானஸ்நானம் கொடுத்திருக்கக்கூடும் என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது. இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானகனிடமிருந்து ஞானஸ்நானத்தின் ஒரு பாகத்தை மட்டுமே ஏற்றார். யோவான் ஸ்நானகன் நடத்திய ஞானஸ் நானத்தில் இரண்டு பாகங்கள் இருந்ததால் இப்படி சம்பவித்தது. யோவான் ஸ்நானகனிடத்தில் யாவரும் வந்து பாவங்களை அறிக்கையிட்டு யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்றார்கள் (மாற்கு 1:5) யேசுகிறிஸ்துவினிடத்தில் முதல் பாகமாகிய பாவங்களை அறிக்கையிடுதல் என்ற அவசியம் இல்லாததினால் இரண்டாம்

பாகமே நிறைவேறிற்று. அதனால் ஞானஸ்நான காரியத்தில் எப்பொழுது, எப்படி, எங்கே ஆகி இருக்க வேண்டும் என்பது குறித்து நாம் அதிகமாக விவாதிக்க வேண்டியதில்லை. (யோவான் 3:22, 23) வாசித்தால் ஒரு காரியம் நம் மனதில்படும். அயினோனில் அதிக தண்ணீர் இருந்தது என்று எடுத்து கூறியதால், யேசுவும் சீஷரும் ஞானஸ்நானம் கொடுத்த யூத தேசத்தில் அதிக தண்ணீர் இல்லை என்பதும் விளங்கும். ஓரிடத்தில் மூழ்கியும் ஓரிடத்தில் தெளித்தும் ஞானஸ்நானம் நடந்தது என்று சொல்வதைக் காட்டிலும் இரண்டு இடங்களிலும் ஒரே ரீதியில் தெளித்த ஞானஸ்நானமே நடந்ததென்று கூறுவதே நியாயமும் நேர்மையுமாகும். பழைய ஏற்பாட்டில் தண்ணீர் தெளித்து சுத்திகரிப்பது என்பது தெய்வீக பிரமாணமாக சேர்க்கப்பட்டது. (எண்ணா 8:7) ;அவர்கள் மேல் சுத்திகரிக்கும் ஜலத்தை தெளிப்பாயாக;

யாத்திர 29: 4, லேவி: 8.6 லும் கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே மோசே, ஆரோனையும் அவன் புத்திரரையும் வரவழைத்து அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்ததாகவும் தண்ணீரால் கழுவியதாகவும் நாம் காண்கிறோம். மேலும் நாம் பார்ப்பது என்னவென்றால் மனித ஜாதியைச் சுத்திகரிக்கும் பொருட்டு தேவன் ஒரு நடவடிக்கையை ஆமோதித்தார். அது என்னவென்று எசேக்கியல் தீர்க்கதரிசி விவரித்திருக்கிறார் (எசேக்கியல் 36:25) *அப்பொழுது நான் உங்கள் மேல் ஜலம் தெளிப்பேன். நீங்கள் சுத்தமாவீர்கள்* ஏசாயா 1:16ல் இதை நாம் வாசிக்கிறோம். *உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்.* பழைய ஏற்பாட்டில் மட்டும் அல்ல புதிய ஏற்பாட்டிலும் இவ்விதமான வாசகங்களை நாம் பார்க்கிறோம்.

எபேசியர் 5: 26 ; That he might sanctify and cleanse with the washing of water by the word

முழுக்கு ஞானஸ்நானக்காரன் ஆதரிக்கும் (defend) வசனம் கொலோ 2:12 தான். ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடுகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்; நம் சரீரம் அடக்கம் பண்ணும் பொருட்டு தண்ணீரில் மூழ்கியும் கிறிஸ்து

உயிர்த்தெழுந்த வண்ணம் தண்ணீரைவிட்டு எழுந்திருந்தார் என்பது பரி.பவுல் கூறியதின் அர்த்தம் அல்ல. கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முழுவதுமாக இந்த ஞானஸ் நானம் பிரதிபலித்து காட்டுமாகில், கிறிஸ்துவைப்போல மூன்று நாட்கள் நாம் தண்ணீரில் மூழ்கி இருக்க முடியாது அல்லவா. ஆனால் அதே அதிகாரம் 20ம் வசனத்தில் கூறியதுபோல நீங்கள் கிறிஸ்துவுடனே உலகத்தின் வழிபாடுகளுக்கு மரிக்க வேண்டும். 1 பேதுரு 2:24ல் சொல்வது போல, நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படியாக இருக்க வேண்டும்; ரோமர் 6: 11ல் இந்த காரியங்கள் வெகு விவரமாக கூறப்பட்டிருக்கிறது. *அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்*

2. பெந்தகோஸ்து நாளில் பரிபேதுருவும் மற்ற 11 சீஷர்களும் சுமார் 6 மணி நேரத்திற்குள் 3000 பேரை முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்பதை நம்புவதற்கு இடமில்லை. இவ்வளவு பேரையும் முழுக்கு ஞானஸ்நானத்தில் ஏற்படுத்த எருசலேமில் தண்ணீர் உள்ள இடம் எங்கே? எருசலேமை சுற்றி ஆறுகளோ பெரிய குளங்களோ இல்லை. எருசலேம் நகரத்திலிருந்து யோர்தான் நதிக்கரைக்கு குறைந்தது 18 மைல் தொலைதூரம் உள்ளது. சீலோவாம், பெத்சாயிதா என்னும் குளங்களும் மிகவும் சிறியவையாக இருந்தன. பரிபேதுருவின் பிரசங்கங்களைக் கேட்ட யூதர்கள் தங்கள் தேவாலயத்தின் கீழுள்ள குளங்களில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட யூதர்களுக்கு ஞான்ஸ்நானம் செய்விக்க அனுமதிப்பார்கள் என்பது கூடாத காரியம். ஒரு வித முன்னேற்பாடில்லாமல் தங்கள் பரிசுத்த ஆவியினால் குத்துப்பட்டதால் அல்லவோ இவர்கள் ஞானஸ் நானம் ஏற்றார்கள். முழுக்கு ஞானஸ்நானம் எடுப்பதால் நனைந்த துணிகளை மாற்றி மாற்றுடை தரிக்க எந்த ஏற்பாடும் செய்ததாகவும் தெரியவில்லை.

3. சிறைச்சாலைக்காரன், இரண்டு கைதிகளும் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்று எண்ணி தன் பட்டயத்தை உருவி கொலை செய்ய எத்தனித்தவன், மேலதிகாரிகளின் உத்தரவு இல்லாமல்

23 தன் குடும்பத்தார் எல்லோரோடும் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க தண்ணீர் உள்ள ஆற்றிலோ மற்ற வேறிடத்திலோ நடுஇரவிலே போயிருப்பான் என்றும், கைதிகளான பவுலுவும் சீலாவும் பெற்றுக்கொண்ட அடிகளால் வேதனையும், கட்டுகளும் நிறைந்த உடலோடு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பொருட்டு சிறைச் சாலையை விட்டு போயிருப்பார்கள் என்று நாம் நம்ப முடியுமா. (அப். 16: 27,34)

4. தேரில் போய்க் கொண்டிருந்த எத்தியோப்பிய மந்திரியை எருசலேம் ஆலயத்திற்கு பணிந்து கொள்ளப் போன உடையை மாற்றி வீதியின் நடுவிலே முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்து மீண்டும் சில நிமிடங்களுக்குள் அவன் வேறுடை தரித்து தன் யாத்திரையைத் தொடங்கினான் என்று நம்புவது எளிதல்ல. (அப் 8:26!39)

5. தமஸ்கு பட்டிணத்தில் நேர்த் தெரு எனப்பட்ட தெருவில் தங்கியிருந்து யூதாவின் வீட்டில் வைத்து பரி. பவுல் ஞானஸ் நானம் பெற்றது முழுக்கு ஞானஸ்நானமேஎன்று சொல்வதற்கு யாதொரு நியாயமுமில்லை. அவன் பார்வை அடைந்து எழுந்திருந்து ஞானஸ் நானம் பெற்று போஜனம் பண்ணி புறப்பட்டான் என்று நாம் வாசிக்கிறோம்.

இந்த முழுக்கு ஞானஸ்நானக்காரர் சொல்வது என்னவென்றால் தண்ணீரால் எடுக்கப்பட்ட ஞானஸ்நானத்துடன் எல்லோருக்கும் மறுபிறப்பு உண்டாகிறது என்று கூறுகிறார்கள். அதாவது ஞானஸ்நானம் எடுத்தவர்களுக்கு, பாவ மன்னிப்பு, நீதிமானாக்கப்படுதல் (Justification) மீட்பு, (Redemption) புத்திர சுவீகாரம் என்ற இவைகள் உடனே கிடைக்கிறது என்கிறார்கள். ஆனால் நம்முடைய திருச்சபை கூறுகிறதாவது ஆத்துமா மறுபிறப்பு விசுவாசிகளுக்கு. ஞானஸ்நான சமயத்தில் மட்டும் அல்ல. வாழ் நாட்களில் எப்பொழுது வேண்டுமானாலும் நடைபெறலாம். நம்முடைய ஆண்டவர் கூறிய பிரகாரம் "*அழைக்கப்பட்டவர்கள் அனேகர் தெரிந்தெடுக்கப்பட்டவரோ சிலர்*" ஞானஸ்நானம் எடுத்தவர்கள் அனேகர் உண்மையால் மறுபிறப்பு அடைந்தவர்கள் சிலரே.

தண்ணீரால் எடுக்கப்பட்ட ஞானஸ்நானம் எடுத்தவுடன்

எப்பொழுதும் ஆத்தும மறுபிறப்பு உண்டாகும் என்றோ, ஞானஸ்நானத்தின் உடன் ஒருக்காலும் ஆத்தும மறுபிறப்பு உண்டாகாது என்றோ சொல்வதற்குரிய ஒரு வசனமும் நம் வேதப் புத்தகத்தில் இல்லை. இதைப் பற்றி ஒரு ஆங்கிலேயே எழுத்தாளர் இவ்வாறு கூறி இருக்கிறார்.

If indeed it could be proved by any express and clear passage of Holy Scripture/ that He has promised that regeneration shall always accompany baptism/ or that regeneration shall never accompany baptism" If He had promised that they shall be always united or that they shall never be united then indeed we should be justified in speaking according to His promise. But no man has ever yet pointed to such a passage in Holy Scripture. No man has ever yet produced the promise of God that He would always unite the spirit's work of regeneration with man's work of baptism. and always sow the seeds the germs the elements of a new nature by the water of baptism And on the other hand/ no man has ever yet produced the promise of God that He would never unite the Spirit's work of regeneration with man's work of baptism and never sow the seeds the germs the elements of a new nature by the water of baptism.

In the whole volume-in the whole of this blessed/ thrice blessed volume of revelation in the whole series of His promises and they are "exceedingly great and precious promises"-there is nothing that has the least color the slightest and faintest shadow of His intention always to unite or never to unite regeneration to baptism. And therefore we hold against those who believe in baptismal regeneration" and against those who deny baptismal regeneration alike that God has imposed no limit on Himself in this matter" that He sometimes regenerates the sinner before baptism/ that He sometimes regenerates him in baptism/ and that He sometimes regenerates him after baptism.

இன்னும் நம் கவனத்தை கவர மிகவும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியை உங்கள் கண் முன் வைக்கிறேன். அது பரி. பேதுரு

புறசரதிக்காரரை சபையில் சேர்க்க ஞானஸ்நானம் வெளி அடையாளமாக இருக்கிறது என்று ஒப்புக் கொண்டிருக்கிறார் என்பதே. கொர்நேலியின் வீட்டில் கிறிஸ்துவைப் பற்றியும் கிறிஸ் துவின் ரட்சிப்பைப் பற்றியும் பரி. பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் பேரிலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். (அப் 10:44)

இதற்குப் பின் ஏற்பட்டதுதான் புறசாதிக்காரர்கள் சபையில் சேர்க்கும்படியான வெளியடையாளமாகிய தண்ணீரால் ஆன ஞானஸ் நானம், பரி. பேதுரு புறசாதிகளுக்கு கொடுத்தாக நாம் பார்க்கிறோம். புறசாதிக்காரர்களைக் கிறிஸ்து சபையில் சேர்த்துக் கொள்ள வெளியடையாளமாகிய தண்ணீரால் ஞானஸ் நானம் கொடுப்பது மிகவும் அவசியமான ஒன்று என்று ஏற்பட்டதால் பரி. பேதுரு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்களுக்குகூட தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி முற்பட்டார்.

நம்முடைய திருச்சபை, தண்ணீரால் ஆன ஞானஸ்நானம் சபையில் சேர்த்துக்கொள்ள வெளி அடையாளமாக இருக்கிறது என்று ஒப்புக் கொள்கிறது. அது வேத புத்தகத்திற்கு ஒத்தது என்று இந்த பரி பேதுருவின் முன் சொல்லிய காரியங்களில் நின்று வெகுத் தெளிவாகிறது. Church of England Articles of Religion No. 27 Baptism.

ஞானஸ்நானத்தைத் தகுதியாய் பெறுகிறவர் திருச்சபையிலே சேர்த்துக் கொள்ளுகிறதற்கு அது ஒரு யத்தனமாயிருக்கிறது. அதினாலே பாவமன்னிப்பையும், பரிசுத்த ஆவியினாலே தேவனுக்குப் பிள்ளைகளாவதற்கு ஏற்ற புத்திர சுவிகாரத்தையும் பற்றிய வாக்குத் தத்தங்கள் பிரத்தியட்சமாய்க் கையொப்பமும் முத்திரையும் இட்டதுபோல உறுதியாக்கப்படுகிறது, விசுவாசமும் பலப்படுகிறது. தேவனை நோக்கிச் செய்யும் ஜெபத்தின் மூலமாய்க் கிருபையும் அதிகரிக்கிறது.

விருத்தசேதனம் என்ற அடையாளம் ஆதி இஸ்ரவேல் சபையிலே எல்லா அங்கத்தினர்களுக்கும் (ஈசாக்கைப் போல விசுவாசிக்க வயதில்லாத 8 நாட்களே வளர்ந்துள்ள சிசுக்கள் உள்பட) விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக

 இருந்ததுபோலவே (ரோமர் 4:11) இரண்டாவது இஸ்ரவேல் சபையிலும் கிறிஸ்து சபை ஞானஸ்நானம் எல்லா அங்கத்தினருக்கும் (சிசுக்கள் உள்பட) நீதியின் முத்திரையாக இருக்கிறது.

பரி. பவுல் 1 கொரி 10: 2ல் *எல்லோரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்* என்று கூறுகிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் மோசேயின் உபதேசப்படி ஸ்திரிகளும், புருஷர்களும், பிள்ளைகளும் ஜனம் முழுவதும் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்று தேவ சபையில் சேர்ந்திருந்ததுபோல புதிய ஏற்பாட்டின் காலத்தில் புருஷன்மாரும் ஸ்திரிகளும், பிள்ளைகளும் யாவரும் கிறிஸ்துவினுடைய திருச்சபையில் காணக்கூடிய ஸ்நானத்தின் மூலம் சேர்க்கப்படுகிறார்கள் என்று பவுல் இவ்வாறு தெளிவாக கூறி இருக்கிறார்.

இன்னும் ஒரு காரியம் நாம் மனதில் வைக்க வேண்டும். ஞானஸ்நானத்தின் முன் அடையாளமாகக் கூறிய இந்த சம்பவத்தில் சமுத்திரத்தில் தண்ணீர் இருக்கவில்லை. யாத்திராகமம் 14:22 வாசித்தால் இஸ்ரவேல் புத்திரர் வெட்டாந் தரையிலே நடந்து போனார்கள் என்று நாம் பார்க்கிறோம். தண்ணீரில் மூழ்கிய பார்வோனின் சேனைகள் இறந்து போனதாக நாம் பார்க்கிறோம் 1 பேதுரு : 3 : 20ல் *அந்தப் பேழையில் சிலராகிய எட்டுப் பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலேகாக்கப்பட்டார்கள், அது ஞானஸ்நானத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது* என்று பரிபேதுரு எழுதி இருக்கிறார். ஞானஸ்நானத்தின் முன் அடையாளமாக பரி பேதுரு நோவாவின் குடும்பம் காக்கப்பட்டதை இங்கு விவரித்துக் கூறுகிறார். அங்கேயும் தண்ணீர் இல்லை. நோவாவும் அவன் குடும்பமும் பேழையில் இருந்தார்கள். தண்ணீரில் இருந்தவர்கள் யாவரும் மூழ்கிச் செத்தார்கள். பரி பவுலும் பரி. பேதுருவும் இந்த வேத பாகங்களில் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கூறும் பொழுது தண்ணீர் அதிகமாயிருந்ததோ அல்லது குறைவாக இருந்ததோ, அல்லது தண்ணீர் இல்லாமலே இருந்ததோ என்பதைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. எந்தக் காலத்திலும், எந்த சமயத்திலும், மூழ்கியே ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்

27 என்று வலியுறுத்துபவர்கள் பரிபவுலினுடையதும், பரிபேதுருவினுடையதும் ஆன வாக்கியங்களை மறுதலிக்கிறார்கள் என்பதை அறியாமலிருக்கிறார்கள்.

இன்னொருவிஷயத்தையும்நாம்கருத்தில்வைக்கவேண்டும். ஞானஸ்நானத்தின் முன் அடையாளமாக பரி. பவுல் குறிப்பிட்ட மேற்கூறிய காரியங்களில் ஸ்திரிகளும், புருஷர்களும் குழந்தைகளும் இருந்தார்கள் என்று நாம் கவனத்தில் வைக்கவேண்டும்.

இனி ஞானஸ்நானத்தில் சில பொதுவான காரியங்களைக் கூறி நான் முடிக்கிறேன்.

1. ஞானஸ்நானம் அவசியமாக இருக்கிறது. ஏனெனில் அது கிறிஸ்து சபையில் சேர வெளியரங்கமான அடையாளமாக இருக்கிறது.

2. பரிசுத்த ஆவியைப் பெற இது ஒரு முன்னோடியாய் சபையிலே நியமிக்கப்பட்டிருக்கிறது

3, முன்பு சொல்லியது போல ஞானஸ்நான சமயத்தில் மட்டுமல்ல பின்னும் அநேக காலங்கள் கழித்து பரிசுத்த ஆவி கிடைக்குமென்று வேத புத்தகத்தில் திட்டமாக கூறி இருக்கிறது அதனால் குழந்தை ஞானஸ்நானம் எடுத்தவர்கள் பின்னால் பரிசுத்த ஆவியைப் பெற ஏதொன்றும் தடையில்லை என்று தெரிகிறது. மேலும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்ற சிலரைப்பற்றி அப்போஸ்தல நடபடிகளே கூறி இருக்கிறது. இவர்களைப் பற்றி நாம் சிறிது கவனிப்போம்.

1. அனனியாளும். சப்பீராளும் (அப். 5:1!11) இவர் கள் பெந்த கோஸ்துநாளில்விசுவாசித்துஅப்போஸ்தலர்கைகளால்நேரில்ஞானஸ் நானம் பெற்றும் பரிசுத்த ஆவியைப் பெறாதிருந்தார்கள். சாத்தானின் வஞ்சக ஆவி அவர்கள் உள்ளங்களில் இருந்தது. அவர்கள் இருவரும் பெரிய தண்டனைக்கு உள்ளானார்கள். மாயவித்தைக்காரனான சீமோன் பிலிப்புவிடத்திலே சமாரிய பட்டிணத்திலே ஞானஸ்நானம் எடுத்தான். (அப். 6: 13ம் வாக்கியத்திலே சீமோனும், விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்புவுடன் சேர்ந்து அவனால் நடந்த அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்டு பிரிமித்தான். ஆனால் 9ம், 11ம் வாக்கியங்களில் அவன் சமாரியர்களை பிரிமிக்க வைத்தான்என்று நாம் பார்க்கிறோம். ஆனால் கடைசியில் அவன்

பிரமித்துப் போனான் என்று நாம் பார்க்கிறோம். அவன் தன்னோடு கூட ஞானஸ்நானம் எடுத்த ஸ்திரி புருஷர்களை ஏமாற்றி வைத்தான். பிலிப்புவையும் வஞ்சித்தான். முடிவாக பரி பேதுருவையும், பரியோவானையும் ஏமாற்ற பரிட்சை செய்தான்.

விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றாலும் தங்கள் இருதயத்தில் ஒரு மாசும் இல்லாதவர்கள் எத்தனை ஆயிரம் பேர் உண்டு? அப்படி விசுவாசித்து ஞானஸ் நானம் பெற்றவர்களுக்கு ஆண்டவர் கூறுவதாவது "*நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி (அப்.8:22) தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒரு வேளை உன் இரு தயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்;* கலாத்தியர் (5:6) *கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.* கலாத்தியர் (3:29) ; *நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.*

விருத்த சேதனம் செய்பவர்களுக்கும். ஞானஸ்நானம் எடுப்பவர்களுக்கும் பொதுவான ஒரு தத்துவம் ரோமர் 2.29ல் கூறப்பட்டிருக்கிறது. *உள்ளத்திலே யூதனானவனே யூதன். எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேததனமே விருத்தசேதனம்: இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது.* அதை ஞானஸ்நானத்தைப் பற்றியும் நாம் கூறலாம். உள்ளத்திலே கிறிஸ்தவனானவனே கிறிஸ் தவன். எழுத்தின்படி உண்டாகாமல், தண்ணீர் முழுக்கினாலல்லாமல் ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் ஞானஸ் நானமே ஞானஸ் நானம். இதை நாம் மனதில் கொள்வோமானால் ஞானஸ்நானத்தைப் பற்றிய தர்க்கங்களும் மன வேறுபாடுகளும் முழுவதுமாக போய்விடும் என்று கூறாவிட்டாலும் பெரிதுமாக மறைந்து போகும் என்பதற்கு ஐயமில்லை.

கேரளத்திலே மிகவும் பிரசித்திபெற்ற ஒரு எழுப்புதல் உபதேசியார் "*மாமன்*" அவர்கள் குழந்தைகளிடையும், பருவம் வந்தவர்களிடையும் எடுக்கும் ஞானஸ்நானத்தைப் பற்றி கூறிய ஒரு திருஷ்டாந்தத்தைப் பற்றிக் கூறுகிறேன். இந்தப் பூமியில் இரண்டு விதமான மிருகங்களை நாம் வீடுகளில் தினந்தோறும்

29 பார்க்கிறோம், வளர்க்கிறோம். ஒன்று ஆடு, மற்றொன்று எருமை. ஆடு தன் குட்டியைப் பெற்றவுடன் தன் நாக்கால் நக்கி உலர்த்தும். பின்பு அந்த ஆட்டின் குட்டியை நாம் வீட்டிலோ, ஆற்றிலோ குளிப்பாட்டுவதில்லை. இருந்தாலும் மனிதர்கள் விரும்பி எடுத்து வளர்க்கும் ஒரு சுத்தமுள்ள மிருகம் ஆடு.

எருமையோ எந்த இடத்தில் தண்ணீரைக் கண்டாலும் அதில் மூழ்கி எழுந்திருக்கும். அப்படியிருந்தும் அது ஒரு நாள் 30 தடவை தண்ணீரில் மூழ்கி எழுந்திருந்தாலும் அதின் துர்நாற்றம் நீங்குவதில்லை. கூடுதலாக இதைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லப்போவதில்லை. நீங்களே தீர்மானித்துக் கொண்டால் போதும்.

வானத்திலும். பூமியிலும் சகல அதிகாரமும் கிடைத்த பின்பு நம் இயேசுகிருஸ்து ஞானஸ்நானத்தைப் பற்றிக் கொடுத்த கட்டளை பரி. மத்தேயுவின் சுவிசேஷத்தில் மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது.

நம்முடைய திருச்சபையானது அந்தக் கட்டளையை அதே ரீதியில், அதே வழியில் சிறிதும் வித்தியாசம் மாறுபாடில்லாமல் நடத்திக் கொண்டு வருகிறது என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய காரியம். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி

(1) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினாலே அவர்களுக்கு ஞானஸ் நானங்கொடுத்து

(2) நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதை ஒரு எழுத்தும் பிசகாமல் நம் திருச்சபை அனுசரித்து வருகிறது.

*இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்* என்றும் நம் அருமை ரட்சகர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

# அத்தியாயம் இரண்டு

# ஓய்வு நாள்

*மாற்கு 2: 27,28*
*மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது; ஆகையால் மனுஷ குமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்.*

கிறிஸ்தவருடைய ஓய்வு நாளைப்பற்றி வேத வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு பேச விரும்புகிறேன்.

சனிக்கிழமையை ஓய்வு நாளாக வைத்துக்கொண்டிருக்கிற ஏழாம் நாள் அத்வந்து சபையினரைப் பற்றிய விஷயங்கள் முதலாவது பேசவேண்டியிருக்கிறது. Mrs. எலன் ஒயிட் என்ற அமெரிக்க அம்மையார் ஒரு தரிசனம் கண்டார்கள். உலகம் முழுவதும் ஓய்வு நாளைப் பற்றிய கற்பனை மீறிக் கொண்டிருப்பது அவர்களுடைய இருதயத்தை இளக்கியது. அன்று முதல் அவர்கள் நித்திய நியமமாய் ஆண்டவர் கொடுத்த இந்த கற்பனையை ஆதரிக்க வேண்டுமென்று எல்லோரிடத்திலும் உபதேசிக்கத் தொடங்கிய போதுதான் இந்த ஏழாம் நாள் சபை தோன்றியது. னுச. ஆடைடநச இந்த உபதேசத்தை ஏற்றுக்கொண்டு இதனுடைய தலைவராக விளங்கினார்.

நித்திய நியமமாய் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட இந்த கற்பனைகளை முழுவதுமாக மீறவோ அல்லது ஏழாம் நாளை முதலாம் நாளாக மாற்றி ஆதரிப்பதற்கோ, ஒருவருக்கும் அதிகாரம் இல்லை என்று அவர் கூறினார். ஆனால் நித்திய நியமமாய் இஸ் ரவேல் ஜனங்கள் ஆசரித்து வந்த பல காரியங்களை கிறிஸ்துவின் சீஷர்கள் அவர்கள் ஜீவிய காலத்திலேயே மாற்றியும், சிலவற்றை முழுவதுமாக நிறுத்தியும் போட்டார்கள். அதில் மிகவும் முக்கியமான ஒரு காரியத்தை மட்டும் நாம் விவரிப்போம்.

ஆதியாகமம் 17: 7-14 வரை உள்ள வாக்கியங்களில் "*விருத்த சேதனம்*" நித்திய நியமமாய் யூத ஜாதிக்கு (இஸ்ரவேல் சபைக்கு) கட்டளை இடப்பட்டிருந்தது. ஆனால் கிறிஸ்து சபை ஆரம்ப

காலத்திலேயே கிறிஸ்து மதத்தை ஏற்ற மூன்று யூதத் தலைவர்கள் (பரி. யாக்கோபு, பரி. பேதுரு, பரி. பவுல்) அது அவசியமில்லை என்று வாதித்து அதை கிறிஸ்து சபையில் நிறுத்தியதையும் அப்போஸ்தல நடபடிகள் 15ம் அதிகாரத்தில் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இந்த விருத்தசேதனம் நிறுத்தும் தீர்மானத்தை சரியென்று ஏற்றுக்கொண்ட ஏழாம் நாள் அத்வெந்து சபையானது, ஓய்வு நாளை யூதரின் ஓய்வு நாளான ஏழாம் நாளிலிருந்து (சனி) முதலாம் நாளுக்கு (ஞாயிறு) மாற்ற கிறிஸ்துவுக்கோ அல்லது அவரது அப்போஸ்தலருக்கோ அதிகாரமில்லை என்று கூறுவது முற்றிலும் சரியல்ல.

வாரத்தின் முதல்நாளாக மாற்றி கிறிஸ்தவ ஓய்வு நாளாக அனுசரித்த முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்துவும் தன்னுடைய அப்போஸ்தலர்களுடனே பிரசன்னமாயிருந்தார்.

ஓய்வு நாளுக்கும் அவர் ஆண்டவராய் இருந்ததனாலே ஓய்வு நாளை மாற்றுவதற்கு அதிகாரம் உண்டு என்று தெளிவாகிறது அல்லவா. கிறிஸ்து தான் “விருத்தசேதனம்” செய்துகொண்டும் விருத்தசேதனத்தை நிறுத்த தன் உபதேசங்களில் ஓரிடத்திலும் சொல்லாமலும் இருந்த நிலையில் அவர் பரலோகத்திற்கு சென்ற பின்பு அப்போஸ்தலர் மட்டும் இந்த நித்திய நியமத்தை நித்தியமாக திருத்திவிட்டார்கள் என்பது நமக்கு தெரிந்திருக்க வேண்டும்.

வேறொரு செய்தி இவர்களைப் பற்றி சொல்ல வேண்டுமானால் சபையாக இவர்கள் சைவ உணவு உட்கொள்பவர்கள். சபையாக இவர்கள் மாமிசங்களை உபயோகிக்க முடியாது என்பது பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. 1 தீமோத்தேயு 4: 3ல் குறிப்பிட்டிருக்கிற கூட்டம் இவர்கள் தானோ என்று சொல்வதற்கு இடமுண்டு.

ஓய்வு நாள் முதன்முதலாக ஆதாமுக்கு ஏதேன் தோட்டத்தில் வைத்துக் கொடுத்ததாகும். பின்னால் சீனாய் மலையின்மேலே கடவுள் அதைப் புதுப்பித்து யூத ஜாதிகளுக்குக் கொடுத்தார். அது மனிதருடைய (சந்தோஷ மனமகிழ்ச்சியின் நாளாக வாழ்க்கைக்காக) தேவன் கொடுத்தார். இது மனிதர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகக் கருதப்பட்டது. மனிதன் ஓய்வு நாளுக்காக நியமிக்கப்பட்டவனல்ல.

இரண்டாவது மாற்கு 2: 28ம் வாக்கியத்தில் இன்னும் விவரமாக கூறப்பட்டிருக்கிறது

*மனுவுகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார்.* யூதர்களுடைய கரிசனமும் குரூரமுமான கற்பனைகளிலிருந்து விடுவிக்க தனக்கு அதிகாரம் உண்டு. அது தன்னுடைய நாள், தான் உண்டாக்கிய நாள், தான் ஸ்தாபித்த நாள். அதுமட்டுமல்லாமல் அதை ஏழாம் நாளிலிருந்து முதலாம் நாளாக மாற்ற தனக்கு அதிகாரமுண்டு. இந்த காரியங்களை நாம் மாற் 2: 28ம் வாக்கியத்தில் காண்கிறோம். ஆனால் இயேசு கிறிஸ்து இதை யூதர்களுக்கு கூறிய சமயத்தில் அவர்களுக்கு இது தெளிவாய் விளங்கவில்லை. அல்லது அப்பொழுதே அவரைக் கொலை செய்ய எத்தனித்திருப்பார்கள். உடன்யிருந்த சீஷர்களுக்கும் இது விளங்கவில்லை. அவருடைய சீஷர்கள் எல்லா காரியங்களையும் நம்முடைய இயேசுயின் பரமேறுதலுக்குப் பின்பே அறிந்து கொண்டார்கள். (After His ascension they remembered His words-Luke).

ஓய்வு நாள் ஏதேன் தோட்டத்தில்தான் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டது. ஆதியாகமம் 2:3ல் அது விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஓய்வு நாள் ஆதியும் அந்தமுமாக அங்கேயே முடிந்தது. ஏனென்றால் அந்த ஏதேன் தோட்டத்திலே அவர்கள் அதிக நாள் ஓய்வு நாட்களை ஆசரிக்க முடியவில்லை. வானமும் பூமியும் உன்டாக்கப்பட்டது. சூரியனும் தன் சலனங்களை அறிந்து பிசகாமல் நகர்ந்தது. சந்திரனும் தன் சலங்களையும் அறிந்து பிரகாசிக்கத் தொடங்கியது. பூமி மிகவும் அழகாகத் தோன்றியது. தான் சிருஷ்டித்த இவைகள் எல்லாவற்றையும் தேவன் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. ஆறு நாட்களில் இவைகள் யாவும் சிருஷ்டிக்கப்பட்டன. ஏழாம் நாள் அவர் ஓய்ந்திருந்தார். அதை தாம் ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார். சந்தோஷம் ஏற்படக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையில் பாடோ, கண்ணீரோ இல்லாத ஒரு சமயத்தில் இதை ஸ்தாபித்தார். இருந்த போதிலும் அதை அதிக நாள் அனுபவிக்காமல் ஏதேன் தோட்டத்தில் மனிதன் இழந்துவிட்டான். ஆனால் ஓய்வு நாள் அவனைப் பின் தொடர்ந்தது. தேவன் ஓய்வு நாளைப்பரித்தம் பண்ணினார். நம்மை சிருஷ்டித்தவரும், நமக்கு வேண்டியவற்றையும்

அருளினவருமான தேவன் தம்முடைய ஜீவிய காலத்து 7ல் 1 பாகம் தனக்காக ஏற்படுத்தினார். நம்முடைய வருமானத்தில் 10!ல் 1 பாகமே தேவன் விரும்பினார். (லேவி 27: 30)

ஓய்வு நாளை ஆசரிக்கும்படியான உபதேசம் ஏதேன் தோட்டத்திலே ஆதாமை வைத்து அளித்தபோதிலும், கொஞ்சகாலம் கழித்து சீனாய் பர்வதத்திலே அதை மீண்டும் புதுப்பித்து மனிதவர்க்கத்துக்கு அதை அளித்தார். இந்த உபதேசத்தை தேவன் தன்னுடைய கைகளால் கற்பலகைகளிலே எழுதிக் கொடுத்தார். இந்த ஓய்வு நாள் நாம் லௌகிக காரியங்களிலிருந்து வேறுபட்டு தெய்வ வழிபாட்டிலும் தியானத்திலும், ஜெபத்திலும் ஆதாரதனையிலும் ஈடுபட தேவன் நமக்கு அளித்த ஒரு பெரும் பரிசாகும். இது யூதர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டதல்ல. மனுக்குலம் சிருஷ்டிக்கப்பட்ட காலம் முதல் ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கி கொடுக்கப்பட்ட நாளாகும். யூதஜனத்தின் தோற்றம் ஆபிரகாமினுடைய காலம் முதற்கொண்டு உள்ளது. அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தேவன் ஓய்வு நாளை கொடுத்தருளினார். யூத ஜாதிகளை எகிப்திலிருந்து விடுவித்ததின் ஞாபகார்த்தமல்ல. மேலும் உலக சிருஷ்டிகள் பூரணமானபின்பு, தேவன் சந்தோஷமாக ஓய்வு நாளை ஏற்படுத்தியிருக்கிறார். இது சம்பந்தப்பட்ட கட்டளைகளை நாம் வாசித்தால் நமக்கு இது எளிதில் விளங்கும்.

கற்பனை என்ன? ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; முன்பு செய்த ஒரு காரியத்தை தொடர்ந்து நடத்தும்படி மனிதன் மறந்துபோகக்கூடாது என்றே தேவன் கற்பித்தார். அந்த கற்பனைக்கு பின்னால் கூறியவை எல்லாம் அதை விவரித்து சொல்வதேயாகும்.

யாத்திராகமம் 12:16ம் வாக்கியத்தை வாசிப்போமானால் ஒரு விசேஷ காரியத்தை அறிந்துகொள்ளலாம். *பஸ்காபண்டிகையின் ஆரம்பகாலத்தில் யெகோவா அருளினது முதலாம் நாளில் பரிசுத்த சபை கூடுதலும், ஏழாம் நாளில் பரிசுத்த சபை கூடுதலும் இருக்கவேண்டும். அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படலாகாது.* இஸ்ரவேல் சபையாக ஆரம்பிக்கப்பட்டதைப்பற்றி இந்த 12ம் அதிகாரத்தில் விவரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

அப். 7:38ல் இதனை ஸ்தேவான் வனாந்திரத்திலே சபை என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்த காலத்திலே வாரத்தின் முதல் நாளையும் ஓய்வுநானாக ஆசரிக்கும்படி, கர்த்தர் கூறினார் என்று நாம் வாசிக்கிறோம். முதல் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்படி தேவன் கட்டளை கொடுக்கும் பொழுது முதலாம் நாளும் பரிசுத்த சபை கூடி தேவனை ஆராதிக்க வேண்டுமென்றும், அன்று ஒரு வேலையும் செய்யாமலும் இருக்க வேண்டுமென்றும் கற்பித்தது, இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் பஸ்கா பண்டிகையைக் கடைசியாய் முடித்து அதற்கு அடுத்த முதலாம் நாள் சம்பவிக்கவேண்டிய காரியங்களை முன்கூட்டியே தெரிந்துதான் சொல்லியிருக்கவேண்டும். லேவி: 28: 39-41 வாக்கியங்களை வாசிக்கும் போது கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும் போதும், முதலாம் நாளையும், எட்டாம் நாளையும் ஓய்வு நாளாக தலைமுறை தலைமுறையாக ஆசரிக்க கட்டளை இட்டிருப்பதைக் காணலாம். யோவான்: 20:19,26 வாக்கியங்களை வாசித்தால் முதலாம் நாளும், எட்டாம் நாளும் கிறிஸ்து தன் சீஷர்களுக்கு, அவர்கள் ஆராதனைக்காக கூடியிருந்தபோது அந்த இடத்திலேயே காட்சியளித்தார் என்று பார்க்கிறோம்.

விருத்தசேதனம் முதலான யூத ஆசாரங்களைக் கிறிஸ்து சபையில் அப்போஸ்தலர்கள் நிறுத்தி வைத்தது கிறிஸ்துவின் பரமேறுதலின் பின்னர்தான் நடந்தது ஆனால் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாள் ஆராதனை அப்போஸ்தலர் ஆரம்பித்தது; கிறிஸ்துவின் முன்னிலையிலும் அவர் பரமேருதலுக்கு முன்பும் உண்டாயிருந்தது. இப்படி வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிறன்று பரிசுத்த சபைகூடி ஓய்வு நாளாக அனுசரிக்க வேண்டும் என்று பழைய ஏற்பாட்டில் காணப்படும் நிழல்கள், கிறிஸ்துவின் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அவர் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பொருளாக வந்தது என்று புதிய ஏற்பாட்டில் காண்கிறோம். யூத ஓய்வு நாளாகிய ஏழாம் நாள் சனிக்கிழமையை கிறிஸ்தவர்களும் யூதர்களைப் போல ஓய்வு நாளாக ஆசரிக்க வேண்டுமென்று கூறும் ஒரே ஒரு கூட்டத்தார் தான் இவ்வுலகில் உண்டு.

ஆனால் அவர்களே பழைய ஏற்பாட்டில் தேவன் கட்டளையிட்ட

35 பிரகாரம் கூறப்பட்டுள்ள சனிக்கிழமையை ஓய்வு நாளாக சரியாக ஆசரிப்பதாகத் தெரியவில்லை.

யூதர்கள் ஓய்வுநாளை எப்படி ஆசரிக்கவேண்டுமென்று பழைய ஏற்பாட்டில் கட்டளைகள் கொடுத்திருக்கிறார்கள். அதில் முக்கியமானவை எவை என்று பார்க்கலாம்:

*(1) யாத்திராகமம் 16:23 அன்று ஆகாரம் சமைக்க கூடாது. முந்திய தினமே சமைக்க வேண்டும்.*

*(2) யாத்தி. 31:14 அதைப் பரிசுத்த குலைச்சலாக்கிறவன் கொலையுண்ணக்கடவன்.*

*(3) யாத்தி. 35:3 அன்று உங்கள் வாசஸ்தலங்களில் நெருப்பு மூட்டாதிருப்பீர்களாக.*

*(4) எண்ணாகமம். 15:32-36 அன்று விறகுகளைப் பொறுக்கக்கூடாது. அப்படிச் செய்தவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.*

*(5) நெகேமியா. 10: 31 எந்தவித தானிய தவசத்தை வாங்கிக்கொள்ளக்கூடாது.*

இனி யூதரபிமார்கள் வேறுசில காரியங்களையும் கற்பித்தார்கள். அதில் மிகவும் முக்கியமான மூன்று காரியங்களைப் பார்ப்போம்.

(1) கால் ஓடிந்திருந்தால் மரத்தால் செய்யப்பட்ட காலை ஓய்வு நாளில் வைத்து நடக்கக்கூடாது அப்படிச் செய்தால் ஓய்வு நாளைக் குறைச்சலாக்குதற்குச் சமம்.

(2) ஒரு தையற்காரன் தன் ஊசியை ஓய்வு நாளில் தன் உடுப்பில் குத்திவைத்தால் அது பரிசுத்த நாளைக் குறைச்சலாக்குவதாக எண்ணப்படும்.

(3) ஓய்வு நாளிலே கோழி, வாத்து இடும் முட்டைகளை சாப்பிட்டால் அதுவும் பரிசுத்த நாளைக் குறைச்சலாக்குகிறதற்குச் சமம்.

அடுத்து கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளானதைப் பற்றி நாம் சிறிது சிந்திக்கலாம்.

புற ஜாதிக்காரர்கள் சூரிய வணக்கம் ஞாயிறு அன்று செய்ததினால் பின்னால் வந்த கிறிஸ்தவர்கள் அதை அப்படியே எடுத்துக் கொண்டதால், ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாக வந்தது என்று ஒரு வாதமுண்டு. இயேசு கிறிஸ்து புற ஜாதிக்காரரின் ஞாயிறான அன்று உயிர்த்தெழுந்ததே இதற்கு காரணம். கிறிஸ்தவர்களுக்கு அது

 நீதியின் சூரியனின் நாளாகும்.

யூதர்களுடைய ஓய்வு நாளை ஏசு கிறிஸ்து எங்ஙனம் ஆசரித்தார் என்று பார்ப்போம். கிறிஸ்து ஓய்வு நாளில் ஜெப ஆலயங்களிலே எல்லாப் பிணியாளிகளையும் சுகப்படுத்தினார்.

*யேசு இவைகளை ஓய்வு நாளில் செய்தபடியால் யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி அவரைக் கொலை செய்ய வகைத் தேடினார்கள். யேவான் 5: 16.*

*அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல் தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்கு சமமாக்கினபடியால், யூதர்கள் அவரைக் கொலை செய்ய வகை தேடினார்கள். யோவான் 5: 17.*

*சூம்பின கையையுடைய மனுஷனை ஓய்வுநாளில் சுகமாக்கியதைக் கண்ட யூதர் அவரைக் கொலை செய்ய ஏரோதியரோடே வகைத் தேடினார்கள். மாற்கு 3: 6*

இதன் முடிவு எப்படி ஆயிற்று?

யூதர்கள் அவர்களது ஓய்வு நாள் முழுவதும் நம்முடைய ரட்சகரைக் கல்லறையில் அடைத்தார்கள் எப்படி சனி இரவு தன் கல்லறையில் மூடியிருந்த கல் தகர்த்தப்பட்டது போல யூதருடைய ஓய்வு நாளும் அன்று தகர்த்தெரியப்பட்டது மத்தேயு 9:15. ;மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும். அப்பொழுது உபவாசிப்பார்கள். இந்த வாக்கியங்கள் கிறிஸ்து தன் பயணத்திற்கு முன்பு கூறிய வார்த்தைகளாகும். மணவாளனைப் பிரிந்து போன வெள்ளி இரவும், சனிக்கிழமை பகலும். சனிக்கிழமை பாதி இரவு வரையிலும் தன் சீஷர்களாகிய யாவரும் துக்கித்தும், உபவாசித்தும் இருந்த நேரமாகும். அப்பொழுது என்று கூறியது சனிக்கிழமை முழுநாளையும் குறிக்கும். அதனால் சனிக்கிழமை கிறிஸ்தவர்களுக்கு சந்தோஷமான ஓய்வு நாளாக இருக்க முடியாது என்று கிறிஸ்துவே கூறியிருக்கிறார். அப்படியென்றால் அவர் துக்கப்பட்ட அந்தநாளை யேசுவின் சீஷர்கள் ஒரு சந்தோஷ தினமாக கொண்டாட முடியுமா ? நம்முடைய நாதரைக் கல்லறையில் அடைத்து வைத்திருந்த தினத்தைப் பரிசுத்த ஓய்வு நாளாக அனுசரிக்க முடியுமா? ``And does it meet and fit/ that disciples of Jesus should keep their

37 day of joy on His day of sorrow and that our Sabbath should be the day when our Lord and Master lay in the grave."

பரி. பவுல் எபிரேயருக்கு எழுதிய நிரூபத்தில் யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்கு உட்படுத்தாதிருந்ததால் வேறொரு நாளைக் குறித்து சொல்லியிருக்க வேண்டியதாயிற்று எபி. 4:7-10. இவ்விடத்தில் அப்போஸ்தலன் யூத சபையைப் பற்றியும் கிறிஸ்தவ சபையைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். முன்பே நற்செய்தியைக் கேட்டவர்கள் ஓய்வு நாளின் சாராம்சத்தை மனதில் வாங்கி அனுபவிக்காததினால் கடவுள் திரும்பவும் ஒரு நாளைக் குறித்து இங்கே சொல்லுகிறார். யேசுவா தலைமை தாங்கின யூத சபை ஓய்வு நாளை சரியாக உணர்ந்து ஆசரிக்காததினாலே யேசுகிறிஸ்து தன்சபைக்கு மற்றொரு நாளை நியமித்துக் கொடுத்தார் என்பதல்லாமல் வேறு என்னவாக இருக்கும்? அப். 17:26. பரி. பவுல் இந்தக் காரியங்களைத் தெளிவாகக் காட்டுகிறார். அவருடைய (யூதருடைய) முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் முன் குறித்திருக்கிறார். அவர்களுக்கென்று பிரத்தியேகமாய் குறித்த காலங்களுக்கும் பிரத்தியேக தினங்களுக்கும் ஒரு முடிவு குறித்திருந்தார் என்பது இங்கே தெரிகிறது.

பரி தாவீது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி கூறும் 118ம் சங்கீதம் 24ம் வாக்கியத்தில் *இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்* இதனுடைய கருத்தை நாம் உள்ளபடி மனதில் கொள்வோமானால் யேகோவா கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் நாளை புதிய ஓய்வு நாளாக முன் கூட்டியே குறித்து வைத்தாரென்றும் அதைத் தன் தாசன் தாவீதைக்கொண்டு தீர்க்கதரிசனமாக நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்றும் நாம் காணலாம். முதலாவது ஸ்தாபித்த ஓய்வுநாள் உலக சிருஷ்டியின்பொருட்டு வாரத்தின் ஏழாம் நாளும், புதிய ஓய்வு நாள் புதிய சிருஷ்டியின் பொருட்டு கிறிஸ்து உயிர்த்தெழுதலின் தினமாகிய வாரத்தின் முதலாம் நாளாக தேவன் கற்பித்துவந்திருக்கிறார்.

பழைய ஓய்வு நாள் பழைய ஆகாயத்தையும் பழைய பூமியின் பொருட்டு என்றால், புதிய ஓய்வு நாள் புதிய வானத்தின் புதிய

 பூமியின் அனுபவத்தில் நம்மை நடத்த யேகோவாவால் உண்டாக்கப்பட்டதாகும்.

நம்முடைய அருமை நாதரின் துக்கம் நிறைந்த நாள், அவரைக் கல்லறையில் அடைத்திருந்த சனிக்கிழமை கிறிஸ் தவர்களாகிய நமக்கு முழு மனதுடன் உறவு கொள்ள முடியுமா. அந்த பயங்கர நிகழ்ச்சிக்குப் பின் ஏசாயா 58:13ல் கூறியதுபோல யூத ஓய்வு நாளை மன மகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்ல கிறிஸ்தவர்களுக்கு முடியுமா? யூத ஓய்வு நாளில் யாதொரு ஆசீர்வாதமும் இந்த உலகத்தார்க்கு கிடைக்கவில்லை. ஆனால் கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் - மரணத்தையும் சாத்தானையும் வெற்றிகொண்ட நாள் - நம்முடைய ஓய்வு நாளும் மன மகிழ்ச்சியின் நாளாகவும் மாறிற்று. அந்த தினம் ஆசீர்வாதமும் சமாதானமும் நிறைந்த நாள்.

அப்போஸ்தலர்கள் தங்கள் புதிய ஓய்வு நாளை எப்படி ஆசரித்தார்கள் என்று பார்க்கலாம். அவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கும், பிரசங்கத்திற்கும், அப்பம் பிட்குதலுக்கும் உபயோகித்தனர். (அப். 20: 7, 1கொரி. 16:2) ஆனால் சனிக்கிழமை ஓய்வு நாளை ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாக மாற்றி ஆசரிக்க வேண்டுமென்று அவர்கள் குறிப்பாக சொல்லவில்லை. அதற்கு தகுந்த காரணமுமுண்டு. ஆதி திருச்சபையில் ஆயிரமாயிரமாக விசுவாசித்து சேர்ந்தவர்கள் யூதர்கள் (அப் 6:7) ஆசாரியர்களில் அனேகரும் விசுவாசத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் எல்லோரும் நியாய பிரமாணத்திற்காக தற்பெருமையுள்ளவர்களாக இருந்தார்கள். அந்த சமயத்தில் அவர்களுக்கு ஒரு புதிய உபதேசம் இடறுதலாயிருக்கும் போலிருந்தது. பரி. பவுல் 1 கொரி 9:20!ல் இதனை மிகவும் விவரமாக கூறியிருக்கிறார். எப்படி இருந்தபோதிலும் அப்போஸ் தலர்கள் காலத்திலேயே வாரத்தின் முதலாம் நாள் ஓய்வு நாளாக ஆசரிக்கப்பட்டு வந்தது. அவர் உயிர்தெழுந்த பின்பு ஞாயிற்றுக்கிழமை தோறும், கிறிஸ்து அவர்கள் கூட்டத்தில் தோன்றி அவர்களை உற்சாகப்படுத்தினார்.

அனேக பெரிய காரியங்கள் இவ்வுலகத்திலே ஞாயிற்றுகிழமைகளில் நடைப்பெற்றன. அதில் முக்கியமாயுள்ள 12 காரியங்களை மட்டும்

39 நான் விவரிக்கிறேன்: (ஈராயிரம் வருடங்களாக திருச்சபை ஆசரிக்கும் முறைமை)

(1) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த தினம் ஒரு ஞாயிற்றுக்கிழமையே.

(2) உயிர்த்தெழுந்த தினமாகிய அந்த ஞாயிற்றுக் கிழமை இரண்டு முறை கிறிஸ்து தன் சீஷர்களுக்கு வெளிப்பட்டார்.

(3) அப்போஸ்தலர்களின் ஆராதனைகளில் கிறிஸ்து பிரசன்னமாயிருந்தது ஞாயிற்றுக்கிழமைகளிலே.

(4) கிறிஸ்து தன் சீஷர்கள் 12 பேரைத் தன் ஊழியத்திற்காக தெரிந்தெடுத்தது ஒரு ஞாயிற்றுக்கிழமைதான்.

(5) பெந்தகோஸ்து நாளில் பரித்த ஆவி அக்கினி ஜுவாலையால் எரி நாக்குகளாக வந்து இறங்கியதும், 3000 பேர் இரட்சிக்கப்பட்டு சேர்ந்து சபை ஆரம்பித்ததும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில்தான்.

(6) உலக சிருஷ்டி ஆரம்பித்தது ஒரு ஞாயிற்றுக் கிழமையில்தான்.

(7) தேவ தூதர் சிருஷ்டிக்கப்பட்டதும் இந்த ஞாயிற்றுக்கிழமையில் தான்.

(8) இஸ்ரவேலருக்கு வானத்திலிருந்து மன்னா அளிக்கப்பட்டதும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் தான்.

(9) இயேசு கிறிஸ்து தன் மலைப்பிரசங்கத்தைச் செய்ததும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் தான்.

(10)அப்போஸ்தலர்கள் சபையாக கூடியதும், அப்பம் பிட்டதும் ஒரு ஞாயிற்றுக்கிழமை தான்.

(11)அப்போஸ்தலர்பரிசுத்தவான்களுக்குவேண்டியகாணிக்கைகளைச் சேர்த்ததும் ஞாயிற்றுக்கிழமைதான். இதிலிருந்து அறியவேண்டியது அப்போஸ்தலர்களும் மற்ற சீஷரும் ஆராதனைக்கும், ஓய்வு நாள் ஆசரிப்புக்கும், கர்த்தரின் உயிர்த்தெழுந்த தினமாகிய வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையையே தேர்ந்தெடுத்தார்கள்.

(12)பரி. யோவான் அப்போஸ்தலர் கர்த்தருக்குள் ஆவிக்குள்ளானதும் ஒரு ஞாயிற்றுக்கிழமையே.

யூதர்கள் ஆறுநாள் வேலை செய்துவிட்டு ஏழாம் நாளை ஓய்வு நாளாக ஆசரித்து தேவ ஆராதனையைச் செய்தார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதலாம்நாள் தேவ ஆராதனைக்கு

செலவிட்டு மற்ற ஆறு நாட்களை தேவ வழியில்விட்டு செலவழிப்பது எவ்வளவு உத்தமமும் நன்மையுமான காரியமாகும். ஆதிகால சபைப் பிதாக்களாகிய இக்னேஷியசும் அயரேனியசும் மற்ற பல பழைய எழுத்தாளர்களும் வாரத்தின் முதலாம் நாளை ஓய்வு நாளாக ஆதரித்தார்கள் என்று வெகு தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அப்படி ஏழாம் நாளை மாற்றி வாரத்தில் முதலாம் நாளை ஓய்வு நாளாக ஆசரித்து வந்ததால் கிறிஸ்தவர் களுக்கு கூடுதலான சக்தியும் கிறிஸ்தவ மதத்திற்கு கூடுதலுமான பிரசாரமும் பெருகிற்று. யேசு கிறிஸ்து தன் சீஷர்களின் மூலமாக, தான் உயிர்த்தெழுந்த நாளை நம்பிக்கையுடனும் ஆராதனையுடனும், மன மகிழ்ச்சியுடைய நாளாக மாற்றியது தன் உபதேசத்திற்கு ஏற்ற விதமாகப் பொருந்தியிருந்தது. தான் ஓய்வு நாளிற்கும் ஆண்டவராய் இருக்கிறார். அவர் தேவாலயத்தைவிட உயர்ந்தவர். எவருக்கும் நன்மை செய்ய அனுமதிக்காத யூத ஓய்வு நாளை, கிறிஸ்தவர்களும் பின்பற்றி இருப்பார்களானால் சபையின் நிலை எப்படி இருந்திருக்கும்?

ஆதி 2:3ம் வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு தேவன் எல்லா சனிக்கிழமையிலும் ஒரு வேலையும் செய்யாமல் இருந்தார் என்று யூதர்கள் விசுவாசித்தார்கள். ஆனால் கிறிஸ்து கூறியது என்ன ? யோவான் 5:17 என் பிதா இதுவரை கிரியை செய்து வருகிறார். நானும் கிரியை செய்து வருகிறேன்; என்றார். ஓய்வு நாளன்று யேகோவாவும் வேலை செய்கிறார் என்றதால் கிறிஸ்துவும் கிரியை செய்து வருகிறார் என்றார். தேவனுடைய நன்மையான கிரியைகள் ஒவ்வொரு நிமிடம் தவறாது நடக்கவேண்டும், நடந்து கொண்டுமிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் கொலோசெயர் சபையாரும் கலாத்திய சபையாரும் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள் என்றாலும் பழைய யூத பிரமாணங்களை நிறைவேற்ற விரும்பினார்கள். சில கள்ள யூதர்கள் அவ்வாறே உபதேசித்தார்கள். கொலோசெயர் 2: 16,17ல் பரி. பவுல் இதைக் குறித்து தெளிவாக எழுதியிருக்கிறார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஓய்வு நாளை ஆசரித்ததினால் யூதர்கள் அவர்களைக் குற்றப்படுத்தினதாலே தான், *ஓய்வு நாட்களைக் குறித்தாவது ஒருவரும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக.*

 *அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது.* என்று பரி. பவுல் எழுதுவதற்கு காரணமாகயிருந்தது. சனிக்கிழமையான ஓய்வு நாள் நிழலாகவும்,உயிர்த்தெழுந்த ஞாயிறு ஓய்வு நாள் பொருளாயும் மாறினாதால் பரி. பவுல் இவ்வளவு தெளிவாக இதைக் கூறுகிறார்.

ஓய்வு நாளை ஆசரிப்பது நம்முடைய கிறிஸ்தவ வாழ்விற்கு மிகவும் அவசியமானதொன்றாகும். தேவனுடைய நாளை தனியாக எடுத்து ஆசரிப்பது என்பது தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பின் மூலம் உண்டானது. ஏதேன் தோட்டத்திலே ஒரு சந்தோஷ அனுபவத்தில் கூட ஒரு பிரத்தியேக நாளை தேவ சமூகத்திற்காக மனிதனுக்கு அவசியமென்று கண்டு கொடுக்கப்பட்டது.

ஏதேன் தோட்டத்திலே ஒரு சில மரங்களின் கனிகளைப் பறித்து புசிக்கவும் கண்ணைக் கவரும் அழகான பூக்களைப் பறித்து மனோகரமான சூழ்நிலையில் உள்ள காலத்தில் ஒரு தனிப்பட்ட நாளை, வாரத்தின் ஒரு நாளை, தேவ சமூகத்திற்கு அவசியமென்றால் கற்பனைகளை மீறின மனிதன் சாபத்தின் மூலம் முள்ளும் குருக்கம் நிறைந்த பூமியில் தன் நெற்றியின் வியர்வை மூலம் சாப்பிட வேண்டிய மனிதன், சோர்வுள்ளவனும் பலவீனமுள்ள மனிதன், வாரத்தில் ஒரு நாள் உலக காரியங்களிலிருந்து விடுபடவும், ஆத்துமாவிற்கு அடுத்த காரியங்களில் அனலுடையவனாக இருக்கவும், ஒரு ஓய்வு நாள் எவ்வளவு அவசியம் என்று நாம் அறிந்துகொள்ள கஷ்டப்படவேண்டியதில்லை.

தேவன் தன் மிகுந்த அன்பினால் மனித வர்க்கத்திற்கு ஈந்த இந்த ஓய்வு நாள் மனிதர்க்கு மட்டுமல்ல சகல மிருகங்களுக்கும் சகல உயிரினங்களுக்கும் பிரயோஜனமாயிருக்கிறது. மாயையிலிருந்து விடுதலையாவதற்கு முன்பு மனிதனுடன் சம்மந்தப்பட்ட எல்லா மிருகங்களுக்கும் வாரம் தோறும் இந்த ஓய்வு நாளின் பயன் உண்டு. மனிதர்களுடன் தேவனுடைய கட்டளை என்ன? (யாத்திரா. 20:10) *நீயானாலும் உன் குமாரனானாலும் உன் குமாரத்தியானாலும்,உன் வேலைக்காரனானாலும் உன் வேலைக்காரியானாலும் உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்*

இந்த ஓய்வு நாள் இனி நமக்கு வரும் நித்திய ஓய்வின் நிழலாயிருக்கிறது. இந்த உலகத்தின் ஆத்ம வளர்ச்சிக்கும் வாரத்திற்கு ஒரு நாள் கிடைத்திருக்கிறது. ஆனால் மேலுலகத்தில் நாம் பிதாவோடு இரவும் பகலும் சேர்ந்து வாழும் அந்த அனுபவத்தை பேசும்பொழுது நித்திய ஓய்வு நாள் எவ்வளவு இன்பமாயிருக்கிறது. நம் இரட்சகரின் உயிர்த்தெழுந்த நாளிலே எத்தனையோ ஆயிரக்கணக்கானோர் நித்திய ஜீவனுக்கு நடத்தப்படுகிறார்கள். இந்த பரிசுத்ததினத்தில் நம் பாவங்களும் பாவச் சுமைகளும் நம்மைவிட்டு நீங்கிப் போகும். இந்த திவ்விய தினத்தில் நாம் சந்தோஷமாக இருப்போமாக. அது யெகோவா உண்டாக்கிய நாள்.

ஒரு வயது வந்த அம்மாள் ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆலய ஆராதனை முடித்து வெளியில் வெகு சோர்வாய் இருப்பதைக் கண்டு பாதிரியார் அதன் காரணமென்ன வென்று வினவினார். அதற்கு அந்த மாது கூறியதாவது: ஐயா ! இந்த உலகத்திலே என்னுடைய ஓய்வு நாட்கள் எப்பொழுது முடியுமென்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்; என்றாள். ஆம், எத்தனையோ ஆயிரமாயிரம் மக்கள் அடுத்து அனுபவிக்கப்போகும் அந்த நித்திய ஓய்வு நாளுக்காக காத்திருக்கிறீர்கள். சூரிய அஸ்தமனத்தோடு இவ்வுலகத்தின் ஓய்வு நாள் முடிகிறது. ஆனால் நாம் எதிர்பார்த்து இருக்கும் நித்திய ஓய்வு நாளிலே சூரிய அஸ்தமனமே இல்லை. அவ்விடத்தில் சூரியனும், சந்திரனும் அவசியமில்லை. தேவ மகிமையே அதை பிரகாசிப்பிக்கும். ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. யூத ஜனங்கள் வெகு பயத்துடன் ஓய்வு நாளை ஆசரித்தார்கள். சிட்சையின் மூலமாகவும் பயமும் கரிசனமுமுள்ள உபதேசங்களைக் கொண்டு அவர்கள் ஓய்வு நாளை ஆசரிக்க முற்பட்டார்கள். நாமோ, நம்முடைய ரட்சகரிடத்தில் உள்ள சிநேகத்தால் பிணைக்கப்பட்டு நம் ரட்சகரின் நாளை!அவர் சர்வ மகத்துவத்தோடு உயிர்தெழுந்த நாளை சந்தோஷத்திலும் சமாதானத்திலும் உண்மையான ஆராதனையிலும் ஊழியத்திலும் செலவழிப்போமாக.

## அத்தியாயம் மூன்று

# யெகோவா சாட்சிகள்

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத் தலைவர் Charles Russell என்னும் ஒரு அமெரிக்கராவார். அவர் கி. பி. 1852லிருந்து 1916 வரை வாழ்ந்து வந்தார். திரித்துவ விசுவாசம், இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவம், கிறிஸ்துவின் பலியான மரணம் (Atonement) சரீரத்தின் உயிர்த்தெழுதல், நித்திய நரகம் என்பவைகளைப்பற்றி கிறிஸ்துவ சபை உபதேசங்கள் வேத புத்தகத்தை ஒத்ததல்ல என்று ரஸல் கூறியதால் இப்பேர்ப்பட்ட ஒரு குழு உலகினில் உண்டாயிற்று.

பென்சில்வேனியாவில் 1884ல் பதிவு செய்த "*சீயோன் வாச் டவர் டிராக்ட் சொஸைடி*" கூட்டத்தைச் சேர்த்தவர்களே இப்பொழுது *யெகோவா சாட்சிகளின்* கூட்டம் என்று உலகம் முழுவதும் அழைக்கப்படுகிறார்கள்.

1914, அக்டோபர் 31 தேதி பாஸ்டர் ரஸல் மரித்தவுடன் Mr. Joseph Franklin Rutherford இந்த கூட்டத்தில் தலைமை இடத்தை ஏற்றுக்கொண்டார்.

ரஸலின் அநேக கணக்குகளும் மற்றும் பல தீர்க்கதரிசனக்களும் பிழையாக இருந்தது என்று 1914ல் பலருக்கும் தெரிந்ததால் இந்த சபையின் வளர்ச்சியும் தளர்ந்து போயிற்று. ரூதர் போர்டின் உபதேசங்களும் ரஸலின் உபதேசங்களும் பல விஷயங்களில் முன்னுக்குப் பின் முரணாக இருந்தது. அதனாலும் இச்சபையின் வளர்ச்சி அவர்கள் விரும்பியபடி வளரவில்லை.

எந்த ஒரு துர் உபதேசங்களுக்கும், அபத்தமான காரியங்களுக்கும் செவி கொடுத்து மக்கள் அதை விரும்பி ஏற்க சாத்தான் மக்களை தூண்டி ஏவுகிறான் என்பதற்கு இக்கூட்டம் ஒரு நல்ல சான்றாகும். இக்கூட்டத்தின் உபதேசங்களை நல்ல படியாக நாம் ஆராய்ந்து பார்த்தால் பரி. பேதுரு சொல்வது போல "*அவன் சொன்னவைகளில் சில காரியங்கள், அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது. கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்றவேதவாக்கியங்களை புரட்டுகிறது போலத் தங்களுக்கு கேடு வரத்தக்கதான இவைகளையும் புரட்டுகிறார்கள்*" என்பது அப்படியே நித்திய ரட்சகராகிய கிறிஸ்துவை

 விசுவாசிக்கும் நாமும் சொல்ல வேண்டியிருக்கிறது.

1942ல் ரூதர் போர்டு மரித்தபோது Nathan H. Knorr என்னும் ஒருவர் இதற்கு தலைவராக மாறினார். இவருடைய இந்தக் கூட்டம் "*யெகோவாவின் சாட்சிகள்*" என்று மிகவாக அறியப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட யெகோவாவே தெய்வம் என்றும் தாங்கள் மட்டுமே அந்த ஏக தெய்வத்தை வெளிப்படுத்துகிறவர்கள் என்ற நிலையிலே அந்த யெகோவாசாட்சிகள் இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்து சமயத்தைப் பின்பற்றாததினால், அரசு இவர்களை கிறிஸ்தவர்கள் திருமணச் சட்டத்தில் சேர்க்கவில்லை. அதனால் இந்தக் கூட்டத்தார் பதிவுத் திருமணமே செய்து வருகிறார்கள். ஆபிரகாம் காலம் தொட்டு இன்று வரையில், பழைய ஏற்பாட்டின் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற யெகோவாவின் ஆராதனைக்காரராகிய யூதரில் ஒருவர் கிறிஸ் தவர்களிடையே வந்து கிறிஸ்துவின் தெய்வத்துவத்தைப் பற்றின புதிய ஏற்பாட்டின் உபதேசங்கள் பிழையானது என்று கூறினால் ஒரு கிறிஸ்தவனாவது அதை ஏற்றுக் கொள்வானா? அப்படியானால், யூதரைப்போல் கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை மறுதலிக்கும் கிறிஸ் தவரல்லாத இவர்களின் உபதேசங்களுக்கு கிறிஸ்துவர்களாகிய நாம் எப்படி செவி கொடுக்க முடியும்?

இவ்வளவையும் கூறியபின் இவர்களுடைய உப தேசங்களைப் பற்றி வேத புத்தகத்தின் துணை கொண்டு நாம் சிந்திக்கலாம்.

*கிறிஸ்தவர்களாகிய நாம் யெகோவா சாட்சிகளாக இருக்க வேண்டுமென்று புதிய ஏற்பாட்டில் ஒரு உபதேசமும் கிடையாது. மற்றபடி நாம் கிறிஸ்துவின் சாட்சிகளாக இருக்க வேண்டுமென்பது தான் புதிய ஏற்பாட்டின் தெளிவான உபதேசங்கள். "நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*" அப். 1:8. இவர்களுடைய முக்கிய உபதேசங்களெல்லாம் வேத புத்தகத்திற்கு எதிரானது. அதற்கு உதாரணமாய் சில காரியங்களை மட்டும் எடுத்து காண்பிக்க நான் விரும்புகிறேன்.

**கிறிஸ்துவினுடைய தெய்வத்துவம்:**

யெகோவா சாட்சிகளின் போதனையின்படி யேசு கிறிஸ்து

 தெய்வமல்ல. அவர் படைக்கப்பட்ட ஒரு மனிதனே ஆவார்.

இந்த உபதேசங்களை ஏற்றுக் கொள்வதற்கு திரித்துவ உபதேசத்தை முழுவதும் அவர்கள் தள்ளிவிட வேண்டியதாயிருந்தது.
‘

‘*திரித்துவ உபதேசத்தின் மூலகர்த்தா சாத்தானே*’’ (Let God Be True Page 82) இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தைப்பற்றிய உபதேசங்கள் வேத புத்தகத்தில் தெளிவாய் கூறப்பட்டிருக்கின்றன. இந்தக் கூட்டத்தாரின் சொந்த மொழி பெயர்ப்பான வேத புத்தகத்தில் கூட கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேத வாக்கியங்கள் கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது. பரி. தோமா “என் ஆண்டவரே என் தேவனே” என்று யோவான் 20: 28ல் கூறுகிறார். கொலே 2 : 9ல் “*தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப்பிரகாரம் அவருக்குள் வாசமாயிருக்கிறது*’’ என்று வாசிக்கிறோம்.

பரி. பவுல் தீத்துவிற்கு எழுதும்பொழுது கிறிஸ்துவை “*மகா தேவனும் இரட்கருமாகிய இயேசு கிறிஸ்து*’’ என்று தீத்து 2:13ல் கூறுகிறார்.

வேத புத்தகத்தில் பல பாகங்கள் இயேசு கிறிஸ்துவினுடைய தெய்வத்துவத்தைத் தெளிவாகக் கூறுகின்றன. ஏசாயா 9:6ல் அவர் ‘‘*வல்லமையுள்ள தேவன்*’’ என்று நாம் பார்க்கிறோம்.

மத்தேயு 1:23ல் கடவுள் நம்மோடிருக்கிறார் என்று பொருள் உள்ள இம்மானுவேல் என்று பேரிடுவாயாக என்று பார்க்கிறோம்.

யோவான் 10:3ல் *நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்* என்று கிறிஸ்துவே கூறியிருக்கிறார். அவர் தேவனை தமக்கு சமமாக்கினபடியால் யூதர்கள் அவரைக் கொலை செய்யும்படி அதிகமாய்த் தேடினார்கள் என்று யோவான் 5: 18ல் பார்க்கிறோம்.

யோவான் 1:1ல் *அந்த வார்த்தை தேவனாயிருந்தது* என்று பார்க்கிறோம். (1) யோவான் 5:20ல் இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார் என்று எழுதப்பட்டிருக்கிறது. இங்கே மேலே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் மட்டுமே, கிறிஸ்துவின் தெய்வத்துவத்தைப் பற்றிய இக்கூட்டத்தாரின் உபதேசங்கள் பிழையானது என்று சாதாரண மக்கள்கூட அறிய போதுமானது.

கிறிஸ்துவினுடைய தெய்வத்துவத்தை மறுதலிக்கிற இவர்கள்

 அந்திக் கிறிஸ்துவர்களும் பொய்யர்களுமாவார்கள் என்று பரி. யோவான் கூறுகிறார் (1 யோவான் 2 : 22-23)

**யேசு கிறிஸ்துவின் ஒப்புரவாக்குதலின் மரணம்**

மனிதனாகிய கிறிஸ்துவின் ஒப்புரவாக்குதலின் மரணத்தால் ஒருவருக்கும் நித்திய ஜீவனின் நிச்சயமோ அனுக்கிரகமோ கிடைப்பதில்லை. (Studies in the scriptures Vol.I Page 50) எல்லாக் காரியங்களிலும் ஆதாமுக்கு சமமான கிறிஸ்துவின் பலியானது மனிதர்களுக்கு அவரவர்கள் செய்யும் சொந்த முயற்சியால் நித்திய ஜீவனை அடைவதற்கு உதவியாக இருக்கிறது என்று அவர்கள் தெளிவாய் கூறுகிறார்கள்.

பரி. யோவான் 3:14!16 வாக்கியங்களில் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் நித்திய ஜீவனை அடைவான் என்று தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. ரட்சிக்கப்படும்படிக்கும் நித்திய ஜீவனை அடைந்து கொள்ளும் பொருட்டும் இயேசு கிறிஸ்துவின் நாமமே அல்லாது வேறொரு நாமமும் மக்களுக்கு கொடுக்கப்படவில்லை என்பது எவ்வளவு தெளிவான சத்தியமாக இருக்கிறது (அப். 4: 12, யோவான் 3:36, 5:24)

**இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்**

இதை அப்படியே முழுதுமாக யெகோவா சாட்சிகள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் கூறுவதாவது கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட கிறிஸ்துவின் உடல் உயிர்த்தெழாமல் அங்கேயே இருந்திருந்தால் தன் சீஷர்களின விசுவாசம் தகர்ந்து போயிருக்கும். அது காற்றில் மறைந்து போனதோ தேவ அன்பின் அடையாளமாக எங்கேயோ மறைத்துப் பாதுகாக்கப்பட்டிருக்கிறதோ என்று ஒருவர்க்கும் தெரியவில்லை என்கிறார்கள். அப்பேர்பட்ட அறிவு நமக்கு அவசியமில்லாதது. (Studies in the Scriptures Vol II Page 129)

மேலே கூறிய வியாக்கியானங்கள் வேத புத்தகத்திற்கு எவ்வளவு எதிரானது என்பதை மனதில் கொள்ள எந்தக் கிறிஸ் துவர்களுக்கும் எளிதானதே. கிறிஸ்து சரீரப் பிரகாரமாய் உயிர்த்தெழுந்தார் என்றும், அநேக சமயங்களில் பிரத்தியட்சமாய் சீஷர்கள் முன் தோன்றினார் என்ற காரியங்களுக்கும் பிரத்தியேக

வசனங்கள் தேவை இல்லை. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் தமது அடியார்களுக்குத் தோற்றமளித்த சரீரம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சிருஷ்டிக்கப்பட்டது என்று யெகோவா சாட்சிகள். கூறுகிறார்கள் (Let God Be True Page 143) மேலும் அவர்கள் மனுஷீகமாய் அவர் உயிர்த்தெழவில்லை. ஆவியால் உயிர்த்தெழுந்தார் (Let God Be True Page 272). வேத புத்தகத்திலே உயிர்தெழுதல் என்று கூறுவது சரீர உயிர்த்தெழுதலைக் குறிக்குமே தவிர வேறொன்றையும் குறிக்காது. பரி. லூக்கா 24:36-40 உள்ள வாக்கியங்களை வாசித்தால் இதற்கு வேறு வியாக்கியானங்கள் தேவை இல்லை. பரி. பேதுருவின் எல்லாப் பிரசங்கங்களிலும் தான் எழுதிய எல்லா நிருபங்களிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலைப் பற்றி வெகுதெளிவாக எடுத்துப் பேசினார் (1 பேதுரு 1: 3-5. 1 பேது 1: 21 வாக்கியங்கள் இதற்கு ஆதாரமாய் இருக்கிறது.)

உயிர்த்தெழுதல் இல்லையென்று கிறிஸ்துவின் காலத்திலேயே சதுசேயர்கள் சாதித்தார்கள் என்றும் கிறிஸ்து அவர்களுக்கு சரியாக உத்திரவு அளித்தார் என்றும் மாற்கு 12: 18-27ல் வாசிக்கிறோம்.

## இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

யெகோவா கூட்டத்தாரின் சாட்சி கணக்கின்படி மனுஷ சரீரத்தில் மீண்டும் கிறிஸ்து வெளிப்படுவார் என்பது தெய்வத்தின் ஏற்பாடுகளுக்கு எதிரான தொன்றாகும் (Studies in the Scriptures Vol. II Page 122).

1914 புற ஜாதிகளுடைய காலம் முடிவடைந்தது என்றும் கிறிஸ்துவின் இராச்சியம் ஸ்தாபிதமாகிவிட்டது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். 1874 லிலேயே கிறிஸ்து வந்தார் என்றும் 1914ல் அந்த ராஜ்யத்தின் கிரியைகள் முழுவதுமாக ஆரம்பிக்கப்பட்டது என்றும் அவர்கள் பிரசங்கிக்கிறார்கன் (Id Page 170) 1918ல் பிரேதக் கல்லறையில் தூங்கிக்கொண்டிருந்த கிறிஸ்துவர்கள் ஆத்மீக சரீரத்தில் உயிர் பெற்றவர்களாக கிறிஸ்துவினோடே சேர்ந்தார்கள் என்றும் கூறுகிறார்கள் (See Ch:15 Let God Be True) இன்னும் விவரமாய் இதைப்பற்றி கூறவேண்டுமானால் 1874ல் கிறிஸ்து தன் ஆயிர வருட அரசாட்சிக்காக இந்த பூமிக்கு வந்துவிட்டார் என்று

பாஸ்டர் ரஸல் கூறினார். அப்படியானால் கி.பி. 2874 வரை கிறிஸ்து இப்பூமியில் தன் ஆட்சி பரிபாலனத்தை நடத்த வேண்டும் அல்லவா. ஆனால் 1914ல் ஒரு உலகப் போர் உண்டானதால் அந்த ஆண்டிலேதான் இயேசுவின் ஆட்சி முழு சக்தியில் வெளிப்படுத்தப்பட்டதென்றும் அந்தப்போர் வெளி 20:8 வாக்கியத்தில் கூறியுள்ள. கோகும்மாகோகும் என்பவருமாய் கூட்டு சேர்ந்து உண்டானது என்றும் உபதேசித்தார். அது கிறிஸ்துவிற்கும் சாத்தானுக்கும் உள்ள போர் ஆனதால் அந்தப் போரில் உலக ராஜாக்களுக்கு வெற்றியில்லை என்றும் கூட கற்பித்தார்கள். அதனால் உலக முழுவதில் உள்ள எல்லா இராஜ்யக்காரர்களும் இவர்களுடைய சபைக் கட்டிடங்களை மூடி அவர்கள் பிரசங்கம் செய்வதைத் தடையும் செய்தார்கள். முதல் உலகப் போர் நேசநாடுகளுக்கு வெற்றியாதலால் இந்தக் கூட்டத்தின் பிரசங்களுக்கும் போதகங்களுக்கும் அமெரிக்க அரசாங்கம் மீண்டும் அனுமதியளித்தது. ஆனால் மறுபடியும் 1938லும் இவர்கள் காரியாலயங்கள் மூடப்பட்டு இவர்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

இஸ்ரவேலருக்கும் அரபியருக்கு இப்பொழுதுள்ள சண்டையைப் பற்றி முன்புபோல இவர்கள் பழைய பிரசங்கங்களைத் தொடங்கி இருக்கிறார்கள். ஆனால் அமெரிக்காவும் மற்ற வல்லரசுகளும் இதில் நேரில் தலையிடாததால் இவர்கள் மேல் ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதினால் தான் அவர்கள் நம்மிடையே முழுமூச்சாக வேலை செய்கிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய இவர்களுடைய உபதேசங்கள் வேதப் புத்தகத்தின் ஆதாரத்தைக் கொண்டதல்ல என்பதை நாம் மனதில் வைப்போமானால் வியாக்கியான விளக்கங்கள் ஒன்றும் நமக்குத் தேவை இல்லை. இரண்டு தேவதூதர்கள் சாட்சி பகர்ந்தும், அப்போஸ்தலரும் சீஷர்களும் முழுதுமாய் விசுவாசித்து பிரசிங்கித்து வந்ததுமான ஒரு தெளிவான சத்தியத்தை ஒரு வெட்கமுமில்லாமல் மறுதலித்துச் சாதிக்கும் இந்த உபதேசக்காரர்களுக்கு எப்படி முடியும் என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

1914 முதல் இயேசுக் கிறிஸ்துவின் ஆட்சி இந்த உலகத்தில்

 வெளிப்பட்டது என்று நினைப்பதற்கு ஏதாவது முக்கிய விசேஷங்கள் சம்பவித்ததுண்டா? போர்கள் 1914லிலும் 1938லும் மட்டுமல்ல இன்றுவரை தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

### பரிசுத்த ஆவி

திரித்துவத்தை மறுக்கின்ற இவர்கள் பரிசுத்த ஆவியின் தன்மையையும் மறுக்கிறார்கள். பரிசுத்த ஆவியை தெய்வமாக விசுவாசிக்கும் அப்போஸ்தகருடைய விசுவாசத்தை கிறிஸ் தவர்களாகிய நாமும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அப். 5: 3ம் வாக்கியங்களை நாம் வாசித்தால் பரி பேதுரு பரிசுத்த ஆவியைக் கடவுள் என்று தெளிவாக கூறியிருக்கிறதைக் காணலாம். பரிசுத்த ஆவி தெய்வமாயிருந்ததினால் பரிசுத்த ஆவிக்கு எதிராக அனனியாவும் சப்பீராளும் பாவம் செய்ததால் கடவுளிடத்தில் பாவம் செய்தார்கள் என்று பரி. பேதுரு 4 ம் வாக்கியத்தின் கடைசியில் கூறியிருக்கிறார்.

### நித்திய நியாயத் தீர்ப்பு

அழிவில்லாத ஒரு ஆன்மா மனிதனுக்கு இருப்பதால் அவன் மிருகத்தைக் காட்டிலும் வித்தியாசமுள்ளவன் என்பது வேத புத்தகத்திற்கு ஒத்ததல்ல என்று இக்கூட்டத்தார் போதிக்கிறார்கள் (ளுவரனநைள வை வாந ளுஉசனிவரசநள ஏடிட. ஐ ீயபந 60) இக்கூட்டம் ஒருவித யோசனையும் இல்லாமல் மிருகங்களைப் போலவே மனிதர்களுக்கும் இந்த உலகத்திற்கு அப்பால் ஒன்றுமில்லை என்று சொல்லுவது மிகவும் ஆச்சரியமான காரியம். மனிதர்களை மிருகங்களுக்கு ஒப்பாகக் கருதியும் அப்படியே போதித்தும் வரும் ஒரு கூட்டத்தில் அப்படிப்பட்டவர்களே சேரவும் முடியும்.

வெளி. 20:10, 15, மத்தேயு 25: 46 என்னும் வாக்கியங்கள் இந்த தவறான உபதேசத்தை முறியடிக்கிறது.

பாதாளம் (Sheol) என்று கூறுவது கல்லறை என்றே அர்த்தம் கூறுகிறார்கள். ஆனால் ளுாநழட என்ற பதம் 65 தடவை வேத புத்தகத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாக்கியங்களிலெல்லாம் மரித்தவர்களுடைய ஆத்துமாக்கள் பேசக்கூடிய ஒரு தன்மையில் இருக்கிற ஒரு இடத்தையே காண்பிக்கிறது. உதாரணமாய் எசேக்கியேல் 32:2 ஏசாயா 14:9-10

என்ற வாக்கியங்களை வாசித்தால் அதை நாம் தெளிவாய்க் காணலாம்.

மரித்தவர்கள் மிருகங்களைப் போல மரணத்தோடு முடிவடைந்து போகிறார்கள் என்று அவர்கள் கூறுவதை இயேசுகிறிஸ்து நிராகரித்திருக்கிறார். மத்தேயு. 22: 32ல் வாசித்துப் பார்த்தால் விளங்கும்.

**திரித்துவம்**

முன்பு கூறியதிலிருந்து இயேசு கிறிஸ்து தெய்வமாகவும், பரிசுத்த ஆவியும் தெய்வமாகவும் தெரிந்து கொண்டதால் திரித்துவ உபதேசமும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தக் கூட்டத்தார் சாட்சி கொடுக்கும் யெகோவா (நம்முடைய மொழியில் பிதாவாகிய கடவுள்) கடவுள் என்று அவர் கூறுவதால் திரித்துவ உபதேசம் முழுதுமாய் உறுதி செய்யப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தில் அவர்கள் மொழி பெயர்ப்பிலேயே மூன்று இடங்களிலே தேவன் *நாம்* என்று தன்னைப்பற்றி பன்மையில் குறிப்பிடுகிறார். ஆதி 1:26, 3:22, 11: 7 ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்திலும் ;நாம்; என்று உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது, ஏசாயா 6:8. தெய்வம் பிரிக்க முடியாத ஏகத்துவம் என்ற இவர்களுடைய உபதேசத்தை வேத புததகத்திலுள்ள முதலாம் புத்தகத்தில் முதலாம் அதிகாரத்தில் உள்ள வாக்கியங்களிலேயே மறுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசியின் புத்தகங்களும் திரித்துவ உபதேசத்தை எடுத்துக் காட்டியிருக்கின்றன. குமாரனாகிய கடவுள் இவ்வாறு கூறுவதாக ஏசாயா தீர்க்கதரிசி எழுதியிருக்கிறார். *இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும் அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்* (ஏசாயா 48 : 16)

ஏசாயா 63:9-10 வாக்கியங்களில் பிதாவாகிய தேவனையும், அவர்களுடைய எல்லா நெருக்கங்களிலும் நெருக்கப்பட்ட இரட்சரையும், அவர்கள் கலகம் பண்ணி விசனப்படுத்தின பரிசுத்த ஆவியையும் வெகு தெளிவாக வெவ்வேறாக நமக்கு பிரித்துக் காட்டியிருக்கிறார். திரித்துவ உபதேசத்தை யெகோவா சாட்சிகள் மறுதலிக்கிறதினால் கிறிஸ்துவின் மூலம் உள்ள மீட்பிற்கு உள்ளாகாமல் இவ்வுலகத்தை விட்டுப் போகும் காட்சி கிறிஸ்தவர்களாகிய நமக்கு வேதனையை அளிக்கிறது. சில சில்லரை உபதேசப் பிழைகளோ

அல்லது ஆசாரங்களைக் கைக்கொள்ளுவதில் ஏதோ சிறிய வேறுபாடுகளோ சில சபைகளில் காணப்படுவது வெகு சாதாரணம். ஆனால் இக்கூட்டத்தின் நோக்கம் கிறிஸ்துவ மதத்தின் அடிப்படையான உபதேசங்களைத் தகர்த்து கிறிஸ்து மதத்தையே இவ்வுலகினில் இல்லாமல் செய்வதுதான் என்பதை எல்லா கிறிஸ்து சபை அங்கங்களும் மனதில் கொண்டு நடக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

இறப்போடு அழியக்கூடிய பறவை விலங்கினங்களுடன் தங்களையும் ஒப்பிட்டு நித்தியமாய் அழிந்துபோகும் இந்த கூட்டத்தினரிடையில் நாம் கிறிஸ்துவை சாட்சி பகரவேண்டியது அவசியம். நம்முடைய பட்டணங்களிலே இவர்களுடைய உபதேசத்தால் கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்களிடையே நாம் விரைவாக கடந்து செல்வோமாக. இப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்கப்போகும் பயங்கர தண்டனையைப்பற்றி அவர்களுக்கு அறிவிக்க நாம் காலம் தாழ்த்தக் கூடாது. எபிரெயர் 10:29 தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்.

பரலோக சிம்மாசனத்தைவிட்டு, இந்த மண்ணுலகத்தில் அவதரித்து, அவமானமுள்ளதும் நிந்தையுள்ளதும் துன்பமுள்ளதுமான சிலுவை மரணத்தைச் சகித்து தன்னுடைய திவ்விய ரத்தத்தை மனித வர்க்கத்திற்காகவே ஊற்றிய அன்பராகிய இயேசுவை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஆண்டவர் அவர்கன் கண்களைத் திறக்க வேண்டுமென்று நாம் பிரார்த்திப்போமாக.

## அத்தியாயம் நான்கு

# பிற மொழிகள் பேசும் வரம்

*1 கொரி. 14: 15*
*(மறு பாஷை)*
*நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன். கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன். நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.*

ஆதி கிறிஸ்தவத்தில் பேசிய அந்நிய பாஷையை பற்றி முதலாவது பார்க்கும் முன், தற்போதைய காலகட்டத்தில், தற்போதைய கிறிஸ்தவர்கள் பேசும் அந்நிய பாஷையின் வரலாற்றை அறிந்து விட்டு பேசுவது நமது பதிவுக்கு ஒரு சரியான புரிதலை கொடுக்கும். முதலாவது நூற்றாண்டில் மக்களிடையே இருந்த அந்நிய பாஷை, ஏன் அதற்குப் பின்பு பல நூற்றாண்டுகள் காணப்படவில்லை என்பது ஒரு சங்கடத்திற்குரிய கேள்வியாகும். மிகப்பெரிய ஊழியக்காரர்களான மார்ட்டின் லூத்தருக்கும், ரேனியஸ் ஐயர் அவர்களுக்கும், கால்டுவெல் முதலான பல மிஷனரிமார்களுக்கும் இந்த அந்நிய பாஷை வரம் கொடுக்காமல் போனது ஏனோ என்று தெரியவில்லை.

தற்போது மக்கள் பேசுகின்ற அந்நிய பாஷை என்கின்ற பாஷை ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்றே கூறலாம். உலகம் எங்கிலும் கிறிஸ்தவ மார்க்கம், பல பாரம்பரிய கிறிஸ்தவ திருச்சபைகள் மூலமாக பரவிக் கொண்டிருந்த நேரத்தில், ஒரு புதிய பிரிவு ஒன்று தொடங்கியது. சார்லஸ் பாக்ஸ் பெர்காம் என்பவரும் அவரது மனைவியான ஆக்னேஸ் ஒஸ்மான் என்பவரும் கனாசஸ் எனும் இடத்தில் சொந்தமாக பெத்தேல் வேதாகம கல்லூரி என்ற ஒரு கல்லூரியில் நடத்தி வந்தனர். சார்லஸின் மனைவி ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்களது கல்லூரியில் நடந்த ஒரு ஆராதனை வேளையில் யாருக்கும் புரியாத பாஷையில் பேசிய வார்த்தைகளே தற்போது அந்நிய பாஷை என்று அழைக்கப்படுகின்ற பாசை

ஆகும். இதைப் பற்றி நான் பெரிதாக இந்த பதிவில் கூறப்போவதில்லை. ஏனென்றால் இதைப் பற்றி நீங்கள் அறிய வேண்டுமென்றால் பெந்தேகோஸ்தே திருச்சபையின் வரலாற்றை அதன் ஆரம்பத்தை சந்தேகப்படுவது போல் இருக்கும். சார்லஸின் மனைவி பேசிய, மற்றும் எழுதிய இந்த மொழிகளை பல ஆய்வாளர்கள் வந்து சோதித்தும், அது உண்மையிலேயே ஒரு மொழிதானா என்று பரிசோதித்தும் பார்த்து தோல்வி அடைந்துள்ளனர். ஆனால் தற்போது அதை உண்மை என்று எண்ணி, அதை பேசாதவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல என்று சுபாவம் கொள்ளும் கூட்டத்தினர் பெருகி வருவதே இங்கு பரிதவிக்கத்தக்கது. அறியாத ஒரு பாஷையை புரியாத பாஷை என்று எண்ணி தற்போது பலர் அதைக் குறித்து புதுப்புது வியாக்கியானங்கள் பேசி வருகின்றனர். சரி இப்பொழுது இதன் வரலாற்று தன்மையை ஒதுக்கிவிட்டு இது உண்மையில் நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு தேவையா இல்லையா, இது எதற்காக கொடுக்கப்பட்டது என்பதை பற்றி பார்ப்போம்.

இயற்கையாகவே நல்ல ஆசீர்வாதங்களைத் தீயவழிகளில் மாற்றிவிடுதற்குள்ள சுபாவம் மிகவும் பரிதபிக்கத்தக்கது. சபைகளில் மாத்திரமல்ல. இவ்வுலக சரித்திரத்தில் எல்லாக் காலங்களிலும் இந்த சுபாவம் இருந்ததாகவே நாம் காண்கிறோம். கொரிந்து சபை மற்ற சபைகளைக் காட்டிலும் சிறப்பான வரங்களை உடையதாக இருந்தது. அவர்கள் இப்பேர்ப்பட்ட வரங்களைத் தங்கள் புகழ்ச்சிக்கும் பெருமைக்கும் மாற்றினார்கள். கிறிஸ்துவின் நற்செய்தி பரவுவதற்கு ஒரு அடையாளமாக இருந்த அந்நிய மொழி வரத்தை ஒவ்வொருவரும், தன் வரப்பிரசாதம் என்று வெளிப்படுவதற்கு உபயோகமாக்கிக் கொண்டிருந்தார்கள். இந்த வரத்தை சபையின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தவில்லை. அதைக் கண்டு பரி. பவுல் அவர்களுக்கு எழுதின நிருபத்தில் அந்நிய மொழி பேசுகிறவர்களை அதிக உற்சாகப்படுத்தவில்லை என்று 1 கொரி 14: 15ல் நாம் வாசிக்கிறோம். ''*உலகத்திலே எத்தனையோ விதமான மொழிகள் உண்டாயிருக்கின்றன. அவைகளில் ஒன்றும் பொருளில்லாமலில்லை.*'' (1கொரி 14:10)

நம்முடைய திருச்சபையில் சிறப்பான பிரசங்கங்கள் தவிர

 அந்நிய மொழிகள் பேசும் காரியங்கள் இல்லாததால் கொரிந்து சபையைக் காட்டிலும் நாம் மேலானவர்களே, ஏனெனில், மனிதர்கள் ஒன்று ஆவியோடும் அல்லது கருத்தோடும்தான் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டுமென்று பரி. பவுல் கூறுகிறார். சரியான ஆராதனை என்னவென்றால் ஆவியோடும் கருத்தோடும் செய்யும் ஆராதனைதான். ''*நான் சபையிலே பிற மொழிகளில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்*'' பரி. பவுல் 14:19ல் கூறியிருக்கிறார்.

(1) ஆவியோடும் கருத்தோடும் அதாவது தலையோடும் இருதயத்தோடும் தேவனை ஆராதிக்க வேண்டும். இல்லையென்றால் இருதயம் ஆராதனையில் ஊன்றியிருக்கும் தலையோ வேறு காரியங்களைப் பற்றி சிந்திக்கும். இருதயத்தை நமக்கு தந்தவரே தலையையும் நமக்குப்படைத்தவர். புத்தியுள்ள ஆன்மீக ஆராதனை இல்லை என்றால் அது ஆவியோடும் உண்மையோடும் செய்த ஒரு ஆராதனையாகாது. நம்முடைய புத்தியைச் செலுத்தி செய்யப்படும் தீர்மானங்கள், இருதயத்தின் சலனத்தினால் அங்கீகரிக்கப்படும். அப்படி அது அங்கீகரிக்கப்படாவிட்டால் நம்முடைய ஆராதனை தன்னுள் பரிபூரணப்பட்டதல்ல. நாம் தலையின் மூலமாக எடுத்த பல நல்ல தீர்மானங்கள் இருதயம் கொழுந்துவிட்டு எரிவதன் மூலம் பிரகாசமடையச் செய்யவேண்டும். அப்படியில்லை யென்றால் பாகால் தீர்க்கதரிசிகளின் பலியைப்போல ஆகும். பலிபீடங்கள் உண்டு, யாகபீடங்கள் உண்டு, விறகுகள் உண்டு, மிருகங்களையும் சந்து சந்தாக துண்டித்து விறகின்மேல் அடுக்கியதும் உண்டு. ஆனால் அக்னி இறங்காததினால் அது சரியான யாகமாகவில்லை.

ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில் ஜனங்களின் ஆராதனையை கர்த்தர் இவ்விதமாகக் கூறுகிறார். ஏசாயா 29:13 ''*இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.*'' இருதயத்தின் மாற்றமும், புத்தியில் தெளிவும் நம்முடைய வாழ்விலும் நம்முடைய ஆராதனையிலும் உண்டாகியிருக்க வேண்டும். அப்பொழுதுதான்

55 தேவன் களிகூர்ந்து மனிதராகிய நமக்கு திவ்விய பலன்களை அனுபவிக்குமாறு சூழ்நிலைகளை ஏற்படுத்துவார்.

(2) நம்முடைய திருச்சபையின் ஆராதனை ஒழுங்கு ஆவியோடும் கருத்தோடும் தேவனை ஆராதிக்கும் வழியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும், சுகமுள்ளவர்களுக்கும் பிணியாளர்கட்கும் இந்த திவ்விய ஆராதனையானது மகிழ்ச்சியடையும்படி தேவனுடைய சிறந்த ஊழியர் இதை ஒழுங்காக பிரத்தியேகமாய் வரிசைக்கிரமப்படுத்தி இந்த ஜெப புத்தகத்தை நமக்கு தந்தருளினதாகும். பிரத்தியேகமாக எழுதப்பட்ட பாட்டுகளையும், ஜெப புத்தகத்தையும் சேர்த்து உபயோகிப்பதனால் அதன் கருத்து அறிவுள்ளவர்களையும் அறிவில்லாதவர்களையும் எளிதில் கவரும். எழுதப்படாத ஜெபங்களை மட்டும் ஓவ்வொரு சமயமும் கூறுவோமானால், அப்படிச் செய்பவர்களுடைய அறிவையும், சாமர்த்தியத்தையும் (ability) அனுசரித்து கருத்திலும், வார்த்தைகளை உபயோகிப்பதிலும் வித்தியாசங்கள் இருந்து கொண்டே வருகிறது. எழுதப்பட்ட வழிபாட்டினை செய்பவர்களை ஆட்சேபிக்கும் ஒரு கூட்டம் கிறிஸ்வர்களிடையே இருந்து வருகிறது. இப்படிப்பட்டவர்களுடைய பிரார்த்தனைகள் எழுதப்பட்ட புத்தகங்களிலிருந்து இல்லாவிட்டாலும் அவர்கள் உபயோகிக்கும் வார்த்தைகள் எல்லாம் ஒன்று வேதப் புத்தகத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளோ அல்லது தேவனுடைய விசேஷித்த ஊழியர்கள் உபயோகித்த வார்த்தைகளோ ஆகும். ஒரு தனி ஆளின் தனிப்பட்ட ஜெபங்களை நாம் கூர்ந்து நோக்கினால் அநேகமாக எல்லா சமயங்களிலும் ஒரே வார்த்தைகளை உபயோகிப்பதை நாம் காணலாம். அப்படிச் செய்பவர்கள் அச்சடித்த புத்தகத்தை உபயோகப்படுத்தவில்லை என்று நாம் கூறலாம் மற்றபடி யாவும் ஒன்றே.

இப்படிக் கூறும் இந்தக் கூட்டத்தார் யாவரும் ஒன்று சேர்ந்து முழங்கும் இந்த *அல்லேலுயா* என்ற துதி வார்த்தை தாவிது சங்கீதங்களில் பாடிய எபிரேய பதம். அல்லேலூயா என்று கூறினால் அதன் அர்த்தம் தேவனை துதிப்போமாக என்று கூறுவதாகும். சங்கீதம்

106, 111. 112, 113 யாவும் அல்லேலூயா என்று தொடங்கும் தாவீதின் சங்கீதங்களாகும். இப்பேர்ப்பட்டவர்களின் பாட்டு ஆராதனையில் அவர்கள் அச்சடித்த புத்தகத்தைத் தான் உபயோகிக்கிறார்கள். அதிலே அவர்களுக்குத் தடை ஒன்றுமில்லை.

பிரார்த்தனையைப் பொருத்தவரையில் இயேசுவின் உபதேசங்கள் யாவை என்று நாம் பார்ப்போம். ஒவ்வொரு தனித்த ஆளும் அந்தரங்கத்திலுள்ள பிதாவை நோக்கி ஜெபம் பண்ணவேண்டும்என்றுதன்சீஷர்களுக்குகூறியதைசுவிசேஷங்களில் நாம் தாராளமாய்க் காணலாம். மத்தேயு 6:6 ஆனால் தன் சீஷர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து எப்பொழுதும் செய்யக்கூடிய ஒரு பொதுவான ஜெபத்தை (A Common Prayer) கிறிஸ்துநாதர் தாமே அவர்களுக்கு கற்றுக்கொடுத்தார். அதை நமக்கு அவருடைய சீஷர்களும் அப்போஸ் தலரும் எழுதிக் கற்பித்தார்கள். (மத்தேயு:9 13 லூக்கா 11: 2!4). இந்த பிரார்த்தனையை இப்பொழுதுள்ள புதிய எல்லா சபைக்காரர்களும் தள்ளி விட்டிருக்கிறார்கள். நீங்கள் ஜெபிக்கும் பொழுது இவ்வண்ணம் ஜெபம் செய்யுங்கள் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் உள்ளது தான். லூக்கா 11:2. நம் அருமை நாதரின் சொந்த உதடுகளிலிருந்து புறப்பட்ட இந்த ஜெபத்தைக் காட்டிலும் மனிதருக்கு வேறு எந்த சிறந்த வழிபாடும் கொடுக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்து பரத்திற்கு நேராக தன் கண்களை ஏறெடுத்துச் செய்த ஜெபத்தை யோவான் அப்போஸ்தலன் 17ம் அதிகாரத்திலே நமக்கு முழுதுமாக எடுத்துக் கொடுத்துள்ளார். இயேசு கிறிஸ்துவின் சீஷர்களும் முக்கியமான நேரங்களில் இப்படி எழுதப்பட்ட பிரார்த்தனைகளையே உபயோகித்தனர். பரி. பேதுருவும் யோவானும் மற்ற சீஷர்களும் விசுவாசிகளும் கூடி ஒருமனப்பட்டு தேவனை நோக்கி விண்ணப் செய்தது பரி. தாவிது உபயோகப்படுத்திய ஜெப வார்த்தைகளே. (அப். 4:24!26 சங்கீதம் 2:1!3) யூதாஸ்காரியோத்திற்கு பதிலாக ஒரு அப்போஸ்தலனை தேர்ந்தெடுக்கும் சமயத்தில் அவர்கள் செய்த ஜெபம் பரி. தாவீதின் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றுதலைக் காட்டக் கூடிய ஜெபங்களே (அப். 1:16-20 சங்கீதம் 41:9;69:25)

தேவதூதர்கள் மேலுலகத்தில் பாடுகின்ற பாட்டுக்கள், மேலுலகத்தில் பரிசுத்தவான்களின் துதிகள், இவைகள் யாவையும் நம்

உபயோகத்திற்கு எழுதித் தரப்பட்டிருக்கிறன. பூமியிலிருந்து முதல் பலனாக மீட்டெடுக்கப்பட்டவர்கள் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் சமூகத்திற்கு முன்பாக நித்திய காலமும் தொடர்ச்சியாய் பாடும் பாட்டு நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மிருகத்திற்கும் அதன் சொரூபத்திற்கும் அதன் முத்திரைக்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர் தேவலோகத்தில் சேர்ந்து பாடிய பாட்டுகள், தேவதாசனாகிய மோசேயின் பாட்டும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டுமாகும். யூத ஜனங்கள் எல்லாக் காலங்களிலும் மோசேயின் பாட்டைப் பாடினார்கள். மோசேயின் பாட்டு யாத்திராகமம் 15: 1-21ம் வரை உள்ள வாக்கியங்களில் நமக்காக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலே சொன்ன ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டை வெளி. 15:3-4 வாக்கியங்களில் நாம் காணலாம். நம் இரட்சகன் சிலுவை மரத்தில் வேதனையுடன் தொங்கிய போது செய்த ஜெபம் தாவீதின் பிரார்த்தனையே ஆகும். (சங்கீதம் 22:1 மாற்கு 15:34)

*வேறொரு விவாதம்:* சொன்ன ஜெபத்தையே திருப்பித் திருப்பி வெகுகாலம் செய்தால் ஒரு வெறுப்பு ஏற்படும் என்பதே. அது பொருத்தமற்ற வாதம். நமக்கு நெருங்கியவரும் உண்மையாயுள்ள ஒரு நண்பனை தொடர்ச்சியாய் அநேக சமயம் பார்த்தால் நமக்குள் ஒரு வெறுப்பு ஏற்படுமோ? சிறிய குழந்தைகளாக இருந்த காலத்தில் நம் காதில் தொனித்த நம் தாயின் சப்தம் நெடுங்காலம் கேட்டதால் நமக்கு வெறுப்பு ஏற்படுமோ? தன் ஆயுட்காலம் வரை தனக்கு மனைவியாயிருந்தவளின் முகத்தை நோக்க வெறுப்பு ஏற்படுமோ?

என் கருத்துக்கு அடிப்படை வாக்கியம் 1 கொரி 14ம் அத்தியாத்தில் இருந்து எடுத்தது. நமது சபைக்காரரில் சிலருக்கேனும் சிந்தனைக் குழப்பத்தை உண்டாக்கும் ஒரு காரியத்தைப் பற்றி அல்லவோ பரி. பவுல் தெளிவாக இதில் விளக்குகிறார்.

பிறமொழி அதாவது, அறியப்படாத மொழி (unknown tongue) கொரிந்து சபைக்காரர் பேசவேண்டுமா என்று தான் இந்த அத்தியாயத்திலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. தெளிவாய் இந்த அதிகாரத்தை வாசித்தால் பரி. பவுல் கூறுவது புரியாத அந்நிய மொழி பேசுவதை நிறுத்தி எல்லாரும் பிரசங்கவரத்தை வாஞ்சிப்பீர்களாக

 என்பதைக் காணலாம்.

ஏனென்றால் 2ம் வாக்கியம்: அந்நிய மொழி பேசுகிறவன் அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறான்.

*8ம் வாக்கியம்: எக்காளமும், விளங்காத சத்தமிட்டால் எவன் போருக்கு ஆயுத்தம் பண்ணுவான்?*

*9ம் வாக்கியம்: நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாக இருப்பீர்களே.*

*10 ம் வாக்கியம்: உலகத்தில் எத்தனையோ மொழிகள் உண்டாயிருக்கிறது. அவைகளில் ஒன்றும் பொருளற்றதல்ல.*

*19ம் வாக்கியம்: அப்படியிருந்தும் நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்.*

*22ம் வாக்கியம்: அப்படியிருக்க, அந்நிய மொழிகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது.*

*23: அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்கள் என்பார்கள் அல்லவா ?*

*27: யாராவது அந்நிய மொழியிலே பேசுகிறதுண்டானால் அது இரண்டு பேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அர்த்தம் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல் தனக்கும், தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்.*

*34: சபைகளிலே உங்கள் ஸ்திரிகள் பேசாமல் இருக்கக்கடவர்கள்.*

*37: நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகள் என்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்.*

*38: ஒருவன் அறியாதவனாயிருந்தால் அவன் அறியாதவனாயிருக்கட்டும்.* (தண்டனையை அவனும் அவன் சபையாரும் அனுபவித்துக் கொள்ளட்டும் என்பதே இதன் அர்த்தம்) இவைகள் யாவற்றையும் அறிந்திருந்தும் இவைகளைக் கைக்கொள்ளாமல் அவமதிப்பவர்களுக்கு *பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்ப்பார்க்குதலும், விரோதிகளை பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்* (எபி 10:26!27) என்று பரி. பவுல்

## 59 எபிரேயக் கிறிஸ்துவர்களுக்குக் கூறியது இவர்களுக்கும் உரியதாகும்.

அதிசயங்களைப்பற்றி கூறும்போது மார்க்கு 4 : 26 29ல் உள்ள வாக்கியங்களில் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து மூன்று காரியங்களைப்பற்றி கூறுவதை சிந்திப்போமாக.

*1) விதைக்கின்ற காலம்.*

*2)விளையும் காலம்.*

*3) அறுக்கின்ற காலம் என்று மூன்று உண்டு.*

விதைக்கின்ற காலத்தில் வயற்காரன் வேலை செய்ய வேண்டும். விளைகின்ற காலத்தில் அவன் செய்ய வேண்டிய வேலைகள் ஒன்றுமில்லை ஏனென்றால் நிலமானது முன்பு முளையையும்,பின்பு கதிரையும் கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும். அறுக்கின்ற காலத்தில் வயலுக்குரியவன் மீண்டும் வேலைசெய்ய வேண்டும். இது இயேசு கிறிஸ்து நாதர் கூறிய ஒரு உவமையாகும். அதே பிரகாரம் திருச்சபைக்கும் மூன்று காலங்கள் உண்டு.

அதாவது:

*1) திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட காலம்.*

*2) திருச்சபை வளர்ந்த காலம்.*

*3) திருச்சபை மேலுலகம் போகும் காலம் என்பவையாகும்.*

திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் தேவன் நேரிலே அற்புதங்களை செய்யவேண்டியதாயிற்று. திருச்சபை வளர்கின்ற காலத்தில் அற்புதங்கள் அவசியமில்லாமலிருந்தது. திருச்சபை மேலுலகம் போகவேண்டிய காலமாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தேவன் மீண்டும் அற்புதத்தைச் செய்வார். இவை அனைத்தும் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றிய இந்த உவமையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் திருச்சபை வளர்கின்ற இந்த காலத்தில் அதிசயங்களை நாம் எதிர்பார்க்கக் கூடாது.

பெந்தெகொஸ்தே நாளில் நடந்த சம்பவங்களுக்கும், இப்பொழுது உள்ள பெந்தெகொஸ்தே சபையார் உபதேசிக்கும் கொள்கைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளில் அருளப்பட்ட பரிசுத்த ஆவியையும், கொரிந்து சபையில் மட்டும்

ஏற்பட்ட விளங்கிக்கொள்ள முடியாத பிற மொழிகளையும் கூட்டிக் குறைத்து அவர்கள் உபதேசிக்கிறார்கள். அதனால் ஒருவர்க்கும் புரியாத அந்நிய மொழி பேச வேண்டும் என்று கூறும் இந்த சபையார்க்கு அமெரிக்க கொரிந்து சபை என்று நியாயமாய் பெயரிட வேண்டும்.

பெந்தெகொஸ்தே நாளில் நடந்த அற்புதங்களில் முக்கியமான சிலவற்றை நாம் சிந்திப்போம். பெந்தெகொஸ்தே நாளில் பல பல நாட்டவர்களாகிய யூதரும், அதை விசுவாசித்து சேர்ந்த யூதமார்க்கத்தமைந்தவர்களும் வந்து கூடினார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும்படி ஒரு தூது உண்டாயிற்று.

அதை அவர்கள் அறியுமாறு ஒரு அற்புதம் செய்யவேண்டி இருந்தது. அன்று அவ்வாறு நடந்த சம்பவம் மீண்டும் ஏற்பட்டது என்று நாம் காண ஒரு வழியுமில்லை. கொரிந்து சபையில் ஏற்பட்ட அந்நிய மொழி பேசுதல் வித்தியாசமாக இருந்தது. அவர்களுடைய மொழி உலகத்திலுள்ளவர்களுக்கு புரியாத ஒரு மொழியாக இருந்தது. கொரிந்து சபையில் அந்நிய மொழி பேசுகிறார்கள் என்றால் அது மனிதரிடத்திலல்ல தேவனோடு பேசினார்கள் என்று பொருள். ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் பேசப்பட்ட அந்நியமொழி மற்றவர்களுக்கெல்லாம் புரியும்படியான மொழியாக இருந்தது. (அப். 2:6-8).

ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய சொந்த மொழியிலே பேசியதை விளக்கம் கொடுக்க அவசியமில்லாமற் போயிற்று. தேவனுடைய அற்புதங்களைக் குறித்து அங்கு கூடினோர் அவரவரவர்களுடைய சொந்த மொழியிலே பேச தெரிந்துகொண்டார்கள். இப்படி பின்பு ஏற்படவே இல்லை. இந்திய மொழி தெரியாத பெந்தெகொஸ்தே மிஷினரிமார் இந்தியாவிற்கு வந்து எந்த இந்திய மொழியிலும் பேசினதாக இதுவரை யாரும் கண்டதுமில்லை, கேள்விபட்டதுமில்லை. ஆனால் கொரிந்து சபையில் பேசப்பட்ட அந்நிய மொழியைப்போல பேசினதுண்டு. ஆனால் பெந்தகோஸ்து நாளில் பேசிய மொழியைப் போலப் பேசினது இதுவரை ஒருவரும் கண்டதில்லை. அந்நிய மொழிகளில் பேசும்படியான மொழி வரம் பரிசுத்த ஆவியின் வரங்களில்

ஒன்றாகும். ஆனால் பரிசுத்த ஆவியின் வரம் அந்நிய மொழி பேசுவது மட்டும்தான் என்று கூறுவது வேத வாக்கியத்திற்கு எதிரானதாகும். அந்நிய மொழி பேசுவதானது பரித்த ஆவியைப் பெற்றதின் அடையாளம் என்று கூறுவது சரியல்ல. அப்படியாயின் ஏசுகிறிஸ்து பரிசுத்த ஆவியின் வரம் பெறாதிருந்தாரா? யேசுகிறிஸ்து யாதொரு அந்நிய மொழியையும் பேசவில்லை. அவருடைய மொழி அன்பின் மொழியாக இருந்தது.

இன்னும் பெந்தெகொஸ்தே நாளில் ஏற்பட்ட மொழியினைப்பற்றி நாம் அறிய வேண்டிய சில முக்கிய காரியங்கள்:

சில மொழிகளின் பிரத்தியேக முக்கியத்துவம் பெந்தெகொஸ் தே நாளில் தடைபட்டுப்போனது. (உ.ம்) யூதருக்கு எபிரேய மொழியும், மகமதியர்க்கு அரபிய மொழியும், ரோமர்க்கு லத்தின் மொழியும், கேரளத்திலே சிரியன் கிறிஸ்தவர்க்கு சிரிய மொழியும் மிகவும் அந்தஸ்து வாய்ந்தது என்று அவர்கள் ஒவ்வொருவரும் கருதினார்கள். பெந்தெகொஸ்தே நாளில் கிடைத்த சுவிசேஷ செய்தி எல்லா மொழிகளிலும் கேட்கப்பட்டது. ஒவ்வொருவரும் அவர்கள் சொந்த மொழியில் தேவனின் மகிமையைக் கேட்டார்கள் என்று பார்க்கிறோம். அப். 2: 11. பெந்தெகொஸ்தே நாளில் ஒவ்வொரு மொழி பேசுபவர்களுக்கும் அவர்கள் சொந்த மொழியில் தேவனின் அற்புத காரியங்கள் விளங்கின. இதேதான் இக்காலத்திற்கும் தேவையானது. கிறிஸ்துவைப்பற்றி இன்னும் நாம் கூடுதலாய் அறிய வேண்டும். அதற்கு தாய்மொழி மிகவும் ஏற்றது.

ஆதியாகமத்தில் பாபேல் கோபுரத்தைக் கட்டியவர்களின் மொழிகளைத் தாறுமாறாக்கினார் என்று பார்க்கிறோம். மொழியில் அவர்களைக் ஒருவரை ஒருவர் விளங்காத கொண்டே தேவன் பேச வைத்தார் என்று நாம் காண்கிறோம். இருந்த போதிலும் பெந்தெகொஸ்தே நாளில் ஒரு வரை ஒருவர் அறியும்படியான சொந்த மொழியிலே தெய்வ சபையைக் கட்டியவர்களைக் கொண்டு தேவன் பேச திருவுளம் பற்றினார். ஏசாயாவின் வார்த்தைகள் கூட பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினதாக நாம் பார்க்கிறோம். *“உனக்கு விளங்காத மொழியையும் அறிதற்கரிய ஒருவிதமான பேச்சையுமுடைய அந்தக்குரூர ஜனங்களை இனி நீ காணாய்”* ஏசாயா

33 : 19 விளங்காத ஒரு வார்த்தையும் அன்று பெந்தெகொஸ்தே நாளில் ஒருவரும் பேசவில்லை. எல்லாரும் அவரவர்கள் தெய்வத்தின் காரியங்களை தன் தன் மொழிகளிலே பேசினதால் அதன் மூலமாய் இருதயத்தில் குத்துண்டவர்களாய் கிறிஸ்தவ சபையில் சேரத் தொடங்கினார்கள். பெந்தெகொஸ்தே நாளில் அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் (அப். 2: 4) (In other tongues and not in unknown tongues). பரிசுத்த ஆவியைப் பெறும் போதும், பரிசுத்த ஆவியினால் நிறையப்படும் பொதும் அங்குள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் அந்நிய மொழிகளில் பேசவோ அல்லது கொரிந்து சபையாரைப்போல விளங்காத மொழியில் பேசவேண்டும் என்றோ சொல்லுவது வேதவாக்கிற்கு ஒத்ததல்ல. பெந்தெகோஸ்தே நாளுக்கு முன்பே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவினால் அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியைப்பெற்றிருந்தும், அவர்களில் எவரும் அன்னிய மொழி பேசினதில்லை. (யோவான் 20:22) யோவான் ஸ்நானகன் தாயின் வயிற்றிலேயே பரிசுத்த ஆவி நிறைந்தவனாய் காணப்பட்டும் ஒருவித அற்புதத்தையும் நடப்பிக்கவில்லை. ஒரு சிறு சிசுவின் இருதயத்தில் கூட பரிசுத்த ஆவி தங்கும் என்பது இதனால் தெளிவாகிறதல்லவா. பர்னபாவைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது. (அப் 11:24) அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனாயிருந்தான் ஆனால் பர்னபா வேறு மொழி பேசினதாகத் தெரியவில்லை. ஊழியர்களாகிய ஏழு பேரை தேர்ந்தெடுக்கும் பொழுது அப்போஸ்தலர்கள் இவ்வாறு தீர்மானித்தார்கள் (அப்போஸ்தலர் 6:3) ;ஆதலால் சகோதரரே பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அதிசயங்களை நடப்பிக்கிறவர்களையோ அல்லது அந்நிய மொழி பேசுகிறவர்களையோ தெரிந்து எடுங்கள் என்று கூறவில்லை பரிசுத்த ஆவி நிறைந்த வரும் நற்சாட்சி பெற்றவரும் கிறிஸ்து சபைக்கு ஆதிகால முதல் மிகவும் அவசியமாயிருந்தது. ஆட்சியாளர்களின் முன்பும் ஆலோசனைச் சங்கத்தின் முன்பும் அப்போஸ்தலர்களை நிறுத்திவைத்தபோது பரி. பேதுரு பரிசுத்த

ஆவி நிறைந்தவனாக அவர்களிடம் பேசினது தெளிவான மொழியில். அதிசயங்கள் நடப்பிக்கவேண்டுமாய் மறு பாஷையிலோ அறியப்படாத மொழியிலோ அவன் மறு உத்தரவு அளிக்கவில்லை (அப். 4: 8) இந்த 4ம் அத்தியாயத்திலே வேறு ஒரு சம்பவத்தைக் காணலாம். 31ம் வாக்கியம். (அப்.4:31) அவர்கள் ஜெபம் பண்ணியபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய் சொன்னார்கள். அவர்கள் அந்த இடத்திலே அந்நிய பாஷை பேசவில்லை. தேவ வசனத்தை தைரியத்தோடே சொல்ல ஆவியைப் பெற்றார்கள்.

பரிசுத்த ஆவியைப்பற்றி இயேசு கிறிஸ்து தன் சீஷர்களிடம் கூறியது அதிசயங்களை நடப்பிக்க வேண்டி பரிசுத்த ஆவியை (கொடுப்பேன்) அனுப்புவேன் என்று கூறவில்லை. ஆனால் நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:7,8) என்று கூறினார். கிறிஸ்தவ பெந்தெகொஸ்தும், இஸ்ரவேல் மக்கள் இனத்திற்கு முதன் முதலாய் வெளிப்படுத்தப்பட்ட பெந்தெகொஸ் திற்கும் அநேக ஒற்றுமைகள் உண்டு. இஸ்ரவேலர்களுக்கு நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட சமயத்தில் என்ன உண்டாயிற்று என்று யாத்தி 20:21 வாக்கியங்களில் எழுதப்பட்டிருக்கிறது முப்பது இலட்சத்துக்கு குறையாத ஒரு ஜனக்கூட்டம் அந்த பெந்தகோஸ் து நாளில் கூடினார்கள் என்று கணக்கிடப்பட்டு கூறப்பட்டிருக்கிறது. அன்று கர்த்தர் மலையிலே அக்கினியிலும் மேகத்திலும் காரிருளிலும் இருந்து உங்கள் சபையார் எல்லாரோடும் மகா சத்தத்துடனே சொன்னார் (உபா. 5: 22) பத்து தடவை தேவன் இந்த பிரகாரமாய் ஜனங்களிடத்தில் பேசினார். அப்பொழுது ஜனங்கள் எனன கூறினார்கள் நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம். தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள். (யாத்திராகமம் 20:19).

இஸ்ரவேலரின் பெந்தகோஸ்து நாளில் தேவன் அக்கினியின் மூலம் பேசினதுபோல, கிறிஸ்தவ பெந்தெகோஸ்து நாளில் தேவன்

அக்கினியில் தோன்றியதாகக் காணலாம். இஸ்ரவேல் பெந்தகொஸ்துநாளில் மகா பயங்கரத்துடன் தேவன் தன்னை வெளிப்படுத்தினார். ஆனால் கிறிஸ்தவ பெந்தகொஸ் திலோ தெளிவான மொழியினாலும் கேட்டால் மரிக்கும்படியான நிலையிலல்ல, கேட்டவர்கள் அனைவரும் என்றென்றும் ஜீவனை அடையுமாறு மனிதர்களை நடத்துபவராகக் காண்கிறோம். இஸ் ரவேலருடைய பெந்தகோஸ்தில் ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு மட்டும் நியாயப் பிரமாணமும் அதை அனு சரிப்பதால் கிடைக்கும் பலன்களும் கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவ பெந்தகோஸ்திலோ எல்லா இனத்தவரையும் எல்லா மொழிக்காரரையும் தன்னிடம் இழுக்கும் தன்மையை நாம் காண்கிறோம். எல்லாருக்கும் மிகவும் தெளிவாகபுரியும் வகையில் தேவனுடைய செய்திகள் தாராளமாய்ப் பொழிந்தது. ஆகாயத்தின் கீழுள்ள சகல மனிதரையும் ஆதாயப்படுத்தும் படியாக தேவன் மனிதர்களின் பலமொழிகளையும் பயன்படுத்துகிறார். இயேசு கிறிஸ்து என்றும் வாழ்கிறார் என்ற அனுபவத்தை அநேகர் அடைந்தது பெந்தகோஸ் தின் அனுபவத்தில்தான். தன்னுடைய வாக்குகளின் பிரகாரம் பரிசுத்த ஆவி வந்து அவர்கள் மேல் இறங்கினபோது கிறிஸ்து சொன்னதும், போதித்ததும் உண்மையானவை என்று அறிந்து கொண்டார்கள். அப்படிப்பட்ட அறிவு, பரிசுத்த ஆவியானவர் இந்த காலத்திலும் உண்மையாயுள்ள எல்லா கிறிஸ்தவர்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

முதலாவது கிறிஸ்தவப் பெந்தகொஸ்திலே அடையாளங்களும் அற்புதங்களும் ஒரு புதிய காலத்தின் தொடக்கத்தைக் குறிப்பிடுவனவாக இருக்கிறது. பரிசுத்த ஆவியின் கிரியைகளும், புதிதாய் மனித வர்க்கத்திற்கு ஆரம்பமாகிய கிருபையின் காலத்தையும் குறிக்க இந்த அதிசயங்கள் தேவையாயிருந்தது.

இயேசுவின் பிறப்பில் அதிசயங்களும் அற்புதங்களும் உண்டானது. ஒரு தனி நட்சத்திரம், தேவதூதர்கள் பாட்டுகள், சாஸ் திரிகள் வருகை இப்பேர்ப்பட்ட காரியங்கள் உண்டானது என்று நாம் பார்க்கிறோம். சிலுவையின் மரணத்திலும் அதிசயங்கள் காணப்பட்டன. பூகம்பம், அசாதாரண இருட்டு, கல்லறைகள்

திறந்தது முதலியன காணப்பட்டன. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும் அதிசயங்கள் நடந்தன என்று நாம் பார்க்கிறோம்.

ஆனால் கல்வாரியில் நமக்கு கிடைக்கும் பலன்களை பெறும்போதோ உயிர்த்தெழுதலின் சக்தி நம்மில் கிரியை செய்யும்போதோ இவ்வதிசயங்கள் நடப்பதை யாரும் காண்பதில்லை, நடக்க வேண்டுமென்றும் யாறும் கூறுவதில்லை. அப்படியாயின் பெந்தகொஸ்தின் அடையாளங்கள் மாத்திரம் ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டுமென்று கூறுவது எங்ஙனம்? அது நமது சிந்தனைக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது.

வெப்பம் அதிகம் தலைக்கேறினால் மூளை கலங்கிப்பித் துண்டாகும். அப்பொழுது எவ்வித சத்தமும் உண்டாக்கலாம். சில சபைகளிலே அது முக்கிய அடையாளமாகவும் சின்னமாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பெந்தகொஸ்து நாளிலும், கொர்நேலியுவின் வீட்டிலும் உண்டான அடையாளங்கள் தனிப்பட்ட நபர்களுக்கு பரிசுத்த ஆவிகிட்டிய போது காணப்படவில்லை. ஒரு சபையோ அல்லது ஒரு தனிப்பட்ட ஆளோ அப்பேர்ப்பட்ட அடையாளங்கள் தனக்கு வேண்டுமென்று விரும்பி அதற்காக காத்திருக்கச் செய்தும், பரிசுத்த ஆவி பெறுவதற்கு இது ஒரு அடையாளமாக இருக்கவேண்டும் என்று கூறி அறிவிப்பது தவராகும். வேத புத்தகத்திற்கு இது ஒத்ததல்ல. ஓவ்வொருவருடைய தனிப்பட்ட அனுபவத்தில் அவ்வித அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற வேண்டுமென்று நாம் விரும்பி நிற்கக் கூடாது, அநேகதரப்பட்ட அடையாளங்கள் அற்புதங்கள் நிறைந்த அப்போஸ்தலர் காலத்தை நம் காலத்தோடு ஒப்பிடக் கூடாது.

நியாயப்பிரமாணம் இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட போது அடையாளங்களும் அற்புதங்களும் நடந்தன. ஆனால் கர்த்தரின் தீர்க்கதரிசிகள் அந்த நியாயப்பிரமாணத்தை பிரசிங்கித்தபோது மக்களை பாவ அறிக்கை செய்யும்படி சொன்னபோது யாதொரு அதிசயமும் நடக்கவில்லை.

இனி மொழி வரம் உட்பட உள்ள ஆவியில் பல பல வரங்களைப் பற்றி புதிய ஏற்பாட்டின் உபதேசங்கள் யாவை என்று நாம் பார்ப்போம் 1 கொரி12 அத்தியாயம் 4!11 வாக்கியங்கள் 9

கிருபையின் வரங்களைப் பற்றிக் கூறுகிறது. அதிலே கடைசியானது பிறமொழி பேசும் வரம். இவையெல்லாம் ஒரு நபருக்கு கிடைக்கக் கூடியது அல்ல. ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியைப் பெறும்போது அதற்கு அடையாளமாய் அந்நியமொழி பேச வேண்டும் என்று இந்த புதிய சபைக்காரர் கூறுகிறார்கள். அதனுடைய பொருள் ஒரு கிருபையின் வரம் எல்லாருக்கும் எல்லாக் காலத்திலும் உண்டாயிருக்க வேண்டுமென்றல்லவோ பொருள்படுகிறது. இது வேத புத்தகத்தின் தெய்வ வசனங்களுக்கு ஒத்ததாயில்லை. 1 கொரிந்தியர் 12: 9!10.

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும். வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இதே அத்தியாயத்தில் 29, 30 வாக்கியங்களில் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. இதில் கடைசியாக எல்லாரும் அந்நிய மொழிகளைப் பேசுகிறார்களா ? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? கேள்விகளுக்கும் இல்லையென்றுதான் பதில் கூறலாம். ஒரு சபை அதன் அங்கத்தினர்கள் எல்லாரும் அந்நிய மொழி பேச வேண்டுமென்று கற்பித்தால் அது வேத வசனங்களுக்கு நேர் எதிராக இருக்கிறதென்று இங்கே நாம் பார்க்கிறோம்.

1 கொரி 13:8ம் வாக்கியத்தில் இவ்வரங்கள் நின்றுபோம் என்று பரி. பவுல் தெளிவாகக் கூறியிருக்கிறார். அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய மொழிகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம் இதன் பொருள் என்ன ? தீர்க்கதரிசன வரங்கள் ஒழிந்துபோகும் என்று சொன்னால் தீர்க்கதரிசனங்கள் ஒழிந்து போகும் என்று அர்த்தமல்ல. சிலருக்கு பிரத்தியேகமாய் உண்டான தீர்க்கதரிசன வரம் ஒழிந்துபோகும் என்று அர்த்தம். தீர்க்கதரிசனங்கள் நிறைவேறாமல் நின்று போகாது. இஸ்ரவேல் சபையின் சரித்திரத்தில்

இதைப்பற்றி இன்னும் காண்போம். சபையில் நியாயப்பிரமாண ஒழுங்குகள் எவ்வித குறைவில்லாமல் நடைபெற்று வந்த போதிலும் 400 வருடங்களாக தீர்க்கதரிசன வரங்கள் நின்றுபோனதாக பார்க்கிறோம். மல்கியா தீர்க்கதரிசியின் காலம் தொட்டு இயேசுக் கிறிஸ்துவின் பிறப்புவரை யூத சபையில் தீர்க்கதரிசன வரங்கள் நின்று போயிற்று. ஆசாரியனாகிய சகரியாவும் பக்தனான சிமியோனும் விதவையாகிய அன்னாளும் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து சரியாய் தீர்க்கதரிசனம் கூறினார்கள் என்று லூக்கா சுவிசேஷத்தில் வாசிக்கிறோம்.

1 கொரி 12: 8ல் நாம் காணும் ஞானத்தின் வரம் சிலருக்கு மட்டும் கிடைத்தது. நின்று போகும் என்பதே அர்த்தம் அல்லாது ஞானம் நீங்கி நாம் எல்லோரும் அறிவில்லாதவர்களாக வேண்டும் என்பதல்ல. மொழி பேசும் வரம் நமக்கு நின்றுபோகும் என்றால் மொழி பேசும் வரம் நமக்கு நின்றுபோய் நாமெல்லோரும் ஊமைகளாக வேண்டுமென்று அர்த்தமல்ல. பின்பு 1 கொரி 12:10லும் 30லும் 1கொரி 14:26, 27 வாங்கியங்களிலும் காணும் மொழி வரம் நின்றுபோகும் என்பதே. இது எப்போது நீங்கும் என்று பரி. பவுல் உத்தரவு சொல்கிறார். 1 கொரி 13: 10 நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்துபோம். பூரணமான வெளிப்படுதலின் போது தீர்க்கதரிசனமும், ஞானமும் அந்நிய மொழி பேசுவதும் நின்று போகும் என்று பரி. பவுல் கூறுகிறார். தெய்வீக வெளிப்பாடு குறைவாயிருக்கும் பொழுது மட்டுமே இந்த வரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆதிச்திருச்சபைக்கு இன்று நமக்கு எழுதப்பட்டது போல ஒரு புதிய ஏற்பாட்டின் புத்தகம் இல்லாதிருந்தது. அன்றுள்ளவர்கள் தேவ சத்தியங்கள் வெளிப்படும் பொருட்டு அந்த கிருபை வரங்களை உடையவரைச் சார்ந்து இருக்கும்படி நேரிட்டது. ஆனால் நமக்கு பூரணமாய் எழுதப்பட்டுள்ள பழையதும் புதியதுமான ஏற்பாடுகள் இருப்பதால் அந்த கிருபை வரங்கள் அவசியமில்லை. சபையின் தொடக்க ஆண்டு காலத்தில் உண்டான அற்புதங்களுள் அடையாளங்களின் அவசியங்கள் ஏனென்று அப் 4:30ல் பரி. பேதுருவும் யோவானும் காரணம் விவரிக்கிறார்கள். அப். 14:3லும் இதன் காரணங்களை நாம் காணலாம். அவர் தமது

 கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக அடையாளங்களும், அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அனுக்கிரகம் பண்ணினார்.

ஒரு காரியம் ஒரு காலத்தில் உண்டானதைக் கொண்டு என்றும் அது உண்டாக வேண்டும் என வாதிப்பது தவறாகும். பெத்லகேமில் அன்று ஒரு சமயம் உதித்த நட்சத்திரத்தை மறுபடியும் அதை யாரும் பார்த்ததில்லை. பெந்தகோஸ்து நாளில் ஏற்பட்ட அக்கினியும் காற்றும் மறுபடியும் ஒருக்காலும் உண்டாகவில்லை. வனாந்தரத்தில் 40 வருடங்கள் மன்னா பெய்தது. இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டிற்குள் நுழைந்ததும் நின்று போயிற்று. அவர்களது ஆடை 40 ஆண்டுகள் பழையதாய் கிழிந்து போகவில்லை. ஆனால் கானானுக்குள் நுழைந்ததும் அவர்கள் புதிய ஆடைகளைத் தரிக்க வேண்டியவர்களானார்கள். அனனியாவும் சப்பிராளும் பரிசுத்த ஆவியோடு பொய் கூறியதால் மரண தண்டனைக்குள்ளானார்கள். அதன் பிறகு அந்த தண்டனை கிறிஸ்து சபையில் மறுபடியும் ஏற்பட்டதில்லை. அந்த தண்டனை தொடர்ந்து நடைபெறுமானால் இன்று எத்தனை பேர் இவ்விடத்தில் காண முடியும்?

பெந்தகோஸ்து நாளில் அடையாளங்களைப் பற்றி Dr. Campbell Morgan என்ற பிரசித்திபெற்ற வேதசாஸ்திர வல்லுநர் இவ்வாறு கூறுகிறார். அடையாளங்கள் சாதாரண ஒரு ஆரம்பத்தை குறிப்பதே ஆகும். அது என்றும் நிலை நிற்கும்படியானதல்ல. அது எருசலேம் மக்கள் கவனத்தை ஈர்க்க உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் ஆன்மீக சத்தியங்கள் வெளிப்பட்டவுடனே அடையாளங்களின் அவசியம் இல்லாமறற்போனது. அந்நிய மொழி பேசுவதினால் ஒருவரும் குத்துப்பட்டவர்களாக மாறவில்லை. அது பேதுருவின் பிரசங்கத்தால்தான உண்டானது. காற்றும் தீயும் மக்களின் கவனத்தை இழுக்க உபயோகமாக இருந்தது. பின்பு இதன் அவசியம் இல்லாதிருந்ததினால் மறுபடியும் ஏற்படவில்லை.

பிற மொழி பேசுவது ஆன்மீகத்தின் தெளிவு அல்ல. புதிய ஏற்பாட்டில் கொரிந்து சபைபோல இதர மொழி பேசினவர்கள் எங்கும் உண்டானதில்லை. மாறாக அவர்கள் மாம்சத்துக்குரியவர்களாய் மாறினார்கள். 1 கொரி 3: 1!3 ல் விரிவாக கூறியுள்ளது. தேவனுக்கு

## அத்தியாயம் ஐந்து

# குணமாக்கும் வரம்

*1 கொரி 12:28*
*பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும் பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

பலவித வரங்களில் அந்நிய மொழி பேசுதலைப் போல கொஞ்சம் நம் சிந்தனையில் குழப்பத்தை உண்டாக்கி வரும் மற்றொரு வரம் குணமாக்கும் வரம் ஆகும். இதைப்பற்றி 1 கொரி 12:28ல் நாம் வாசிக்கிறோம். பிணியை குணமாக்கச் செய்வது பாவம் என்று சில புதிய சபைகள் போதிக்கின்றன. பிணியை நீக்குவது பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே இருந்து வந்தது. ஏரேமியா 8: 22ல் நாம் இப்படி வாசிக்கிறோம். கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமறபோனாள்.

யாத்திராகமம்: 21: 19 *ஆனாலும், அவனுக்கு வேலைமெனக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து, அவனை நன்றாய்க் குணமாக்குவிக்கக்கடவன்.*

ஏசாயா 38: 21 *அத்திப் பழத்து அடையைக் கொண்டுவந்து, பிளவையின் மேல் பற்றுப் போடுங்கள்; அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா சொல்லியிருந்தான்.*

2 இராஜாக்கள் 9:15 *ஆனாலும் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடே பண்ணின யுத்தத்திலே, சீரியர் தன்னை வெட்டின காயங்களை யெஸ்ரயேலிலே ஆற்றிக் கொள்ளுகிறதற்கு, ராஜாவாகிய யோராம் திரும்பிப் போயிருந்தான்.*

நியாயப் பிரமாணத்தை ஒட்டி வழக்கத்தில் இருந்த சிகிச்சை சம்பிரதாயங்கள் தப்பு என்று ஓரிடத்திலும் இயேசு கிறிஸ்து கூறினதில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்தில் நோய் சிகிச்சை செய்ததை சில சபைக்காரர்கள் தடை செய்கிறார்கள். பிணியாளிகளுக்கு வைத்தியனே அல்லாமல் வேறொருவருக்கும் அவசியமில்லை

[illegible]

[illegible] அதிசயமாக சுகம் அளித்த போதுதான். இயேசு கிறிஸ்து அதிசயமாக பிணியாளிகளைச் சுகப்படுத்தும்போது சில பிரத்தியேக வழிகளைக் கையாண்டதை நாம் வாசிக்கிறோம்.

*[illegible] தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.*

(1) கொன்னைவாயுடைய ஒரு செவிடனை குணமாக்கிய போது கிறிஸ்து சில பிரத்தியேக வழிகளைக் கையாண்டதாக நாம் வாசிக்கிறோம். *தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவை தொட்டு* (மாற்கு 7:32!35)

(2) ஒரு குருடனை குணமாக்கியபோது, அவன் கண்களின் மேலே உமிழ்ந்து, அவன் மேல் கைகளை வைத்து, எதையாகிலும் காண்கிறாயா என்றுகேட்டார். ஆள் ஏறிட்டு பார்த்து நடக்கிற மனிதரை மரங்களைப்போல காண்கிறேன் என்றான். பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின் மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டு பார்க்கும்படி செய்தார். அப்பொழுது அவன் சுகமடைந்து யாவரையும் தெளிவாகக் கண்டான். (மாற்கு 8:23-25).

(3) இங்கு பிறவியிலே குருடனாயிருந்த ஒருவனை சுகமாக்குவதைக் காண்கிறோம். இவைகளைச் சொல்லி, *அவர் தரையிலே துப்பி உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்த சேற்றைக் குருடனுடைய கண்களிலே பூசி, நீபோய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே அவன் போய்க் கழுவி பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்.* அப்போஸ்தலர்கள் அநேகம் நோயாளிகளை எண்ணைப் பூசி சுகமாக்கினார்கள் என்று மாற்கு 6:13ல் நாம் வாசிக்கிறோம்.

வியாதியுள்ளவர்களை சுகமாக்குங்கள் என்று இயேசு நாதர் தன் அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டது சரியே. ஆனால் அந்த ஒரே ஒரு கட்டளையில் இன்னும் மூன்று காரியங்களை உட்படுத்தியே அவர்கூறியுள்ளார். மத்தேயு 10:81

(1) வியாதியுள்ளவர்களைச் சுகமாக்குங்கள்.

(2) குஷ்டரோகிகளை சுத்தம் பண்ணுங்கள்.

(3) மரித்தோரை எழுப்புங்கள்.

(4) பிசாசுகளைத் துரத்துங்கள்.

மூன்றாவதாகக் கூறிய காரியம் நோயை குணமாக்குபவர்களின் பிடியில் இல்லாமலிருக்கிறது. ஆந்திரதேசக்காரரும் சென்னையில் தங்கி பல இடங்களிலும் சுவிசேஷ பிரசங்கங்கள் செய்து வந்தவருமான சகோதரர் N. தானியேல் என்பவர் தன்னை உயிர்ப்பிக்கவேண்டி ஊழியக்காரர்களாகிய தன் மனைவியோடும் மக்களோடும் சொல்லி வைத்திருந்தார். ஆனால் மூன்று நாட்கள் தொடர்ந்து ஜெபம் செய்ததின் பலன் அழுகிய பிணத்தை அடக்கம் செய்ய வேண்டியதாயிருந்தது.

தேவனிடத்தில் சார்ந்து நாம் விரும்பும் சில காரியங்களோடு நாம் செய்ய வேண்டிய சில காரியங்களை நாமே செய்ய வேண்டும் என்று கிறிஸ்து நாதர் கூறியுள்ளார். லாசருவினை நான்காம் நாள் உயிர்த்தெழுதலின் அதிசய சம்பவத்தில் மனிதர்கள் செய்யவேண்டிய காரியங்களை மனிதர்கள் செய்யும்படி கிறிஸ்து கூறினார். கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். உயிர்த்தெழுந்த பின் செய்ய வேண்டிய காரியம் இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார் (யோவான் 11: 44).

ஆபத்திலிருந்து விடுபடுவதற்கு கிறிஸ்தவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கிறிஸ்துநாதர் கூறியுள்ளார். ஆபத்திலிருந்து தப்பிச்செல்லும் பாம்பின் திறமை சிறப்பானது. அதை மனதில் கொண்டுதான் பாம்பைப்போல வினாவுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்றும் நம்மையும் அப்போஸ்தலர்களையும் பார்த்துக் கூறினார்.

எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருக்கும் பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப் போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப் புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாதிருக்கக்கடவர்கள். லூக்கா 21:21.

வீட்டின் மேல் இருக்கிறவன் தன் வீட்டுக்குள் இறங்காமலும், தன் வீட்டில் எதையாகிலும் எடுத்துக் கொள்ள உள்ளே போகாமலும் இருக்கக்கடவன். வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரத்தை

 எடுப்பதற்குப் பின்னிட்டுத் திரும்பாபாதிருக்கக் கடவன். மாற்கு 13:15!16

ஒரு கிறிஸ்தவன் இந்த உலக வாழ்விற்காகவும் மறு உலகவாழ்விற்காகவும் தேவையான சிலகாரியங்களைப்பற்றி செய்யாதிருப்பது கிறிஸ்தவம் அல்ல. எந்த இடத்திலும். எந்த நிலையிலும் எந்தக் காரியத்திலும் தேவன் தங்களை ரட்சித்துக் கொள்ள விரும்பி, தாங்கள் செய்ய வேண்டிய காரியங்களை தாங்கள் செய்யாதிருப்பது தண்டனைக்குரிய செயலாகும்.

விண்ணுலகிலுள்ள கடவுள் எந்த சமயத்திலும் எந்த நிலையிலும் எந்த தேவையிலும் நமக்கு ஆதரவாயிருப்பார் என்பது சந்தேகப்படக்கூடியது அன்று. நாம் செய்யக் கூடிய காரிங்களை நாம் செய்யாமல் தேவனாலே எல்லாம் செய்யக்கூடும் என்று பேசாமல் இருப்பவர், தங்கள் மதத்தையே நிந்தித்து கடவுளை ஒரு வகையில் சோதித்துப் பார்க்கிறார்கள். வேத புத்தகத்தில் தொடக்கத்திலிருந்து கடைசிவரை கடவுளும் மனிதனும் ஒன்று சேர்ந்து இப்படி காரியங்களை செய்துவந்திருந்தார்கள் என்ற விவரங்களை நாம் வாசிக்கிறோம்.

(1) யாக்கோபு கடவுளோடு யாப்போக் ஆற்றினருகில் தனக்கும் தன்னுடைய குடும்பங்களுக்கும் ஆடு மாடுகளுக்கும் ஏசாவின் கையிலிருந்து விடுதலையடையும்படி தேவனோடு போராடினான் எனறு நாம் வாசிக்கிறோம். ஆனால் அதே சமயத்தில் ஏசாவின் கவனத்தை திருப்ப ஒரு பெரிய வெகுமதியை அனுப்பி தனக்கு விடுதலை கிடைக்கும்படி முயற்சி செய்தான் என்றும் நாம் வாசிக்கிறோம் ஆதி.32:9-18

(2) எசேக்கியா அரசன் என்ன செய்தான் என்று பார்ப்போம்? சனகெரிப் தனக்கு எதிராக பாளையமிறங்கினான் என்று கேட்டபோது யெகோவாவின் வலிமையைப் பற்றி மக்களுக்குக்கூறி தைரியப்படுத்தினான் (2 நாளாகமம் 32:7-8) ;நீங்கள் திடன் கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா ராஜாவுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படாமலும் கலங்காமலுமிருங்கள், அவனோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். அவனோடிருக்கிறது மாம்சபுயம், நமக்குத் துணை நின்று

 நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் தானே என்று சொல்லி, அவர்களைத் தேற்றினான். ஆனால் ஏசேக்கியா அரசன் தான் செய்ய வேண்டிய சில காரியங்களும் இருந்தது அதை அவன் முதலிலே செய்து முடித்ததாகக் காணுகிறோம். (2 நாளாகமம் 32:3-6)

*3.நகரத்திற்குப் புறம் பேயிருக்கிற ஊற்றுகளைத் தூர்த்துப்போட, தன் பிரபுக்களோடும் தன் பராக்கிரமசாலிகளோடும் ஆலோசனை பண்ணினான்; அதற்கு அவர்கள் உதவியாயிருந்தார்கள்.*

*4. அசீரியா ராஜாக்கள் வந்து, அதிக தண்ணீரைக் கண்டுபிடிப்பானேன் என்று சொல்லி, அநேகம் ஜனங்கள் கூடி, எல்லா ஊற்றுகளையும் நாட்டின் நடுவில் பாயும் ஓடையையும் தூர்த்துப் போட்டார்கள்.*

*5 அவன் திடன்கொண்டு, இடிந்துபோன மதிலையெல்லாம் கட்டி, அவைகளையும் வெளியிலுள்ள மற்றமதிலையும் கொத்தளங்கள் மட்டும் உயர்த்தி, தாவீது நகரத்தின் கோட்டையைப் பலப்படுத்தி. திரளான ஆயுதங்களையும் கேடயங்களையும் பண்ணி.*

*6. ஜனத்தின்மேல் படைத்தலைவரை வைத்து, அவர்களை நகரவாசலின் வீதியிலே தன்னண்டையில் கூடிவரச் செய்தான்.*

(3) பரி. பவுல் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் தன் உயிர்க்காக வேண்டி ஓடிப்போனான் என்று பார்க்கிறோம். அப்.14: 6. தமஸ்குவின் கோட்டையிலிருந்து ஒரு கூடையிலே வைத்து மதில் வழியாய் இறங்கிதன்னை ரட்த்துக் கொண்டான் என்று பார்க்கிறோம் (அப்.9:25) அலெக்சாந்திரியா பட்டணத்திற்கு போகும் கப்பலில் யாத்திரை செய்த போது கப்பலாட்கள் கப்பலை விட்டோடிப் போக முயற்சித்தபோது பவுல் நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பி பிழைக்கமாட்டீர்கள் என்றார் என்று நாம் பார்க்கிறோம் (அப். 27:31) காக்கை வலிப்பு என்னும் நோயினால் பீடிக்கப்பட்ட பரி. பவுலின் துணையாயிருந்த வைத்தியனாகிய லூக்காவும் (வைத்தியனாயிருந்த லூக்கா என்றல்ல) தன்னோடுகூட எப்பொழுதும் இருக்கவேண்டும் என்று தான விரும்பியதாக அவர் எழுதின நிரூபங்கள் மூலம் நமக்குத் தெரிகிறது. ரோமாபுரியில் இறுதியாக சிறைச்சாலையில் இருந்தபோது கூட வைத்தியனாகிய லூக்கா அவரோடே இருந்தார்

(2 தீமோத் 4:11) அப்போஸ்தலர்கள் காலத்திலே அப்போஸ்தலர்களோ அவர் உடன் ஊழியக்காரரோ யாவரும் சரீரத்தில் பூரண ஆரோக்கியம் உடையவர்களாக இருந்ததில்லை. பரி. பவுல் தன் ஆயுட்காலம் முழுவதும் நோயுள்ளவராக இருந்தார் என்று வேத புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது (2 கொரி 12: 7). இரண்டுவிதமான நோய்கள் அவருக்கு பிடித்திருந்ததாக வேத புத்தக வீயாக்கியானிகள் கூறுகிறார்கள். தமஸ்குவில் வழியில் அவனுக்கு ஏற்பட்ட ஒரு அதிசய ஒளியினால் அவன் பார்வை மங்கி கையில் தடி கொடுத்து அவனை தமஸ்குவிற்கு கூட்டிச் சென்றார்கள் அப். 9: 8ல் நாம் வாசிக்கிறோம். அனனியா பிரார்த்தனை செய்து கை வைத்தபோது அவன் பார்வை யடைந்தான் என்று நாம் பார்க்கிறோம். (அப். 9: 18) இருந்த போதிலும் அவன் கண்களுக்கு முழுமையாகப் பார்வை திரும்பவில்லை. என்று வியாக்கியானிகள் கூறுகிறார்கள். அதன் ஆதாரமாய் அவர்கள் கூறும் வாக்கியங்களை நாம் கவனிக்க வேண்டும். அப். 23: 5 கலா. 4: 15 கலா. 6: 11. இதுமட்டுமல்லாமல் பரி. பவுல் காக்கை வலிப்பு என்ற நோயுடையவராக இருந்தார் என்றும் கூறலாம். இதற்கு ஆதாரமாய் உள்ள வாக்கியம் கலா. 4: 14. இதை நான் முன்பு எடுத்துக்காட்டியுள்ளேன்.. பரி. பவுலுடன் மிஷினரி யாத்திரைக்கு புறப்பட்ட உடன் ஊழியக்காரயனாகிய துரோப்பீமுவை தன் யாத்திரையில் மிலேத்துவில் வியாதிப்பட்டவனாகவிட்டு வந்தேன் என்று கூறுவதை ஐஐ திமோ 4: 20ல் நாம் வாசிக்கிறோம். அந்த சம்பவத்தைப்பற்றி வேதனையுடன் தீமோத்தேயுவுக்கு எழுதினார் என்று நாம் கவனிக்கவேண்டும். துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்

பரி. யாக்கோபுவின் நிருபம் 5ம் அத்தியாயத்தில் 14!16 வரை உள்ள வாக்கியங்களில் பிணி நீக்கும் வரத்தைப் பற்றி கூறியுள்ளது. அங்கேயும் மூப்பன்மார் எண்ணை பூசி செபம் செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறது. இப்படிச் செய்த போதிலும் விசுவாசமுள்ள செபம் பிணியாளியை ரட்சிக்கும் என்று கூறுவது பிணி நீக்கும் வரத்தின் அடிஸ்தானத்தின் தத்துவமாகும். விசுவாசமுள்ள செபத்துடன் எண்ணை பூசுவதும் அவசியம்தான்.

1 கொரி 12: 28ல் Helps என்று ஆங்கிலத்திலும் தமிழில்

ஊழியங்களையும் என்று போட்டிருப்பதின் மூல மொழியின் பொருள் "Gift of Helping the Feeble, the Sick and the Needy" என்பதாகும். சரியான கருத்தில் கூறினால் பெலவீனர்களைத் தாங்கியும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்தும், பின் தேவையுள்ளவர்க்கு உதவி செய்வதும் என்பதுதான். பிணியாளனுக்கு பிணியை நீக்கும் வரம் என்றால் சிகிச்சை செய்யும் உதவி என்று கூறாமல் வேறென்ன கூறுவது? தேவையுள்ளவர்களுக்கு பண உதவி செய்வது என்பது மூல மொழியில் பிரத்தியேகமாக உட்படுத்தி இருப்பதால் இது பிணியாளிக்கு சிகிச்சை செய்வதுதான் என்று கிறிஸ் து நாதர் தன் சபைக்கு கூறியதாக நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். கொஞ்சம் திராட்சரசம் மருந்தாக உட்கொள் என்று பரி. பவுல் தீமோத்தேயு விற்கு கூறியதாகப் பார்க்கிறோம். (1 தீமோ 5:23).

*நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல். உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்.*

இந்த வாக்கியத்தை ஆதாரமாகக் காட்டி மதுகுடிப்பது தப்பல்ல என்று சிலர் வாதிப்பதுண்டு, ஆனால் அவர்கள் மற்ற வேதவாக்கியங்களைப் புறட்டுகிறதுபோல தங்களுக்கு கேடுவரத்தக்கதாக இவைகளையும் புறட்டுகிறார்கள். என்று தான் கூறவேண்டும். 2 பேதுரு 3:16.

நல்ல சமாரியன் உவமையின் மூலமாக கிறிஸ்து கூறிய ஒரு பாகம் சரீர சம்பந்தப்பட்டது. அடிபட்டு பிராணனுக்காக தவிக்கும் ஓருவருடைய காரியத்தில் ஒரு கிறிஸ்தவன் என்ன செய்யவேண்டுமென்று நம் கிறிஸ்து கூறியுள்ளார். அடிபட்டவனுடைய காரியத்தில் காயங்கள் எவ்வளவு சீக்கிரமாய் கட்டவேண்டுமென்று கிறிஸ்துநாதர் கூறுகிறார். காயங்களை எண்ணையும் திராட்சரசமும் வார்த்துக் கட்டவேண்டும். நல்ல சமாரியன் தன்னுடைய மக்களின் பகைவனுக்கு விரைந்து சென்று அவனுடைய காயங்களைக் கட்டித் தனது கைவசம் இருந்த எண்ணையையும் திராட்சரசத்தையும் காயங்களில் வார்த்து கட்டிக் குணப்படுத்தினான். நல்ல சமாரியன் உவமையில் நான் முன் கூறியதுபோல 1 கொரி 12: 28ல் மூன்று வகை உதவிகள் நடைமுறையிலே செய்து காண்பிக்கப்பட்டது,

1) பெலவீனனை தாங்குதல்.

2) அவனுக்கு வேண்டிய சிகிச்சையை அளித்தல்.

3) அவனுக்குத் தேவையான பண உதவி செய்தல்.

ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 1:6ல் இவ்வாறு நாம் வாசிக்கிறோம். *அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது. அது குற்றமானதொன்றாகும்.* காயங்கள் வெறும் கழுவி கட்டினால் மட்டும் போதாது. சீழ்பிதுக்கப்பட்டு கட்டப்படவேண்டுமென்று தேவ வசனம் கூறுகிறது. இப்படிக் கூறுவதையெல்லாம் ஆன்மீகப் பொருளில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறுபவர்களும் இருக்கலாம்.

இவையெல்லாம் ஆன்மீகப் பொருளில் தான் எடுக்க வேண்டுமென்றால் ஏசாயா தீர்க்கத்தரிசி மற்றொரு இடத்தில் கூறிய அந்த நிலையை நாம் அடையவேண்டும். வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை. (ஏசாயா 33: 24) இது கிறிஸ் துவின் பூரண ஆளுகையின் கீழ் புதிய உலகினில் உண்டாகப் போகும் நிலையாகும். அதையும் தீர்க்கதரிசி இந்த அத்தியாயத்திலே விளக்கினது உண்டு (19-22 வாக்கியங்கள்) இந்த ஆளுகை உலகத்தில் நிறுவனமாகும் வரை இந்த உலகத்திலுள்ள சகல நோய் அணுக்களோடு எதிர்த்து போராடி அதை அழிப்பது கிறிஸ்தவர்களின் தலைமையான ஒருகடமையாகும்.

மலேரியாவினால் நிறைந்திருந்த பாகங்களான அஸ்ஸாம், ஆனமலை, வயநாடு, பீர்மேடு என்ற பிரதேசங்களில் தோட்ட சொந்தக்காரர்கள் (estate owners) பெருந்தொகை செலவு செய்து விமானங்கள் மூலம் மருந்து தெளித்து மலேரியா உண்டாக்கக் கூடிய அணுக்களையும் பூச்சிகளையும் கொன்று மக்களுக்கு வாழவழி செய்தது எவ்வளவோ போற்றக்கூடிய கிறிஸ்தவ நடவடிக்கைகளாகும். நம் உடலிலும் நாம் வாழுமிடங்களினுள்ளேயும் வெளியேயும் நோய் உண்டாக்கும் அணுக்களைக் கொல்லுவது கிறிஸ்தவர்களின் கடமையாகும். அம்மை நோய் உள்ள பகுதிகளில் அம்மை குத்துதலும், காலரா பரவியுள்ள இடங்களில் அதற்கு எதிரான ஊசிகுத்துவதும், மற்ற விடங்களில் அரசு அக்கறையுடன் செய்யும் காரியங்களில்

 கிறிஸ்தவர்கள் அதனை எதிர்ப்பதும் வேத உபதேசத்திற்கு ஏற்றதல்ல. அப்படி எதிர்ப்பவர்கள் கிறிஸ்தவ சமயத்தை மக்கள் இகழ்வதற்கு இடமாக்குகிறார்கள். வியாதி குணப்படுதலின் வரத்தைப் பற்றி மிகவும் ஊக்கமாக ஆதரிக்கும் கிறிஸ்தவர்கள் காயப்பட்டால் முதல் உதவிக்காகப் பயன்படும் அயோடின், கட்டு கட்டுதல் முதலானவைகளை உபயோகப்படுத்துவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அப்போஸ்தலர்கள் காலத்தில் நோயைத் தீர்க்கும்படி வெறும் ஜெபம் மட்டும் அவர்கள் செய்தாரில்லை. பிரார்த்தனைகூட தேவையில்லாதிருந்தது .பரி பேதுருவின் நிழலே வியாதியஸ்தர்களை குணப்படுத்தியது. பிணியாளிகளை படுக்கைகளின் மேலும் கட்டில்கள் மேலும் கிடத்தி பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு அவர்களை வெளியிலே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள். அப்.5:15 பரி. பவுல் உபயோகித்த உறுமால்களையும் கச்சைகளையும் (handkerchiefs and aprons) நோயாளிகள்மேல் போட நோய்கள் அவர்களை விட்டு நீங்கிப்போகவும் பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டு புறப்பட்டன என்பதையும் நாம் வாசிக்கிறோம். (அப். 19:12) இங்ஙனம் குணப்பட்டவர்கள் கிறிஸ்தவர்களல்ல எனவும் நாம் பார்க்கிறோம்.

அற்புதங்களைப் பற்றி நாம் பார்க்கும்போது முதல் முதலாக நாம் பார்ப்பது மோசேயின் மூலமாக நடந்த தொன்றாகும். அந்தக் காலமுதல் அற்புதங்கள் சிலரால் மட்டும் நடத்தப்பட்டு வந்தன என நாம் காண்கிறோம். இஸ்ரவேலுக்கு ஒரு கடவுள் உண்டென்று வெளிப்படுத்தும் பொருட்டும், இதர இனத்தவர்கள் வல்லமையுள்ள தேவனை விசுவாசிக்கவில்லை என்று காண்பிப்பதற்காகவும் முதன்முதலாய் அற்புதங்கள் நடந்தன. யூத மக்கள் ஒரு சபையாய்த் தொடங்கின காலங்களில் மோசேயினால் அற்புதங்கள் நடந்தன. அதுபோல கிறிஸ்து சபை ஆரம்ப காலத்திலே கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர் சிலரும் அற்புதங்கள் நடத்தினார்கள். மோசேயின் காலத்திற்கு பின்பு எலியா தீர்க்கதரிசியின் காலத்திலும் அற்புதங்கள் நடந்தன. இஸ்ரவேலர் ஆராதித்த யேகோவா அல்லது வேறு இனத்தவர் ஆராதித்த பாகாலோ வல்லமையுள்ள தெய்வம்

 என்று விவாதித்து நிரூபிக்க அற்புதங்கள் இந்தசமயத்தில் நடந்தது. பாவத்தில் மூழ்கியிருந்த ஒரு மக்கள் சமூகத்தை கடவுள் வழியில் நடத்தி கொண்டுவர இந்த அற்புதங்கள் அத்தியாவசியமாக இருந்தன. மற்ற காலங்களில் அற்புதங்கள் வெகு குறைவாகவே இருந்தன. அதே காரியங்களை கிறிஸ்து சபையிலும் நாம் காணலாம்.

2 தெசலோனிக்கேயர் 2:9.

அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் இருக்கும். என்று நாம் வாசிக்கிறோம். உலகப் படைப்பின் பின்னர் மோசேயின் காலம் மட்டும் அற்புதங்கள் உண்டாகவில்லை. அற்புதங்கள் எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியாக நடந்ததில்லை.

சில முக்கியமான காலங்களில் மட்டுமே அவை நடந்தன என்றுநாம் இதுவரை பார்த்தோம். வேத புத்தகத்தின்படி அற்புதங்களை நடப்பிக்கும் வரம் தேவன் எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கவில்லை. அற்புதங்களை நடப்பிக்கும் வரம் ரட்சிக்கப்பட்ட விசுவாசத்தின் (Saving faith) அடையாளமல்ல. அது திருச்சபை ஆரம்பித்த காலத்தில் ஒரு சிலர்க்கு கொடுக்கப்பட்ட வரங்களாயிருந்தது. அந்தக் காலத்திற்கு அது அத்தியாவசியமாக இருந்தபோதிலும் பிற்காலத்தில் அது அத்தியாவசியமாக இருந்ததில்லை.

பரி. பவுல் தீமோத்தேயுவிற்கும் தீத்துவிற்கும் எழுதிய நிருபங்களில் சபையின் வேலைகளை செய்த சபையின் ஊழியர்களுக்கு அற்புதங்களை நடத்தும் வல்லமையை குறைந்தது பிணியை நீக்கும் வரமாவது அவசியமானது எனக் கூறவில்லை என்பதை நாம் மனதில் நினைவுறுத்த வேண்டும்.

யோவான் 14: 12. *நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.* என்று கிறிஸ்து நாதர் கூறியுள்ளார். கிறிஸ்து செய்ததைக் காட்டிலும் பெரிய வல்லமைகளை அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் செய்தார்கள் என்று நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம்.

79 நம்முடைய ஆன்மீக சுகம், உடல் சுகத்தைக் காட்டிலும் மேலானது. உதாரணமாக புற்று நோய் மூலம் உடலில் உண்டாகும் கிருமிகளைக் காட்டிலும், பாதாளத்தில் நாம் அனுபவிக்க வேண்டி சாகாத புழுக்கள் எவ்வளவோ பயங்கரமானது என்று நாம் நினைவில் வைத்தால் மிகவும் நல்லது. நான் செய்தவைகளைக் காட்டிலும் பெரிய கிரிகைகளை செய்வார்கள் என்றுள்ளது. அப்படியே நடந்ததாக நாம் காண்கிறோம், இயேசு கிறிஸ்து பிரசங்கம் செய்து மனந்திரும்பியதைக் காட்டிலும் பரி. பேதுரு செய்த பிரசங்கத்தினால் மனந்திரும்பிய ஆன்மாக்கள் மிக அதிகம்.

Godet என்ற வேத சாஸ்திர வல்லுநர் இவ்வாறு கூறுகிறார். என்னுடைய சரீரம் வேதனையுறுங்கால், கிறிஸ்து என்னை குணப்படுத்தும் பொருட்டு அவரே வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். கிறிஸ்துவே தமது உடலில் நேரில் என் முன்பாக வந்து என்னைக் குணப்படுத்த வேண்டுமென்று ஆசிக்கத்தக்கவண்ணம் நான் சோதனைக்கு உட்படுகிறேன். இந்த என் விருப்பங்கள் யூதர் கிறிஸ்துவின் பிரசங்கம் கேட்டும் அப்பங்கள் புசித்தும் மறுபடியும் அவர்கள் அப்பத்திற்காக மட்டும் விரும்பினதைப் போல இருக்கிறது. ஜீவ அப்பத்திற்காக அவர்கள் விரும்பினாரில்லை. கிறிஸ்துவானவர் பலருக்கும் உடற்பிரகாரமாய் நோயினைக் குணப்படுத்தல், நம்மில் ஒவ்வொருவரிலும் நாம் நோயாளிகளாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நமக்குள் உண்டாக வேண்டிய ஆத்தும நோயின் விடுதலையின் அடையாளமாக மட்டும் இருந்தது.

விவிலியத்தின் ஐந்தாம் புத்தகமாகிய உபாகமத்தில் இவ்வகை அடையாளங்களைப் பற்றியும் அற்புதங்களையும் மிக விவரமாய் கூறப்பட்டுள்ளது. அந்த புத்தகத்தில் 13ம் அத்தியாயம் முழுவதையும் 2-15 வாக்கியங்களை அதிக கவனமாயும் வாசித்து தெரிந்து கொள்ளுங்கள் இப்படிப்பட்ட தவறான உபதேசங்களால் உங்கள் கவனத்தை திருப்புபவர்களுக்கு ஏற்பட்ட தண்டனையைப் பற்ற விவரிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் வியாதியைக் குணப்படுத்தும் கூட்டத்தார் மருத்துவமனைகளுக்குச் சென்று அங்கே அதிக வேதனைக்குள்ளாயிருந்த பிணியாளருக்காக வேண்டி ஜெபம் செய்து அவர்களைத் தேற்றும் பொருட்டு ஒருவித முயற்சியும் செய்ய

விரும்புவதில்லை. பெரிய ஜனக் கூட்டத்திற்கு முன்பு நின்று அவர்களுக்கு பிரசிங்கித்து ஒரு பெரிய கலக்கம் உண்டாக்கி பெலவீனரும் அஸ்திரமுமாகிய மனுஷரை மனோவசீகரமாகிய ஏதோ ஒரு சக்திக்கு கீழ்ப்படுத்த மட்டுமே அவர்கள் விரும்புகிறார்கள்.

W.E. Grant என்னும் ஒரு வியாதியை குணப்படுத்தும் மேலாளர் "Spiritual Gifts" ஆவியின் ஈவு என்னும் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். அதில் அப்போஸ்தலர் காலத்து நடந்ததும் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் நோய்களைக் குணப்படுத்தும் மகா அதிசயத்துடன் கூடிய ஒரே பிரசங்கம், அந்த அற்புதம் இல்லாமல் செய்யும் ஒரு டஜன் பிரசங்கத்தைக் காட்டிலும் அதிக ஆத்துமாவை ரட்சித்தும், அசுத்த ஆவிகளை விரட்டவும் செய்யும்; என்று கூறியுள்ளார்.

இப்படிக் கூறும் இந்த வியாக்கியானம் வேத புத்தக சத்தியத்தினின்று பூரணமாய் நேரிடையானது. இயேசுக் கிறிஸ்து தன் வாழ்நாளில் வேறு யார் ஒருவரைக் காட்டிலும் கூடுதலான அதிசயங்களையும் நோய்களை குணப்படுத்தலையும் செய்திருந்தும், தன்னைச் சுற்றியிருந்தவர்களிலிருந்து அசுத்த ஆவி புறப்பட்டு போகாமலும், அவர்கள் ரட்சிப்பின் அனுபவத்திற்குள் வராமலும் தன்னையே சிலுவையில் அறையும்படி செய்தது என்று வேத புத்தகத்தில் தெளிவாய் கூறியிருக்கிறது.

பரி. மத்தேயு 25:36, 43 வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள ஒரு காரியத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

*36ம் வசனம் வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்.; நான் வியாதியாயிருந்தேன் என் சீஷர்களாகிய நீங்கள் என் வியாதியைக் குணப்படுத்தினீர்கள் என்று கிறிஸ்து கூறவில்லை.*

*43ம் வசனம் வியாதியுள்ளவனாயிருந்தேன் என்னை விசாரிக்கவரவில்லை என்பார்.*

நீங்கள் என்னை சுகப்படுத்தவில்லை என்று கிறிஸ்து கூறவில்லை. இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டியது என்ன?

நோயுள்ளவர்களை காணச் செல்லவும் அவருக்கு தேவையான சேவை செய்யும்படியும் நம் ரட்சகர் நம்மோடு கூறுகிறார் என்று நாம் அறிய வேண்டாமா.

உலகமுடிவு பரியந்தம் சபையாக இப்படிப்பட்ட சேவை

 செய்யும்படி கிறிஸ்துநாதர் நம்மிடம் கற்பிக்கிறார்.

இவ்வுலகத்தின்கண் நோயில்லாமல் செய்ய பக்தர்களும் நோயை குணப்படுத்தும் வரம் உள்ளவர்களும் குறைந்தது கிறிஸ் துவர்களுக்காவது நோயை குணப்படுத்தும்படி கிறிஸ்துநாதர் ஒரு காலத்தும் உபதேசிக்கவில்லை, உபதேசம் செய்யவும் இல்லை என்றுள்ளதை நாம் அறிய வேண்டும்.

தெய்வத்தை அணுகாமல், மருந்துகளிலோ, மனித சம்பிரதாயத்திலோ நம்பிக்கை வைத்தல் குற்றமானது. கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைக்காமல் உடல் சுகமாக மருந்துகளிலோ, நோயை குணமாக்கும் வரம் உடையவர்களிடமோ நம்பிக்கை வைப்பது சுவிசேஷ உபதேசங்களுக்கு எதிரானது. தேவன்மேல் நம்பிக்கை வைக்காமல் வைத்தியர்கள் மேல் நம்பிக்கை வைத்ததனால் ஆசா அரசன் மரணமடைந்தான் என்று நாம் வாசிக்கிறோம். (2 நாளா 16: 12

திருச்சியிலே டாக்டர் ஜோசப் கண் ஆஸ்பத்திரியிலே தொங்கவிடப்பட்டிருக்கும் ஒரு பலகை உள்ளது.

We dress the wounds
God heals them

*நாங்கள் காயங்களைக் கட்டுகிறோம்*
*ஆண்டவரே அதை குணப்படுத்துகிறார்*

இதுதான் குணப்படுத்தலைப்பற்றி கூறப்படும் சபையின் உபதேசம். அதுதான் எல்லாக் கிறிஸ்துவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

சிகிச்சையின் மூலம் கோடிக்கணக்கான மக்கள் தங்களுடைய வேதனையினின்று விடுதலை அடைந்து வருகிறார்கள். பரிசுத்த ஆவியைப் பெற்ற சிலருக்கு நோயிலிருந்து குணம் நேராக கடவுளிடமிருந்து கிடைக்கலாம். ஆனால் அந்நிலைக்கு வராத அநேக கிறிஸ்தவர்களுக்கும். கணக்கிட முடியாத கிறிஸ் தவரல்லாதவர்களுக்கும் அவர்களின் வேதனையினின்றும் இடர்களில் நின்றும் விடுதலை கொடுக்கும் பொருட்டு தேவன் கொடுத்துள்ள சிகிச்சையின் ஈவை கிறிஸ்துவின் நாமத்தில் பயன்படுத்த வேண்டுமல்லவா என்பதை சபை உணர வேண்டும்.

## அத்தியாயம் ஆறு

# அப்போஸ்தல அதிகாரம்

*I சாமுவேல் 4:13.*
*தேவனுடைய பெட்டிக்காக அவன் இருதயம் தத்தளித்துக் கொண்டிருந்தது.*

இஸ்ரவேல் ஜனங்கள் பெலிஸ்தரோடு யுத்தம் செய்யும் பொருட்டு எபனேசரில் கூடினார்கள். ஆனால் யுத்த ஆரம்பத்தில் இஸ்ரவேலர் தோல்வி அடைந்தார்கள். சுமார் 4000 பேர் வெட்டுண்டு போனார்கள். எப்படி இருந்தாலும் இந்த யுத்தம் ஜெயிப்பதற்கு மூப்பன்மார் ஒரு ஆலோசனை கூறினார்கள். கிறிஸ்துவை கொல்வதற்கும் ஆலோசனை கூறியது மூப்பன்மார்களே என்று பார்க்கிறோம். பல சந்தர்ப்பங்களில், பரிசேயரும் சாஸ்திரிகளும் ஆலோசனைக்காய் மூப்பன்மாரிடத்தில் போனார்கள் என்று சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறோம்.

யுத்தம் ஜெயிப்பதற்கு மூப்பன்மார் கூறிய ஆலோசனை கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சீலோவாவிலிருந்து யுத்த களத்திற்கு உடனே கொண்டு வரவேண்டும் என்பதே. பரிசுத்த தெய்வத்தின் பெட்டியை, சேனைகளின் தேவனாகிய யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்டியை ரத்தம் சிந்தும் யுத்த களத்திற்கு கொண்டு வருவதால் அவர்கள் ஜெயமடைவார்கள் என்று கருதினார்கள். தேவனுடைய திருவுளம் என்னவென்று அறியாமல் தெய்வசக்தி பல இடங்களிலும் நமக்கு வெளிப்பட வேண்டுமென்று நாமும் விரும்புகிறோம். தேவனுடைய வல்லமை வெளிப்படுவதை கிறிஸ்தவர்களாகிய நாமும் பரீட்சிக்க விரும்புகிறோம். தெய்வ உடன்படிக்கைப் பெட்டியை ஜனங்கள் உடனே யுத்த களத்திற்கு கொண்டு வந்தார்கள். உடன்படிக்கைப் பெட்டியை ஏலியின் குமாரராகிய ஓப்னியும் பினெகாசும் தலைமை தாங்கி கொண்டு வந்தார்கள்.

83 கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்திலே வருகிறபோது, இஸ்ரவேலரெல்லாம் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரியாய்ச் சத்தமிட்டார்கள். பெலிஸ்தர் பயந்து பிரமித்துப்போனார்கள். இருந்தபோதிலும் தைரியத்துடன் போர் செய்தார்கள். அந்த யுத்தத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டார்கள். தேவ உடன்படிக்கைப் பெட்டி விருத்தசேதனமில்லாத பெலிஸ்தர் கைவசப்பட்டது. ஏலியின் புத்திரர்களும், 30,000 காலாட் படைகளும் யுத்த களத்தில் முறியடிக்கப்பட்டு இறந்தார்கள். உடன்படிக்கைப் பெட்டியின் அற்புத சக்தியைத்தான் அவர்கள் விசுவாசித்தார்கள். ஆனால் பெட்டியை உருவாக்கிய அந்த தெய்வத்தை அவர்கள் விசுவாசிக்கவில்லை. பெட்டி அவர்களை ஜெயிக்கப் பண்ணும் என்று நம்பி அதன்மேல் அவர்கள் முழு விசுவாசத்தையும் வைத்தார்கள். தங்களுடைய யுத்தங்களை ஜெயிக்கப் பண்ணுகிறவராகிய கர்த்தரை அவர்கள் நோக்கிப் பார்க்கவில்லை இந்த யுத்தம் முடிந்தவுடன் ஏலியிடம் இந்த துக்ககரமான வார்த்தைகளைக் கூறுவதாக நாம்கிறோம் இந்த விவரம் கூறியபோது ஊரெங்கும் புலம்பல் உண்டாயிற்று. முதலில் தன் புத்திரர் இருவரும் இறந்தார்கள் என்று ஏலி அறிந்தான். அது அவனை மிகவும் துக்கமடையச் செய்தது. இருந்தபோதிலும் அவன் அந்த வேதனையைச் சகித்தான். அடுத்ததாக அவன் கேள்விப்பட்டது: கர்த்தருடைய பெட்டியையும் பெலிஸ்தர்கள் பிடித்துக்கொண்டு போனார்கள். இது அவனைக் கலங்க திகைக்க வைத்தது. அவன் மல்லாக்க விழுந்து பிடறி முறிந்து செத்தான். இது ஒன்று மட்டும் அவனுடைய குடும்பத்தில் நடந்த சம்பவமல்ல. பினகாசியின் மனைவியும் தன் மருமகளுமான அந்த பெண் நிறை கர்ப்பிணியாயிருந்தவள் கர்ப்ப வேதனைப்பட்டாள். அவள் ஆண் பிள்ளையைப் பெற்றாள் என்றாலும் மகிமை இஸ்ரவேலை விட்டு விலகிப்போயிற்று என்று சொல்லி அவளும் மரித்தாள். இது ஒரு புலம்பலுக்குரிய சம்பவமாகும். இதிலிருந்து நாம் சில பாடங்களைப் படிக்க வேண்டும்.

முதலாவது உடன்படிக்கைப்பட்டி இந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஸ்திரி புருஷர் பேதமின்றி எவ்வளவு உயர்ந்ததாக

தோன்றியது என்று நாம் ஆலோசிக்க வேண்டும். அதனுடைய விலையை மதித்தால் அது ஒரு சாதாரணப் பெட்டியாகும்.

அந்தப் பெட்டி வெறும் மரப்பலகையில் சாதாரணமாக செய்யப்பட்டதாகும். அது 22 முழும் நீளம் 11 முழும் அகலம் 12 முழும் உயரமுள்ள ஒரு பெட்டியாகும். அதன் மேல் மூடி மட்டும் பொன்னால் செய்யப்பட்டிருந்தது. மற்றப் பாகங்கள் பொன் முலாம் பூசப்பட்டிருந்தது. பெட்டியின் மேல் மூடியில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பொன்னாலான கேரூபின்கள் நின்று கொண்டிருந்தன. இதில் உள்ள பொன்னைக் கணக்கிட்டால் அந்த காலத்தின் மதிப்பிற்கு மிகவும் துச்சமானதாகும். இருந்தாலும் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் உயிரைக் காட்டிலும் அதை பெரிதாக மதித்தார்கள். அதன் காரணம் நாம் அறிய வேண்டுமானால் அந்தப் பெட்டியினுடைய மேல்மூடியை நாம் திறந்து பார்க்க வேண்டும். அதில் சில பிரத்தியேகமான சாமான்கள் இருந்தன. அது என்ன வென்றால் எபி. 9 : 4-5

(1) இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தர யாத்திரை செய்யும் பொழுது அவர்களுக்குக் கிடைத்த ஆகாயத்து மன்னா ஒருபடி ஒரு பொன் கலசத்தில் போட்டு வைத்திருந்தது.

(2) ஆரோனுடைய தளிர்த்தகோலும் இருந்தது.

(3) இது மாத்திரமல்ல சீனாய் பர்வதத்தில் அக்கினியிலும், மேகத்திலும் காரிருளிலும் இருந்து சர்வ வல்லமையுள்ள தேவன் தன் சொந்தக்கரத்தால் எழுதி இருந்த இருகற்பலகைகளும் இருந்தன.

இந்த மூன்று வஸ்துக்கள் இந்தப் பெட்டியில் இருந்தன. அது மாத்திரமல்ல அதன் மூடியின்மேல் கிருபாசனம் உண்டாயிருந்தது. இரண்டு கேரூபின்கள் சிறகுகளின் மத்தியிலிருந்து *ஷெக்கைனா* மகிமை எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இஸ்ரவேலின் தெய்வம் தன்னுடைய மக்களுக்காக வேண்டி இக்கிருபாசனத்தில் தன்னைத்தான் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. இந்த சங்கதிகளை மனதில் நினைத்தவுடன் ஜனங்களை 40 வருடம் நியாய பரிபாலனம் செய்த ஏலி பிடறிமுறிந்து மல்லாந்து விழுந்து இறப்பதற்கு காரணமாக இருந்தது. ஓவ்வொரு இஸ்ரவேலனுக்கும் யெகோவாவின் பெட்டி தன் ஜீவனைக்காட்டிலும் பெரிதாக இருந்தது.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவ உடன்படிக்கைப் பெட்டி எப்படி உயர்ந்ததாக இருந்ததோ அதேபோல நமக்கும் தேவன் ஒரு நியம விதிகளை ஏற்படுத்தி அருளி இருக்கிறார். அது பழைய ஏற்பாடும் புதியஏற்பாடும் உள்ள இந்த வேத புத்தகமே அல்லாமல் வேறொன்றுமில்லை. கற்பலகையில் எழுதியிருந்த அந்த கற்பனைகள் எல்லாம் ஒரு வித்தியாசமுமின்றி இதில் எழுதியிருக்கிறது. நம்முடைய அருமை இரட்சகர் திருவாய் மலர்ந்தருளிய அந்த மன்னாவும் இதில் உள்ளது. இஸ்ரவேல் ஜனங்களின் உடன்படிக்கைப் பெட்டி நாம் இப்பொழுது விசுவாசிப்பதும் அனுபவிப்பதுமான சில காரியங்களின் நிழலாட்டமாயிருக்கிறது. வருடத்திற்கு ஒரு முறை மட்டும் தேவனுடைய ஆசாரியருக்குத் தன்னைத்தான் வெளிப்படுத்தினார். காலப் போக்கில் இதே தெய்வம் இம்மானுவேல் என்ற பேரில் தெய்வம் நம்மோடிருக்கிறார் என்ற பொருளுடன் நம்முடன் வாசம் செய்கிறார்.

வெளி. 21:3 *மேலும் பரலோகத்திலிருந்து ஒரு பெருஞ் சத்தத்தைக் கேட்டேன். அது இதோ, மனுஷகளிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது.*

கிருபாசனத் தண்டையில் ஜனங்களுக்காக வேண்டி பிரதான ஆசாரியன் இரத்தத்தைக் கொண்டு மன்றாடினான். ஆனால் அது வருடத்தில் ஒரு முறை போதுமாயிருந்தது. ஆனால் நமக்கோ கிருபாசனத் தண்டையில் ஒவ்வொரு நிமிஷமும்,எல்லா நாட்களிலும் நமக்குச் சேர முழு உரிமையும் வழியும் உண்டு. யூதர்கள் பயபக்தியோடு பாவித்து வந்த கேரூபின்கள் சேராபீன்கள் மட்டுமல்ல எல்லா தேவ தூதகணங்களும் நமக்கு சேவை செய்பவைகளாக இருக்கின்றன. லூக் 15.7 *மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டு.* தேவ அப்பமாகிய வசனத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒவ்வொரு நிமிஷமும் போஷிக்க வேண்டும். கற்பனைகனை தேவன் நமக்கு எழுதி அளித்திருக்கிறார். தெய்வத்தினுடைய ஆச்சரியமும் அனுகூலமுமான வார்த்தைகள் நமக்கு இந்த புத்தகத்திலே சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. 1 ராஜா. 8:56 அவர் தம்முடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும்

 தவறிப்போகவில்லை என்று சாலமோன் கூறினான்.

ஏனெனில் இந்த கற்பலகைகளை சீனாய் பர்வதத்தில் மோசேயிடம் கொடுக்கப்பட்டபோது என்ன ஏற்பட்டது? யாத்தி 32:28 அந்நாளில் ஜனங்களில் ஏறக்குறைய 3000 பேர் விழுந்தார்கள். ஆனால் யேசு ரட்சகருடைய ஆவியை தன்னுடைய சொந்த ஜனத்திடம் கொடுத்த போது அந்நாளிலே 3000 பேர் ரட்சிக்கப்பட்டார்கள். தேவன் கற்பலகையிலுள்ள கற்பனைகளை இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்தபோது யெகோவா அக்னி,மேகம்,காரிருள் மூலமாக வெளிப்படுத்தினார். அதேபோல நியாயப் பிரமாணத்திற்கு பதிலாக பிதாவாகிய தேவன் தன் புத்திரனை இந்த உலகத்தில் பலியாக கொடுத்தபோது மத்தியான வேளையில் இருட்டு உண்டாயிற்று.

தெய்வத்தின் திவ்விய வசனங்கள் அடங்கிய இந்த திவ்விய புத்தகம் கிடைத்ததில் நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம். 1600 வருட காலங்களில் அநேகமாக ஒருவர்க்கு ஒருவர் தெரியாத 39 ஆசிரியர்களால் எழுதப்பட்ட 66 புத்தகங்கள் கொண்டது இந்த திவ்விய நூல். இது மனித வர்க்கத்திற்காக வேண்டி உலக சம்பந்தமாயும் ஆன்மீக சம்பந்தமாயுமுள்ள நித்திய சத்தியங்களை ஒருவித பிழையுமில்லாமல் வெளிப்படுத்தியிருக்கிறது. அவைகளில் காணப்படுகின்ற அரசியல் சம்பந்தமான காரியங்களோ அல்லது விஞ்ஞான சம்பந்தமான காரியங்களோ கடந்த சில நூ ற்றாண்டுகளாக, விமர்சிக்கப்பட்டும் இதில் ஒன்றாவது தவறு என்று இந்தப் புத்தகத்திலே கண்டுபிடிக்கப்படவில்லை. இதில் ஏதாவது ஒரு பெரிய குற்றம் தென்பட்டிருக்குமானால் இந்த புத்தகத்தின் ஆவியின் ஊக்கம் ஒரு நாளாவது நின்றிருக்காது. இந்த புத்தகத்திலே கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் ஒன்றாவது சரியாக நிறைவேறவில்லை என்று ஒருவராவது சொல்லி இருந்தால் இந்த திவ்விய புத்தகத்தை ஒன்றுமில்லாமல் எடுத்துப் போட்டிருப்பார்கள். விஞ்ஞானத்துறையிலே மிக முன்னேறியிருக்கும் இந்த காலத்திலேகூட இப்புத்தகத்தில் கூறியுள்ள விஞ்ஞான உண்மைகளில் ஏதாவது ஒன்றாவது தப்பு என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி நிரூபித்திருந்தால் கல்விமான்கள் இந்த புத்தகத்தை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டார்கள். புராதன காலம் தொட்டு, கலைகளிலே

வல்லவர்கள் என்று எண்ணியிருந்த எகிப்தியரிடையும், பாபிலோனியரிடையும் கிரேக்கரிடையும் ரோமரிடையும், மத நூல்கள், வெறும் புராணம் என்று பிற்காலத்தில் அவர்கள் சந்ததிகள் தள்ளிவிட்டிருக்கிறார்கள். நம்முடைய வேத புத்தகத்திலே உள்ள 66 புத்தகங்களின் மூலம் மூன்று கண்டங்களிலே நடந்த முக்கிய சம்பவங்களை ஆதாரமாக கண்டு மூன்றுவித பாஷைகளில் ஒருவர்க்கு ஒருவர் தெரியாமல் எழுதப்பட்டது. இதை நாம் சரிவர அறியும்போது தான் இந்த புத்தகத்தின் ஆவியின் ஊக்கத்தை (Divine inspiration) நாம் மேலும் மேலும் விசுவாசிக்கும்படி செய்கிறது. அணு சக்தி ஆராய்ச்சியின் எக்ஸிகூடிவ் டைரக்டர் Mr. William Pollard வேத புத்தகத்தைப் பற்றி இவ்வாறு கூறியிருக்கிறார்:

நான் எங்கெங்கு போகிறேனோ அங்கெல்லாம் நான் காணும் சாஸ்திர வல்லுநர்களும், பேராசிரியர்களும், இந்த வேத புத்தகத்திலே நான் விசுவாசிக்கும் அதே சத்தியங்களையே அவர்களும் விசுவாசிப்பதை நான் காண்கிறேன். இதற்கு வேறு ஒரு காரணமுமல்ல. ஆனால் இந்த பரிசுத்த வேத புத்தகத்தில் மனிதர்களால் விடை காண முடியாத சில பிரச்சனைகளுக்கு சரியான பதிலை இப்புத்தகம் அளிக்கிறதினால் தான்.

முதன் முதலாய் சந்திரமண்டலத்திற்குப் போன மனிதர் கொண்டுபோன ஒரே புத்தகம் இந்த வேதமே. அவர்கள் திரும்பிவரும் யாத்திரையிலே இந்த உலகம் முழுவதற்கும் அவர்கள் தாவீதின் 8ம் சங்கீதத்தை வாசித்தார்கள். *உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும் நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது மனுஷனை நீர் நினைப்பதற்கு அவன் எம்மாத்திரம்?* சங்கீதம் 8: 3 என்று பாவனையின் மூலமட்டுமே கிரகங்களைக் கண்ட தாவீது கூறிய அந்தவார்த்தைகள், சந்திரமண்டலத்தில் முதல் முதலாக தங்கள் பாதங்களைப் பதித்த மனிதர்க்கும் அந்த வாக்குகள் சத்தியமான வாக்குகளாய் அவர்களுக்கு அனுபவத்தில் கிடைத்தது. வேத புத்தகம் விலையேறப்பெற்ற சாதனங்கள் அடங்கிய ஒரு பெரிய பரணுக்கு ஒப்பானது என்று ஒருவர் கூறுகிறார். நமக்கு தேவையான யாவும் அதில் இருக்கிறது. அதில் பாவிக்கு ரட்சகரும் (1 தீமோ 1:15), அடிமைக்கு ஒரு மீட்பரும்

(ஏசாயா 43: 1), பிணியாளிக்கு ஒரு வைத்தியனும் (மாற்கு: 2:17) குற்றவாளிக்கு ஒரு மத்தியஸ்தரும் (1 தீமோ. 2:5) ஒரு வழிகாட்டியும் (ஏரேமியா 3 : 4), திக்கற்ற பிள்ளைகளுக்கு ஒரு தகப்பனும் (சங்கீதம் 68: 5) உண்டு. அதில் நமக்கு, ஜீவ அப்பமும், நித்திய ஜீவ ஊற்றும், மங்காத வெளிச்சமும் அதில் உண்டு.

கிறிஸ்து சபை பெட்டி தான் கிறிஸ்துவின் சுவிசேஷம். அது கிறிஸ்தவர்களின் ஷெக்கைனாவாகும். சீலோவில் நிழலிட்ட அந்த மகிமையைக் காட்டிலும் எவ்வளவோ பிரதானமானது கிறிஸ்துவின் மகிமையுள்ள சுவிசேஷத்தின் பிரகாசம். யோவான் அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவிற்கு ஒரே பேரானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என்று சாட்சி கூறினார் (யோவான் 1:14). அப்போஸ்தலர்கள் காலத்தின் இந்த திவ்விய உபசேத்தில் ஒரு மாறுதலும் சம்மதிக்க மறுத்து தங்கள் ஜீவனை அதற்காக பலியிட்டவர்களான திரளான மக்களின் சோக மரணத்தின் விவரங்களால் கிறிஸ்து சபையின் சரித்திரம் நிறைந்திருக்கிறது. நாமும் கிறிஸ்துவின் நிர்மலமான சுவிசேஷத்தை காக்கும் பொருட்டு அதன் பிரசாரத்திற்காக நம் ஜீவனையே கொடுக்க வேண்டுமென்றாலும் நாம் அதற்கு தயாராக இருக்க வேண்டும். நம்முடைய பிதாக்களாகிய பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நாமும் போராடவேண்டும் என்று யூதா 3ல் பார்க்கிறோம்.

இந்த சுவிசேஷத்தின் விலைமதிப்பு என்ன என்று அறியும்படி தேவன் தாமே நம் கண்களைத் திறப்பாராக. அதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்களை அடையும்படி தேவன் நம் இருதயங்களைத் திறப்பாராக. அதன் மூலம் உண்டாகும் மகத்துவத்தின் நம்பிக்கை நம்மில் உண்டாக தேவன் அருள்புரிவாராக.

மூன்றாவதாக ஆரோனுடைய தளிர்த்த கோல் உண்டு. ஆரோனுடைய தளிர்த்த கோல் ஆசாரிய தத்துவத்தைக் காட்டுகிறது. நான் அப்போஸ்தல பாரம்பரியத்தை சார்ந்த திருச்சபையைச் சேர்ந்தவன் என்று கர்த்தரைத் துதிக்கிறேன். யேசு கிறிஸ்து ஸ் தாபித்த சபையில் குருவானவர்கள், ஊழியர்கள் வேண்டியதில்லை என்று வாதிக்கும் ஒரு கூட்டம் நம்மைச் சுற்றி காண்கிறோம். ஆனால்

89 எபிஸ்கோபல் திருச்சபை மட்டுமே புதிய ஏற்பாட்டில் உள்ளது. முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தல சபை ஒரு சகோதர சங்கத்தால் பரிபாலிக்கப்படவில்லை. ஏனெனில் ஆதிகால அப்போஸ்தலர்களின் திருச்சபையில் பிரத்தியேகமாக ஊழியர்கள் இருந்தார்கள் என்று நாம் காண்கிறோம். சபையின் ஆரம்ப காலத்திலேயே பலதரப்பட்ட ஊழியர்கள் இருந்தார்கள் என்று வாசிக்கிறோம். உத்தேசமாக 60 வருட கால திருச்சபை காரியங்களை இந்த புதிய ஏற்பாட்டில் எழுதியிருக்கிறது. ஆரம்ப வருடங்களில் அப்போஸ்தலர்களே குருவானவர்களாயும், ஊழியக்காரர்களாயும் இருந்தார்கள். கிறிஸ்தவர்கள் உண்டாகி சபைகள் பெருகினவுடனே அவர்கள் பிரத்தியேகமான ஊழியர்களை ஏற்படுத்தத் தொடங்கினார்கள்.

1. பக்தி விசாரணைக்கு டீக்கன் மாரைத் தெரிந்தெடுத்தார்கள் என்று பார்க்கிறோம். (அப். 6:6).

அவர்களைத் தெரிந்தெடுத்து அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம் பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள் என்று பார்க்கிறோம்.

(1) வெறும் ஒரு சாதாரண தொழிலாக இருந்த போதிலும் அவர்கள் தலைமேல் கைகளை வைத்து ஜெபம் பண்ணி பின்புதான் அவர்களை அனுப்பி வைத்தார்கள்.

(2) இது மாத்திரமல்ல சபைக்கு மூப்பன்கள் அவசியம் ஆயிற்று. பட்டணங்கள் தோறும் மூப்பன்மார்களை நியமித்ததாக தீத்து 1: 5ல் வாசிக்கிறோம். பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் உன்னை கிரேத்தா தீவிலே விட்டுவந்தேன். அப்போஸ்தலர்கள் அந்த சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்தினார்கள் என்று அப். 14:23ல் நாம் வாசிக்கிறோம்.

*23. அல்லாமலும் அந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.*

(3) மூப்பன் மார்மட்டுமல்ல பிஷப்புகளையும் சபைகள் நியமித்தது. அவர்களுக்கு உள்ள யோக்கியதாம்சங்கள் என்னவென்று 1 தீமோத்தேயு (3:8!13) வாக்கியங்களிலும் தீத்து

1:6லும் விவரிக்கப்பட்டிருக்கிறது. 1. தீமேத்தேயு : 3: 1ல் முன்னதாக சோதிக்கப்பட்டு உதவிக்காரனாக ஊழியம் செய்யலாம். இப்பொழுது நம்பாஷை மூலம் சொன்னால் அபிஷேகம் பெற்றவர்களாய் ஊழியம் செய்யவேண்டும் என்றுதான் அர்த்தம்.

1 திமோத்தேயு 3:1 ஏபேசு நகரில் தீமோத்தேயும். கீரேத்தாவில் தீத்துவும் பிஷப்பானார்கள். அந்தியோகாவில் பிஷப்பாக இக்னேஷியஸ் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். அது மாத்திரமல்ல. வெளிப்படுத்தின விசேஷம் எழுதுவதற்கு முன்பே ஆசியா மைனரில் 7 சபைகளில் பிஷப்புகள் நியமிக்கப்பட்டிருந்தனர். 7 சபைகளின் தூதுவர்கள் இந்த பிஷப்புகளே. நம் சபையில் வைத்திருக்கும் டீக்கன்மார், குருவானவர், பிஷப்புகள் எல்லாம் ஆதி அப்போஸ்தல திருச்சபையில் உண்டென்று நாம் மறந்துவிடக்கூடாது. அந்தப் பெயர்களும் அவையேதான். இந்த பட்டங்களை அப்போஸ்தல நடபடிகளிலும் நிருபங்களிலும் வாசிக்கிறோம். அது மாத்திரமோ. ஒவ்வொரு சபையிலும் நியாயம் விசாரித்து, தர்க்கித்து, விஷயங்களைத் தீர்மானித்து, தீர்ப்பு வழங்கும்படி கௌன்சில் கூட்டங்களை அப்போஸ் தலர் ஏற்படுத்தி இருந்தார்கள்.

(4) இவர்களுக்கு வேண்டிய யோக்கியதாம்சங்களைப் பற்றி 1 தீமோத்தேயு 3:1!7 வாக்கியங்களிலும் தீத்து 1:7!9 வாக்கியங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அப்பேற்பட்ட பிஷப்புகள் ஆதிகால சபையிலுள்ள ஆரோக்கியமான உபதேசத்தைப்பற்றிக் கொள்பவர்களாக இருந்தார்கள். தீத்து 1:8.

*ஆர்ச் பிஷப்புகள்:* பிஷப்புகளாக இருந்தவர்கள் சிலருக்கு இன்னும் சில கூடுதல் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது. தீமோத்தேயுவைவிட தீத்து கொஞ்சம் அதிகம் அதிகாரமுடையவராக இருந்ததால், ஆர்ச்சு பிஷப்பாக அவரைக் கருதலாம்.

கொரிந்து சபையார் தீத்துவின் மூன்றாம் சந்திப்பில் தீத்துவை பயத்தோடும் நடுக்கத்தோடும் ஏற்றுக்கொண்டு கட்டளைக்கு அமைந்து இருந்தார்கள் என்று 2 கொரி 7:15ல் நாம் வாசிக்கிறோம். தீத்து 1: 5ல் மீண்டும் நாம்பார்ப்பது என்னவென்றால் பட்டணங்கள் தோறும் மூப்பர்களை நியமிப்பது மட்டுமல்ல. குறைவாயிருக்கிறவர்களை ஒழுங்குபடுத்தும்படிக்கும் தீத்துவிற்கு பரி. பவுல் கட்டளையிட்டார்.

91 பிஷப்புகளை அபிஷேகம் செய்யும்பொழுது ஒருவர் கை வைத்து மட்டுமல்ல, மற்ற மூப்பர்களும் தங்கள் கைகளை வைத்தார்கள் என்று நாம் பார்க்கிறோம். உதாரணமாய் பரி. தீமோத்தேயுவிற்கு பரி. பவுல் கைவைத்ததுமல்லாமல் மூப்பரும் கை வைத்தார்கள் என்று 2 தீமோத்தேயு 1: 6லும் 1 தீமோத்தேயு 4:14 லிலும் நாம் தெளிவாய்க் காண்கிறோம். பன்னிரண்டு அப்போஸ் தலர்கள் மட்டுமல்லாமல் வேறு அப்போஸ்தலர்களையும் சபை தேர்ந்து எடுத்தது என்றும் வாசிக்கிறோம். உதாரணமாக பரி. பவுலின் இனத்தாராகிய அன்றோனிக்கையும், யூனியாவையும் அப்போஸ் தலராய்த் தேர்ந்தெடுத்தார்கள் என்று ரோமர் 16:7ல் வாசிக்கிறோம். அப்போஸ்தலராக பர்னபாவும் பவுலும் இருந்தார்கள் என்று அப். 14:14ல் வாசிக்கிறோம். கர்த்தருடைய சகோதரனும் எருசலேம் சபையின் பிஷப்புமாக இருந்த பரி.யாக்கோபுவை அப்போஸ்தலர் பட்டியலில் சேர்த்தனர். காலத்தியார் 1: 19.

ஆதிச்சபைக் கூட்டம் எருசலேமில் யேசுவின் சகோதரனாகிய யாக்கோவின் தலைமையில் கூடியது என்று அப்போஸ்தலர் 15ம் அத்தியாயத்தில் வாசிக்கிறோம். அதன் பிறகு சகல கிறிஸ்து சபைகளை அங்கீகரித்து அநேக சினாடுகள் கூடியது உண்டு. மற்ற சபைகள் எல்லாம் தலைமைச் சபையாகிய எருசலேம் சபைக்கு ஆதரவு அளித்தது. அப்.8:14 ;சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவரிடத்திற்கு அனுப்பினார்கள்;

ஆரோனுடைய கோல் இன்னும் துளிர்த்துக்கொண்டே இருக்கிறது.

பெலிஸ்தர் அபகரித்து கொண்டு போன உடன்படிக்கைப் பெட்டி தாகோனுடை சிலையின் முன் கொண்டு வைக்கப்பட்டது. பெலிஸ் தரின் தேவன் எப்பொழுதும் பெட்டிக்கு எதிராக கவிழ்ந்து கிடந்தது. அதைத் திருப்பி சீலோவாவில் சேர்க்கும்வரை தெய்வம் தன் பெட்டியினிமித்தம் பெலிஸ்தருடன் போராடியது. அதைத் திருப்பி கொடுக்கும்வரை யெகோவாவின் கை அவர்கள் மேல் பாரமாயிற்று என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த உடன்படிக்கைப் பெட்டி கிறிஸ்துவைக் குறிப்பதாக

 பூர்வ பிதாக்கள் நம்பினார்கள். அது மரத்தால் உண்டாகி பொன்னால் பூசப்பட்டிருந்தது. மரம் கிறிஸ்துவின் மனுஷ தத்துவத்தையும், பொன் தெய்வத்தத்துவத்தை யும் வெளிப்படுத்துகிறது.

இந்தப் பெட்டியின் மேல் உள்ள கிருபாசனத்தில் பலியிடப்பட்ட மிருகத்தின் இரத்தம் 7 முறை தெளிக்கப்பட்டதாக பார்க்கிறோம். இது கிறிஸ்துவினுடைய பாவ நிவாரண பலியின் முன்னோடியாயிருந்தது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்திரத்தில் வாக்குத்தத்தம் பண்ணின கானான் பூமியில் பிரவேசிக்கு முன்பு யோர்தான் நதியைக் கடக்கவேண்டி இருந்தது.

யோசுவா 3 : 13-17. யோசுவாவிடம் யேகோவா கூறியதுபோல கர்த்தருடைய பெட்டியைச் சுமக்கிற ஆசாரியார்களின் உள்ளங்கால்கள் யோர்தான் தண்ணீரில்பட்ட மாத்திரத்திலே யோர்தானின் தண்ணீர் ஓடாமல் பிரிந்து நின்றது. இஸ்ரவேலர் எல்லாம் தண்ணீரற்று உலர்ந்த தரை வழியாக கடந்து போனார்கள். நமக்கு வாக்குத்தத்தம் பண்ணின நம்முடைய பரமகானானுக்கு நாம் சேரும் வரை நம் ரட்சகர் நம்மோடுகூட இருப்பார். மரண யோர்தான் நதி தீரத்து எதிரே வந்து அவர் நம்மை எதிர்நோக்குவார். யோர்தான் வெள்ளம் நம்மை மூழ்காவண்ணம் நம்முடைய ரட்சகர் இரட்சிக்கும் உடன்படிக்கைப் பெட்டி நம்மிடம்கூட உண்டு. பெட்டியைப்பற்றி பொதுவாகக் கூறினால் தெய்வத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட நோவாவும், அவன் குடும்பமும் ஒரு பெட்டியாகிய பேழையின் மூ லமாக ரட்சிக்கப்பட்டதாக பார்க்கிறோம். இஸ்ரவேல் ஜனங்களை நடத்தும் பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்ட குழந்தை அந்த ஆழமான நீல நதியில் காப்பாற்றப்பட்டது ஒரு பெட்டியின் மூலமாக என்று நாம் பார்க்கிறோம்.

இந்த உடன்படிக்கைப் பெட்டி பழைய ஏற்பாட்டின் ஏதோ ஒரு கதை என்று நாம் நினைக்க வேண்டாம். இது இஸ்ரவேலருக்கு மட்டும் ஆதியில் கொடுக்கப்பட்டதும் கடைசியாய் தேவன் நமக்காக அதை ஏற்படுத்தியும் வைத்திருக்கிறார்.

வெளி 11:19. *அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. அவருடைய ஆலயத்திலே அவருடைய*

93 *உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது.*

இஸ்ரவேலர் தங்கள் ஜீவனைக் காட்டிலும் விலை மதித்த உடன்படிக்கைப் பெட்டியைப் போல வேத புத்தகத்தை நாமும் விலை மதிக்க வேண்டும். அவருடைய திவ்விய வாக்குத்தத்தங்களை நாம் முழுவதுமாய் விசுவாசிக்க வேண்டும். அவருடைய கற்பனைகளை முழுதுமாய் கைக்கொண்டு கீழ்ப்படிய வேண்டும்.

ஆரோனைப்போல தெரிந்தெடுக்கப்பட்டவரும் நம்மை நடத்துகிறவருமாகிய தேவனுடைய திவ்விய தாசர்களை நாம் மதித்து நடக்க வேண்டும். கடைசியாக நம்முடைய அருமைநாதரின் நித்திய ரட்சிப்பாகிய அந்தப் பெட்டியில் நாம் ஒவ்வொருவரும் பிரவேசித்து அதை சுதந்தரித்துக் கொள்ளவும் தேவன் நம்மை நடத்தட்டும்.

# ஆசிரியரை பற்றி



திரு. சுஜித் அவர்கள் தென்காசி மாவட்டம், மேற்கு திருநெல்வேலி என்ற நல்லூரை சேர்ந்தவர். இவருடைய தகப்பனார் திரு.S. செல்வராஜ், தாயார் திருமதி. ரஜினி செல்வராஜ் அவர்கள். பள்ளிப் படிப்பை நல்லூர் மேற்கு திருநெல்வேலி மேல்நிலைப் பள்ளியிலும், வணிகவியல் இளங்கலை பட்டப்படிப்பை அழகப்பா பல்கலைக்கழகத்திலும், சமூகப் பணியில் முதுநிலைப் பட்டமும், மேலாண்மை கணக்காளர் படிப்பில் இடைநிலை படிப்பையும் மற்றும் பெத்தேல் இறையியல் கல்லூரியில் 2022 ஆம் ஆண்டு இறையியல் (B.D) படிப்பையும் பயின்றுள்ளார். தென்னிந்திய திருச்சபை திருநெல்வேலி திருமண்டலத்தில் 2022 ஆம் ஆண்டு முதல் உபதேசியாராகவும் ஊழியம் செய்து வருகின்றார். பராபரனின் பெரிதான கிருபையினால் தற்சமயம் தென்காசி மாவட்டம், தென்காசி வடக்கு சீயோன் திருச்சபையின் கிளை சபையான இடைகால் திருச்சபையில் பணி செய்து வருகின்றார். திருச்சபை வரலாற்றுப் பணிகளிலும், கள ஆய்வுப் பணிகளிலும், வரலாற்றுச் சங்க மாத இதழிலும் கட்டுரைகளை எழுதி வருகின்றார். திருச்சபை வரலாறுகளைப் பற்றி அடிக்கடி சபைகளிலும் பேசி வருவது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவ அரசியல் எனும் புத்தகத்தை அவர் எழுதியுள்ளார். தற்போது அவருடைய முயற்சியில் இரண்டாம் புத்தகமாக இது வருவதன் மூலம் பராபரனின் நாமம் மகிமைப்படுவதாக.